விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 25 சனிக்கிழமை (09.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 203

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே


## நான் ஜனாதிபதியாக இருக்கும் வரை
# சர்வதேச விசாரணைக்கு இடமளிக்க மாட்டேன்!



(கொழும்பு)

சர்வதேச நீதிமன்றத்திற்கோ, நீதிபதிக்கோ அல்லது வேறு எந்த நிறுவனத்திற்கோ இலங்கையின் உள்விவகாரங்களிலும் நீதித் துறையிலும் தான் ஜனாதிபதியாக இருக்கும் வரை தலையிட இடமளிக்கப்போவதில்லை என மைத்திரிபால சிறிசேன மீண்டும் அறிவித்துள்ளார்.

(23-ம் பக்.)



இணுவிலில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஞானலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நாளை செந்தமிழால் திருக்குடமுழுக்கு நடைபெற்று பிரதிஷ்டை செய்யப்படவுள்ள சிவலிங்கத்தை படத்தில் காணலாம். இராவணேஸ்வரன் தாங்கியுள்ள இச்சிவலிங்கத்தை அடியவர்கள் நேரில் தரிசித்து மலர் தூவி வழிபட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைப்பதாக முடிபு!

(யாழ்ப்பாணம்)

இழுபறி நிலையை ஏற்படுத்தியுள்ள பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையிலேயே அமைப்பதென நேற்று கொழும்பில் நடைபெற்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் உயர்மட்ட கூட்டத்தில் முடிவு செய்யப்படுள்ளது.

இந்த முடிவினை இறுதி செய்யுமுகமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உயர் மட்ட குழு ஒன்று ஓமந்தைக்கு பயணம் செய்து, நிலைமைகளை ஆராய்ந்து இறுதி முடிவொன்றினை எடுக்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கிற்கான பொருளாதார மத்திய நிலையம் ஒன்றினை அமைப்ப

23ஆம் பக்கம் பார்க்க....

## கலப்பு நீதிமன்றம் ஏற்க முடியாது!

(கொழும்பு)

போர்க்குற்ற விசாரணையின் போது ஹயப்பிரிற் என்ற கலப்பு நீதி மன்றத்தை ஸ்தாபிக்குமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை கேட்டுக்கொண்ட போதிலும், அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதற்கான உரிய காரணங்களை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜ

23ஆம் பக்கம் பார்க்க....

## "இராணுவத்தினர் சுட்டனர்"

(திருகோணமலை)

சம்பவம் நடந்த அன்று நான் கடைக்கு வெங்காயம் வாங்கச் சென்றேன். இதன்போது வீதியால் வந்த இராணுவத்தினர் சுடத் தொடங்கினர். அங்கு நின்ற பலருடன் உடனே அந்தக் கடைக்குள் புகுந்து விட்டோம். இராணுவ வீரர்களில் ஒருவர், என்னை வெளியே வருமாறு அழைத்து தப்பி ஓடுமாறு கூறினார் என ஒன்பதாவது நாளாக சாட்சியமளித்த குமாரபுரத்தைச் சேர்ந்த 49 வயதுடய லெட்சுமி

24ஆம் பக்கம் பார்க்க....

## காய்ச்சல் பீடிப்புக்குள்ளான 10 வயதுச் சிறுமி மரணம்

(கரணவாய்)

காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்து வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்ட சிறுமி ஒருவர் வைத்தியசாலை வாசலிலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இடம் பெற்றுள்ளது.

இதில் நக்கீரன், அல்வாய் வடக்

24ஆம் பக்கம் பார்க்க....

## பேருந்து - மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் பலி!





(கரணவாய்)

வடமராட்சி பருத்தித்துறை ஏழாம் கட்டைச் சந்திக்கு அருகாமையில்

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.போதனாவில் தாதியர்கள் மேற்கொண்ட வேலைநிறுத்த போராட்டம் கைவிடப்பட்டது

### யாழ்.மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தாதியர் சங்கத்தினரால் நேற்றைய தினம் மேற்கொள்ளவிருந்த வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு யாழ். மேல் நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்ததையடுத்து தாதியர் சங்கத்தின் வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

இரண்டு வார காலத்திற்குச் செலலுபடியாகும் வகையில் விடுக்கப்பட்டுள்ள இந்தத் இடைக்கால தடை உத்தரவு தொடர்பில் தாதியர் சங்கத்தினர் தமது பக்க நியாயங்களை எடுத்துரைப்பதற்கும் நீதிமன்றம் சந்தர்ப்பம் அளித்து இந்த வழக்கை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது.

சர்வதேச சிவில் அரசியல் மாநாட்டு மனித உரிமைகள் சட்டம் தொடர்பில் இலங்கை பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்டுள்ள சட்டத்தின் அடிப்படையிலும், உறுதிகேள் எழுத்தாணை பிரிவின் அடிப்படையிலும் தாதியர் சங்கத்தின் வேலை நிறுத்தத்தைத் தடைசெய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட

23ஆம் பக்கம் பார்க்க....

## சிறுவர், பெண்கள் பாதுகாப்புக்கென 1,500 பொலிஸார் நியமிக்கப்படுவர்

### யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தகவல்



24ஆம் பக்கம் பார்க்க....

## நிழல் அமைச்சரவை நியமனம்; உள ரீதியான பிரச்சினை - ஐ.தே.க

(கொழும்பு)

கடந்த ஆட்சிக் காலத்தில் அமைச்சுப் பதவிகளைப் பெற்று நன்றாக உண்டு, பருகி இருந்தமையால், அதன் கஷ்டத்தை இப்போது உணர்ந்த நிலையில், மனதை தேற்ற, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரால நிழல் அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தவில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

நிழல் அமைச்சரவை அவர்களது உளரீதியான பிரச்சினையே எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பெறுமதி சேர் வரி குறித்து இங்கு கருத்து வெளியி

24ஆம் பக்கம் பார்க்க....


க.பொ.த (உ/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
இணைந்த கணிதம் -பகுதி - II
பௌதிகவியல் -பகுதி - I



உள்ளே...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 1 ஆம் ஆண்டு நினைவு



## சின்னையா கனகராசா
(வாணி உணவக ஸ்தாபகர்)

பிறப்பு :- 1944.06.25 இறப்பு - 2015.06.21
திதி - பஞ்சமி

உதிரத்தால் உருவாக்கி உயிர் வாழ அமுதூட்டி
எதிலுமே வென்றிட அகரமதைத் தந்தாயே
முதிர்வான வேளையிலும் மதியுரைக்கும் தெய்வமே
மதியகன்று ஓராண்டு மறைந்தாலும் மறவோமே...

*21.06.2015* அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு நினைவு *09.07.2016* இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்**

விசுவமடு மேற்கு,
விசுவமடு.

பிரிவால் துயருறும்
வாணி குடும்பத்தினர்

(C-5146)

# பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க தொடர்ந்து கடைசி இரு தினங்கள் மட்டும்.
# சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்
## (9ஆம் திகதி 10ஆம் திகதி ஜூலை 2016)
## முற்பகல் 10.00 மணிமுதல் இரவு 8.00 வரை

யாழ்ப்பாணப் பெண்களுக்கு பொற்காலம் பிறந்திருக்கு இரண்டு நாள்களில் தங்கமுலாம் பூசப்பட்ட ஜெய்புரி குந்தன், மும்பாய் கிறிஸ்டல் ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கன் டயமண்ட் ஜுவலரிகளை நம்பமுடியாத விலைகளில் கொள்வனவு செய்ய பொன்னான வாய்ப்பு

## 100/=, 200/=, 300/= வில்

(5173)

ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட டிசைன்களில் உங்களுக்கு பிடித்த டிசைன்களை தெரிவு செய்து 100/=,200/=,300/= ஐ செலுத்துங்கள்

**இந்த விளம்பரத்தில் எல்லா டிசைன்களையும் குறிப்பிட இடமில்லை சில ஆபரணங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.**

விசேட சலுகை : விவாக சடங்குகள் மற்றும் வைபவங்களுக்கு ரூ.500/= ரூ. 5000/= வரை விசேட ஆபரணங்கள்

- கொரியன் ஸ்டேன் ஸ்டட்ஸ் ரூ.100/= Only
- கோல்ட் கவரிங் செயின் பெண்டன்ட் ரூ.100/= Only
- ஆஸ்திரேலிய டயமண்ட் மோதிரம் ரூ.100/= Only
- வெஸ்டன் ஸ்டைல் இயரிங் ரூ.100/= Only
- அமெரிக்கன் டயமண்ட் காதணி ரூ.100/= Only
- கோல்ட் கவரிங் ஆண்கள் மோதிரம் ரூ.200/= Only
- ஆண்கள் லொக்கட் செயின் ரூ.200/= Only
- கொரியன் ஸ்டோன் சாரி பின் ரூ.300/= Only
- ஆஸ்திரேலியன் டயமண்ட் நெக்லஸ் செட் ரூ.300/= Only
- கோல்ட் பிளேட் வலையல் செட் ரூ.300/= Only
- கோல்ட் பிளேடட் செயின் ரூ.300/= Only
- ஆஸ்திரேலியன் டயமண்ட் ஆண்கள் மோதிரம் ரூ.300/= Only
- ஆஸ்திரேலியன் டயமண்ட் பிரேஸ்லட் ரூ.300/= Only
- சில்வர் பிளேட் கால் கொலுசு ரூ.300/= Only

இடம் : மயிலூரான் திருமண மண்டபம் (நல்லூர் முருகன் கோவில் அருகில்) / இலக்கம் 590/5, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

**அனுமதி இலவசம்** **தொ: 0776047788** **விற்பனை பெண் பிரதிநிதிகள் தேவை**

# நிழல் பிரதமர் பதவியிலிருந்து விலக மகிந்த ராஜபக்ஷ முடிவு

கூட்டு எதிர்க்கட்சி நியமித்துள்ள நிழல் அமைச்சரவையின் பிரதமர் மற்றும் ஏனைய அமைச்சு பொறுப்புக்களில் இருந்து மகிந்த ராஜபக்ஷ விலக தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


இது குறித்து தனக்கு எதுவும் தெரியாது எனவும் தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சுக்களை கண்காணிப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமிக்குமாறு மாத்திரமே தான் ஆலோசனை வழங்கியதாக மகிந்தராஜபக்ஷ கூறியுள்ளார்.

இதேவேளை கூட்டு எதிர்க்கட்சியின் நிழல் அமைச்சரவையின் நகர நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சராக பெயரிடப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்த தன்னை அதில் இருந்து நீக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவுக்கு அறிவித்துள்ளார்.

நிழல் அமைச்சரவை குறித்து ஊடகங்களில் செய்திகள் வெளியாகும் வரை தான் அதுபற்றி அறிந்திருக்கவில்லை எனவும் அதுபற்றி தனக்கு எவரும் அறிவிக்கவில்லை எனவும் எதுவும் தெரியாது என்பதால், தன்னை அதில் இருந்து நீக்குமாறும் லொஹான் ரத்வத்த கூறியுள்ளார்.

எதிர்க்கட்சி தலைவரையே நிழல் அமைச்சரவையின் அடுத்த பிரதமர் என கருதுவதே நாடாளுமன்ற சம்பிரதாயமாகும். எனினும் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த மகிந்த ராஜபக்ஷவை நிழல் பிரதமராக நியமித்துள்ளனர்.

இதனை அறிந்தே மகிந்த ராஜபக்ஷ நிழல் அமைச்சரவையின் பொறுப்புகளில் இருந்து விலக தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது. (இ-7-10)




(கேலிச்சித்திரம்)

# சமஷ்டியையே வடக்கு மக்கள் கோருகின்றனர்

## தென்னிலங்கைக்கு வடக்கு வலியுறுத்தல்

(கொழும்பு)

***இணைந்த வடக்குக் கிழக்கில் சமஷ்டி முறையிலான அரசியல் அமைப்பு மாற்றத்தினையே வடக்கு மாகாண மக்கள் கோரி நிற்கின்றனர் என முதலமைச்சர், நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் சார்பில் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசியல் அமைப்பு பேரவையின் வழிநடத்தல் குழுவின் முன் பிரசன்னமாகியிருந்த கல்வி அமைச்சர் த. குருகுலராஜா மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் சி. தவராசா ஆகியோரால் வலியுறுத்தப்பட்டது.***


வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். சுகவீனம் காரணமாக பிரசன்னமாக முடியாத நிலையில் அவரின் சார்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும் குறித்த குழுவின் முன் பிரசன்னமாகி மாகாண சபையினால் தயாரிக்கப்பட்ட அரசியல் அமைப்பு மாற்றத்திற்கான முன்மொழிவு தொடர்பான வாய்மூல விளக்கம் கொடுத்திருந்தனர்.

**கடந்த கால கசப்பான அரசியல் தொடர்பாக, 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தின் அனுபவங்கள் என்பவற்றின் அடிப்படையிலும் மற்றும் எண்ணிக்கையில் பெரும்பான்மை என்பதற்காக ஓர் இனம் மற்றைய இனத்தை ஆதிக்கம் செலுத்தவோ, கீழ்ப்படிய வைக்கவோ முடியாத வகையில் அரசியல் அமைப்பு மாற்றம் அமைய வேண்டும் என்பதனைக் கருத்திற் கொண்டே மாகாண சபையின் வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் அக் குழுவிற்கு எடுத்துரைக்கப்பட்டது.**

மேலும் இறைமை பகிரப்பட்ட, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்கலான சமஷ்டி முறை யிலான அரசியலமைப்பே தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யுமென்றும் எடுத்துக் கூறப்பட்டது.

**அத்துடன் இணைந்த வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் கரிசனைகளை உள்ளடக்கியதான ஓர் தீர்வினையே தாம் பரிந்துரைப்பதாகவும் எடுத்துக்கூறப்பட்டது.**

வடக்கு மாகாண சபையின் இரு சிங்கள உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய 36 உறுப்பினர்களாலும் இம் முன்மொழிவு ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டதெனவும் அக் குழுவிற்கு சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே வடக்கு மாகாண மக்களின் ஏகோபித்த கருத்தை அரசு கருத்திலெடுத்து உறுதியான புதிய அரசியல் அமைப்பு மாற்றத்தினைக் கொண்டுவரவேண்டுமென்று மேலும் கோரப்பட்டுள்ளது என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆகியோர் இணைந்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# அமைச்சர்கள் வெளிநாடு செல்ல ஜனாதிபதி மைத்திரி தடைவிதிப்பு



ஒரு மாத காலத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

மேலும், பொதுமக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவே இந்த அறிவிப்பு ஜனாதிபதியால் நேற்று விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் வற்வரி அதிகரிப்பு மற்றும் பல விடயங்களுக்காக மக்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில், அதற்கு முகங்கொடுக்க வேண்டிய அமைச்சர்கள்,பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு செல்வது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று எனவும், பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு அமைச்சர் உள்ளிட்டவர்கள் தயாராக இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (இ-7-10)

# சஜின்வாஸிற்கு நேற்றுப் பிணை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் சஜின்வாஸ் குணவர்த்தனவிற்கு நேற்று பிணை வழங்கப்பட்டுள்ளது.

61 கோடி ரூபாய் முறைகேடான சொத்து சேகரிப்பு சம்பந்தமாக இவர் சிறைத் தண்டனைப் பெற்று வந்த நிலையில் இவரை கொழும்பு மேலதிக நீதவான் கிஹான்பிலபிட்டிய பிணையில் விடுவித்தார்.

மேலும் 5 இலட்சம் ரொக்கப்பிணையிலும், 50 இலட்சம் சரீரப் பிணை நான்கிலும் இவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (இ-7-10)

# மங்களவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும்

## ஜனாதிபதிக்கு கூட்டு எதிர்க்கட்சி கடிதம்

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென கூட்டு எதிர்க் கட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதமெழுதியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கருத்தை சர்வதேசத்தில் சவாலுக்குட்படுத்தும் வகையில் செயற்பட்டமையானது மங்கள சமரவீர வெளிவிவகார அமைச்சுப்பதவிக்கு தகுதியற்றவர் என்பதை வெளிப்படுத்துகின்றது.

எனவே அவருக்கு எதிராக ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டுமென கூட்டு எதிர்க்கட்சி ஜனாதிபதிக்கு கடிதமெழுதியுள்ளது.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7-10)

# மகிந்த-மக்களால் புறக்கணிக்கப்பட்ட ஒருவரை மீண்டும் தெரிவு செய்துள்ளார்

## நிழல் அமைச்சரவையை விமர்சிக்கிறார் டிலான்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிந்தோ தெரியாமலோ மக்களால் புறக்கணிக்கப்பட்ட ஒருவரை மீண்டும் கட்சியில் பொறுப்பான பதவிக்கு தெரிவு செய்துள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் நிழல் அமைச்சரவை குறித்து கருத்து தெரிவித்த அவர் இதனை கூறியுள்ளார்.

அந்த வகையில் கூட்டு எதிர்க் கட்சியினர் நயவஞ்சகத்தனமான ஒரு போக்கையே கையாள்வதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், ஸ்ரீலங்கா கட்சியை பிளவுபடுத்துவதற்கு மேற்கொள்ளும் மற்றுமொரு சதி நடவடிக்கையே இந்நிழல் அமைச்சரவைக்கான நடவடிக்கை -என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## ஏல விற்பனை

யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தில் 2016.07.25 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு பாவிக்கப்பட்ட மாணவர் மேசைகளும் கதிரைகளும் மற்றும் இதரபாவனைப் பொருட்களும் ஏல விற்பனைக்கு விடப்படும்.

– அதிபர்

(5167)

# கப்பல் கொள்வனவிலும் மகிந்த ஆட்சியில் மோசடி

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் பல மில்லியன் செலவில் கப்பல்கள் இரண்டு கொள்வனவு செய்யப்பட்டதாகவும், அவை பழைய கப்பல்கள் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜயமஹ தெரிவித்தார்.

பொலிஸ்நிதி குற்ற விசாரணைப் பிரிவில் நேற்று முறைப்பாடு ஒன்றை பதிவு செய்வதற்காக வருகைத்தந்த போதே இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், புதிய கப்பல்களை வாங்குவதாக கூறி அந்த தொகையில் பழைய கப்பல்களை வாங்கியதாகவும், குறித்த கப்பல்களின் பதிவு நடவடிக்கைகளின்போதே இந்த மோசடி விடயம் தெரியவந்ததாகவும் நளின் குறிப்பிட்டார்.

மேலும், இதற்கு ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாகவும், கடந்த அரசாங்கத்தில் செய்யப்பட்ட பண மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை செய்ய வேண்டும் என்றே முறைப்பாட்டை பதிவு செய்திருப்பதாக ஊடகங்களுக்கு நளின் பண்டார தெரிவித்தார். (செ-11)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை.
## ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

வட்டாரம் :- 09
ஆதன இலக்கம்:-190 (புதிய இலக்கம்)
பிப்பிலி வீதி
கிராம சேவையாளர் பிரிவு :- J/134 நவாலி வடக்கு

வட்டாரம் 09, பிப்பிலி வீதி, ஆதன இலக்கம் 190 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு பகுதி, சண்டிலிப்பாய் கோவிற்பற்று நவாலியிறை "நளவகுடியிருப்பு வளவு" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குளி 3.80 கொண்ட இவ்வாதனமானது மாளிகாவத்தை, சங்கானையைச் சேர்ந்த செல்லையா சிதம்பரப்பிள்ளை கைம்பெண் கமலாம்பாள் ஆகிய இவர்களால் நவாலி வடக்கைச் சேர்ந்த சின்னத்துரை தில்லையம்பலம் பெண் சாந்தி என்பவருக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.வே.த.மு.கதிர்காமநாதன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 15701 ஆம் இலக்க 21.04.2016 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தமென தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.ஏ.கமலசேகரம் அவர்களால் வரையப்பட்ட 6524 ஆம் இலக்க 2015.08.14 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது "நளவகுடியிருப்பு வளவு" நிலப்பரப்பு 01 குளி 3.80 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து குறித்த ஆதனமானது சின்னத்துரை தில்லையம்பலம் பெண் சாந்தி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(5162)

## துயர் பகிர்கின்றோம்



எமது லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர்களான திருமதி **ராஜமனோகரி சின்னராசா** அவர்களின் தாயாரும் **திரு.சின்னராசா** (மக்கள் வங்கி பிரதி முகாமையாளர் தலைமை அலுவலகம்) அவர்களின் மாமியாருமாகிய திருமதி **பரமேஸ்வரி காலிங்கராசா** அவர்கள் 06.07.2016ல் மறைவினால் துயர் உற்று இருக்கும், குடும்பத்தினருடன் துயர் பகிர்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

லயன்ஸ் கழகம்
இணுவில்

(5172)

# முக்கிய அறிவித்தல்

நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலய உரிமை, நிர்வாகம், திருப்பணிச் சபையின் தொடர் நிர்வாகம் சம்பந்தமான முக்கிய கூட்டம் எதிர்வரும் 24.07.2016ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெறும். அன்று மேற்படி ஆலய உரிமைக்காரர் எவராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் மேற்படி கூட்டத்தில் வெளிப்படுமாறு கேட்டுக் கொள்கின்றோம். மேலும் ஆலய எதிர்கால வளர்ச்சி, நிர்வாகக் கட்டமைப்பு பற்றி கலந்துரையாடி நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட உள்ளதால் அக்கறை உள்ளவர்கள் மேற்படி கூட்டத்தில் பங்கு பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**திருப்பணிச்சபை,**
**நவாலி க.க.அம்மன் ஆலயம்,**
**நவாலி.**

(C-5150)

# மரண அறிவித்தல்

## சண்முகம் நாகராசா



கூத்தாதோட்டம் வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் விநாயகர் வீதி, அல்வாய் தெற்கு அல்வாயை (ஒடை) வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் நாகராசா நேற்று (08.07.2016) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - பறுவதம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரமு - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னபூரணத்தின் பாசமிகு கணவரும் நந்திகா (ஆசிரியை - யா/நாகர்கோவில் மகா வித்தியாலயம்), பிரதாப் (அபிவிருத்தி உத்தியோகத்தர்-யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஜெகபிரகாஷ் (*Quantity Surveyor-Qatar*) ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்ததாசன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்-வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி), சோபிகா (ஆசிரியை-யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சாகித்தியன், தசரத் (யா/ஹாட்லிக் கல்லூரி), கிஷாங்னா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம், அருளம்பலம், சுப்பிரமணியம் மற்றும் சின்னப்பிள்ளை, இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நடராசா, இரத்தினகோபால் மற்றும் இராசமணி, தங்கவேலாயுதம், சுந்தரலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.07.2016 (ஞாயிற்றுக்கிழமை) மு.ப 8 மணியளவில் ஆரம்பமாகி மு.ப 9.00 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விநாயகர் வீதி,
அல்வாய் தெற்கு, அல்வாய்.

(C-5149)

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே.இல.0212262943


## ஓராம் வருட நினைவு நாள்



(திவசநாள்) 09.07.2016 சனிக்கிழமை
எமது இதய தெய்வங்களான
**சபாபதி தம்பிராசா,**
**தம்பிராசா அரும்பொருள்**
ஆகிய இரு தெய்வங்களையும் நினைவு கூர்ந்து அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போமாக.

குஞ்சர் வளவு,
நவிண்டில்,
கரணவாய் மத்தி, கரவெட்டி.

– குடும்பத்தினர்



இன்று 09.07.2016 சுழிபுரம் - பறாளாய்

# ஈசுர விநாயகரின் தேர்த்திருவிழா

நேரம் – முற்பகல் 11.45 மணியளவில்

சோழியூரான் - பிறைசூடிக்குரு

# நீங்காத நினைவுகளில்
# 45ம் நாள் நினைவுடன்

## தர்மகுலசிங்கம்
## துஷியந்தி (துஷி)



அன்னை மடியில்
19.02.1982

ஆண்டவன் மடியில்
26.05.2016

நேசிக்க நீ இல்லாத போது
யோசிக்க வைக்கிறது வாழ்க்கை
எல்லா அசைவுகளுக்கும் அர்த்தம் பொதித்த அகராதியே
இன்று நீ எம்முடன் இல்லையம்மா- துஷி

அன்பு கிடைத்தவர்களுக்கு தெரியாது
கிடைக்காதவர்களுக்கு புரியாது- ஆனால்
தொலைத்தவர்களுக்குத் தான் தெரியும் அதன் அருமையம்மா

துஷியந்தியே ஏன் இவ்வளவு அவசரம்
உறக்கம் கலையும் நேரம்- என்
நினைவில் வரும் முகம் நீதான்- துஷி
உறங்கும் போதும் என் கனவில் வருவதும் நீதான்

ஆறுதலாய் ஓர் உணர்வு ஆழ் மனதில் உதயம்
அன்புக்கு மட்டும் இங்கே இத்தனை வலிமை
அதை நான் உணர்ந்தது உன்னிடத்தில் தான் – துஷி
இன்று அந்த அன்பு முகத்தை தேடுகின்றேன் கதறுகின்றேன்

இன்று நீ இல்லையே நீங்களோ வருவதாய் தெரியவில்லை
பதில் தருவதாயும் தெரியவில்லை வரமாட்டீர்கள் என்று தெரிந்தும்
ஏங்கி ஏங்கி தேடுதே என் மனம்

நீர் அடித்து நீர் என்றும் விலகாது
எம் நெஞ்சை விட்டு- என்றும்
உன் நினைவு அகலாது- என்றும்
உன் நினைவுகளுடன்...

**தர்ஷா**
**சவுண்ஸ்**
**V.H.லேன்,**
**இருபாலை,**
**கோப்பாய்.**

(5144)

# போதைப்பொருள் பாவனையை ஒழிக்க வலியுறுத்தி கோப்பாயில் கவனயீர்ப்பு பேரணியும் வீதி நாடகமும்




படங்கள்:- பொ.சோபிகா












(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள் பாவனையை ஒழிக்க வலியுறுத்தி யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி ஆசிரிய மாணவர்களால் கவனயீர்ப்பு பேரணியும் வீதி நாடகமும் நேற்றைய தினம் கோப் பாயில் நடைபெற்றது.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கவனயீர்ப்பு பேரணி கோப்பாயில் அமைந்துள்ள தேசிய கல்வியியற் கல்லூரி முன்றலில் ஆரம்பித்து இராஜவீதி ஊடாகச் சென்று மானிப்பாய் வீதி வழியாக கோப்பாய் சந்தி வரை சென்றடைந்தது.

அங்கு போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு நாடகம் ஒன்றும் மாணவர்களால் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# தீர்வுகளை பலாத்காரமாக நல்லாட்சி அரசு திணிக்காது

## அமைச்சர் ராஜித யாழில் தெரிவிப்பு



நல்லாட்சி அரசு எந்தவிதமான பிரச்சினைகளையும் தீர்வுகளையும் பலாத்காரமாக மக்கள் மீது திணிக்க முயற்சிக்கமாட்டாது என சுகாதார அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

நச்சுத்தன்மையற்ற மருந்துகள் பற்றிய அரச பொறிமுறையினை அறிவூட்டும் மாவட்ட வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு சுகாதார அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரட்ன தலைமையில் நேற்று முன்தினம் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த காலத்தில் வடகிழக்கு மக்களுடன் இணைந்து நல்லாட்சி அமைக்க பலமுறை செயற்பட்டோம். ஆனால் சமாதான நடவடிக்கைகள் சீர்குலைக்கப்பட்ட பின்னர் பாரிய யுத்தத்தை எதிர்கொண்டு தற்போது சமாதானசூழ்நிலையில்உள்ளோம்.

30 வருட காலத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதே எமது நோககம். கடந்த காலங்களில் நிலவி வந்த அரசியல் அமைப்புக்களை மாற்றி அமைத்து நல்லாட்சிஒன்றைஅமைக்கவேணடும் என்ற நோக்கில் தான் இந்த அரசை அமைத்தோம்.

தற்போது எமது நாட்டில் இன வாதம்,மொழிவாதம், சமய வேறுபாடுகள் அனைத்தையும் களைந்தது ஆகும். நாங்கள் அனைவரும் ஒன்று கூடி ஒரே இடத்தில் இருந்து கதைத்து ஒரு பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண முடியும் என்ற நோக்கில் தான் இந்த அரசை நடத்துகின்றோம்.

எமது அரசில் தற்போது பிரதான விடயங்கள் குறித்து கலந்துரையாடுகிறோம். அவற்றில் ஒன்று புதிய அரசியலமைப்பு. இது நல்லாட்சி எண்ணங்களை கொண்டு அமையும். அத்துடன் தொகுதிக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள். பாதுகாப்புக்கு அடுத்தபடியாக சுகாதாரத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். மேல் மாகாணத்தை விட வடக்கிற்கே பாரிய நிதியை ஒதுக்கீடு செய்துள்ளோம். வடக்கு அரசுடன் இணைந்து பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# இசைப்பேரரங்கு




அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் ஸ்ரீ ராம நாம கானாமிர்தம் இசை வேள்வி - 2016 இசைப் பேரரங்கு இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறும்.

இதில் பாட்டு மதுரை ரி.என். சேஷ கோபாலன், வயலின் - விட்டல் ராமமூர்த்தி, மிருதங்கம் - நெய்வேலி ஆர்.நாராயணன், கஞ்சிரா கே.வி. கோபாலகிருஷ்ணனும் வழங்கவுள்ளனர். ஆர்.கேதீஸ்வரன், கு.நாகதீபன் குழுவினரின் நாத அரங்கும் இடம்பெறும். இதில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந் தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்தலைமையுரையை நிகழ்த்தவுள்ளார். (இ

# இசைக்கருத்தரங்கம்



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் ஸ்ரீராமநாத கானாமிர்தம் இசைக்கருத்தரங்கம் இன்று நல்லூர் கம்பன் கோட்டத்தில் முற்பகல் 9.30 மணியளவில் இடம் பெறும். சங்கீத வித்துவான் அமரர் எஸ்.பரம்தில்லை ராஜா நினைவரங்கில் இடம் பெறும் இந்த இசை அரங்கில் சுருதி ஞானம் என்னும் பொருளில் ஸ்ரீமதி மும்பை ஜெயஸ்ரீ இசை உரையாற்றுவார். (இ-5)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதன்போது சங்கத்தின் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக ந.சிவகரன், உப தலைவர்களாக பேராசிரியர் சு.மோகனதாஸ், பேராசிரியர் என்.சண்முகலிங்கம், பொதுச்செயலாளராக எம்.சாந்தன் சத்தியகீர்த்தி, துணைச் செயலாளர்களாகத.சுகந்தன், சி.நிரோசன், பொருளாளராக மா.லீலாவிநோதன் ஆகியோரும் சங்கத்தின் கீழ் இயங்கும் கிளிநொச்சி சிறுவர் இல்லக்குழுவுக்கு (காந்தி நிலையம் - உருத்திரபுரம்) தலைவராக ஆ.வடிவேலு, உப தலைவராக கா.கார்த்திகேசு, செயலாளராக செல்வராணி சோமசேகரம்பிள்ளை, உபசெயலாளராக செ.சுப்பிரமணியம், பொருளாளராக மா.லீலாவிநோதன் ஆகியோரும் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களாகசோ.கதம்பிப்பிள்ளை, சரஸ்வதிதம்பிப்பிள்ளை, ச.கந்தவேள், க. செல்வக்குமாரன், க.ஸ்ரீபதி, நா.கிருஷ்ணபிள்ளை, க.பிரமதீஸ்வரி, ந.கணேசமூர்த்தி, கலாநிதி கே.ரி.கணேசலிங்கம், ஆ.நகுலேஸ்வரி, சி.ஜெயகணேஷன், ச.திருஞ்செந்தூரன் இரத்தினேஸ்வரி கதிர்வேலு, ரா.ஸ்ரீஆபூர்ப கிருஷ்ணன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-7)

## மஹோற்சவம்

நீர்வேலி வாய்க்காலத் தரவைப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்று 8 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. தொடர்ந்து 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திரு விழாவும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திரு விழாவும் இடம் பெறும். (இ-5-136)

# காம்யோற்சவப் பெருவிழா

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோவில் காம்யோற்சவப் பெருவிழா இன்று 9 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி 02.08.2016 செவ்வாய்க்கிழமை ஆடி அமாவாசைத் தீர்த்தத்துடன் 25 நாட்கள் தொடர்ந்து திருவிழா நடைபெறும்.

இக் காலங்களில் தினமும் முற்பகல் 10 மணிக்கு கான கதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் கந்த வேள் புராணம் பற்றி கதாப்பிரசங்கம் நடைபெறும். (இ-7)

# மலசலகூடம் அமைக்க நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

வரணி வடக்கு ஜே/339 கிராம அலுவலர் பிரிவில் வசித்து வரும் மலசல கூடம் இல்லாத வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களுக்கு தொண்டு நிறுவனம் ஒன்று மலசலகூடம் அமைப்பதற்கு ரூபா 60 ஆயிரத்தை இலவசமாக வழங்கி வருகிறது.

இவ் உதவியைப் பெறும் பயனாளிகள் சம்பந்தப்பட்ட பகுதி சுகாதார பரிசோதகரின் முன் அனுமதியைப் பெற்று கட்டட வேலைகளை முன்னெடுக்க முடியுமென தெரிவித்துள்ள அதேவேளை கட்டட வேலைகளை பொறுத்தே கட்டம் கட்டமாக பணம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையில் மடியில் 17 02 1945

ஆண்டவன் அடியில் 21 06 2015

அமரர் சலசாதேவி அரியபுத்திரன்
திதி-பஞ்சமி (09.07.2016)

அன்னை உள்ளம் அன்பு வெள்ளம்
தன்னை உருக்கி எம்மை பெருக்கி
நினது சாதனை எமக்கு போதனை
அம்மாவை நினைக்கிறோம் அம்பாளாய் நினைக்கிறோம்.

அறிவானாய் அன்பானாய் அறமானாய் அன்னையே
அருளாய் அனுபவமாய் அரவணைத்த அம்மையே
அதிமதுரமாய் அருளாய் அத்திவாரமான அமரரே
அடிப்படை அகலொளிக்கு அழுதழுது அர்ச்சிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.9,
மெமோறியல் லேன்,
மானிப்பாய்.

ஈரவிழிகளுடன்
குடும்பத்தினர்

(5131)



## நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி

Dr.S.S. சர்மா குருஜீ

076 725 6024

நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்.


## மிருக வேட்டையர்கள் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

கொடூரமான முறையில் மிருக வேட்டையில் ஈடுபட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம், இணையங்கள் மற்றும் செய்தி ஊடகங்களில் பரபரப்பாக பேசப்பட்ட 6 வேட்டைக்காரர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும், தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையிலும், தெல்தெனிய மாவட்ட நீதவான் என்.எம். பரீக்டீன் நேற்று பிணையில் விடுவித்தார். (இ-7-10)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 25<br>உயரம்: 168 cm<br>தகைமை/தொழில்:A/L அரசதொழில்<br>தொ.இ: B/6055 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா:25<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/6055 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 62 செவ் 7 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:Diploma/அரச தொழில்<br>தொ.இ: B/6059 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 62செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:Diploma/ அரசதொழில்<br>தொ.இ: B/6059 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 8 சூரிசெவ் 10 இல்<br>உயரம்:175cm<br>தகைமை/தொழில்:BSc/ பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/6060 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை கி.பா: 8 சூரிசெவ் 10 இல் உயரம்: 175cm<br>தகைமை/தொழில்:BSc/ பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/6060 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 18 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/6061 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 18செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/6061 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005,021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )





யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் (தலைமையகம்)

Reg.No: 8232

## அறிவித்தல்

### இடைக்காலப் பொதுக்கூட்டம் ஓட்டோ உரிமையாளர்க்கு

எமது சங்கத்தின் இடைக்காலப் பொதுக்கூட்டம் நாளை 10.07.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தலைவர் திரு.இ.விஜயராசா அவர்கள் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே ஓட்டோ உரிமையாளர் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

**நிகழ்ச்சிகள்**

1.இறைவணக்கம்
2.தலைமையுரை
3.செயலாளர் அறிக்கை சமர்ப்பித்தல்
4.வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தல் (2016 தை முதல் ஆனிவரை)
5.சங்கத்தின் எதிர்கால செயற்பாடுகளுக்கான அங்கத்தவர்களின் ஆலோசனைகள் பெறுதல்

40,முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் (தலைமையகம்)


# இராசி பலன்

09.07.2016
(ஆனி 25,சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
பஞ்சமி பிற்பகல் 4.06 மணிவரை
பூரம் முன்னிரவு 10.36 மணிவரை
சுபநேரம் 2,58-4.28 மணிவரை
இராகுகாலம் 8.58-10.28 மணிவரை
இரவு நடேசரபிஷேகம்
ஸ்கந்த பஞ்சமி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம், அவிட்டம் இரவு 5.07 மணிக்கு கன்னி-சந் | | புத சுக் |
| | | | குரு ராகு சந் |
| | சூரி செவ் | | |

**மீனம்:** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன நன்மையுண்டு. காரிய அனுகூலமுண்டு, சுவாரஸ்யமான நாள்.

**மேடம்:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்:** சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்:** சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், பொதுநல ஈடுபாட்டில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், களஸ்திர நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலை தூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், விரயங்கள் கூடும்.

**சிம்மம்:** கற்பனை மிகுதியான நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, திடீர் பயணங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**தனுசு:** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், சாதுரியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** உறவினர்கள் உங்கள் இல்லம் வந்து சேரலாம், வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சியுண்டு.

**துலாம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கன்னி:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள்.

# 41 ஆயிரத்து 465 குடும்பங்களில் 21, 702 பேர் வேலைபற்றவர்கள்

## முல்லை. மாவட்ட செயலக புள்ளி விபரத்தகவலில் சுட்டிக்காட்டு

(பரந்தன்)

**முல்லைத்தீவில் 41 ஆயிரத்து 465 குடும்பங்களைச் சேர்ந்த 21 ஆயிரத்து 702 பேர் வேலையற்றவர்களாக உள்ளனர் என முல்லைத்தீவு மாவட்டச் செயலக புள்ளிவிபரத் தகவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

2014 ஆம் ஆண்டு முல்லைத் தீவு மாவட்டச்செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரக் கணிப்பின் அடிப்படையிலேயே இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கரைதுறைப்பற்று பிரதே செயலக பிரிவில் 5 ஆயிரத்து 979 பேரும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 4 ஆயிர த்து 932 பேரும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 5ஆயிரத்து 429 பேரும், துணுக்காய் பிரதேசத்தில் 855 பேரும், மாந்தை கிழக்கு பிரதேசத்தில் 615 பேரும், வெலிஓயா பிரதேசத்தில் 3ஆயிரத்து 892 பேரும் பிரதேச செயலக பிரிவின் அடிப்படையில் காணப்படுகின்றனர்.

இவர்களில் 6 ஆயிரத்து753 பேர் க.பொ.த.சாதாரண தர தகைமையிலும், 3 ஆயிரத்து 180 பேர் க.பொ.த.உயர்தர தகைமையிலும், 199 பேர் பட்டதாரிகளாகவும், இவர்களை தவிர ஏனையவர்களாக 11 ஆயிரத்து 570 பேரும் வேலையற்று காணப்படுகின்றனர் என மாவட்டச் செயலக தகவல் குறிப்பிடுகின்றது.

இதனைத் தவிர முல்லைத்தீவு மாவட்டத்தில் 19 ஆயிரத்து 207 பேர் தொழில் புரிபவர்களாக காணப்படுகின்றனர். இவர்களில் அரச தொழில் 2ஆயிரத்து436 பேரும், அரை அரச தொழில் செய்பவர்களாக 657 பேரும், அரசசார்பற்ற நிறுவனங்களில் ஆயிரத்து93 பேரும், தனியார் துறைகளில் 15 ஆயிரத்து 21 பேரும் தொழில் புரிபவர்களாக உள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் 20 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பின்றி உள்ளனர் என மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-312)

# கிடைக்கும் உதவிகளை பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு



வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனின் 2016 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 2 இலட்சம் ரூபாவை விவசாய கருவிகளை வழங்குவதற்கு ஒதுக்கியுள்ளார்.

இதில் பத்து பயனாளிகளுக்கு தெளிகருவிகள் மற்றும் ஐந்து பயனாளிகளுக்கு நீர் அழுத்த மின் விசைப்பொறியுமாக மொத்தம் பதினைந்து பயனாளிகள் உதவிகளைப் பெற்றுக்கொண்டனர்.

விவசாயக்கருவிகள் வழங்கும் குறித்த நிகழ்வானது கடந்த 4 ஆம் திகதி முல்லை. மாவட்ட விவசாயப்பணிமனையில் நடைபெற்றது.

மாவட்டத்தின் விவசாய பிரதிப் பணிப்பாளர் தலைமையில் பயனாளிகள், பணியாளர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் ரவிகரன் உரையாற்றும் போது,

வாழ்வுடைமை உதவிகளை கோருபவர்கள் மிகக்கூடுதலாக உள்ளனர். அவர்களுள் தெரிவு செய்யப்பட்ட நிலையிலேயே இன்றைய ஊக்குவிப்பு நிகழ்வில் கலந்து கொள்கிறீர்கள்.

இந்த வகையில் உதவிகளை பெற்றுக்கொள்பவர்கள் கிடைக்கும் இவ்வுதவியை பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும். ஊக்குவிக்கப்பட்டதால் நாம் வாழ்வில் முன்னேறினோம் என்பதை செயலிலும் காட்டவேண்டும். இம் முன்னெடுப்புகளின் வெற்றியென்பது உங்களின் வெற்றியிலேயே தங்கியுள்ளது என்றார். (2-281)

# கடந்த கால யுத்த வலிகளை மறப்பதற்கு வெற்றிச்சின்னங்களை அழிக்க வேண்டும்

கிளிநொச்சியிலுள்ள இராணுவ வெற்றிச் சின்னங்கள் அழிக்கப்பட வேண்டும் என கடந்த 2ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நகர அபிவிருத்தி தொடர்பான முகாமைத்துவக் குழுவின் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.பசுபதிப்பிள்ளையிடம் வினவிய போது.

கிளிநொச்சியில் டிப்போ சந்தியில் முன்னர் சந்திரன் பூங்கா இருந்த வளாகத்தில் இராணுவ வெற்றிச் சின்னம் ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. அதை விட அவ்வளாகத்தில்பல வருடங்கள் பழைமை வாய்ந்த செங்கற்களால் ஆன சுவர் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதனால் ஐம்பது வருடங்களுக்கு பின்னர் தென்பகுதியில் இருந்து வருகின்ற பெரும்பான்மை இனத்தவர்கள் இச்சுவர்களை காட்டி இது எமது இனத்தவர் வாழ்ந்த இடங்கள் என உரிமை கோரும் அபாயம் உள்ளதுடன் அமைக்கப்பட்டுள்ள நினைவுச்சின்னங்களை தினமும் பார்வையிடும் போது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் அவர்களது கடந்த கால துன்பகரமான நிகழ்வுகளை நினைவுக்கு கொண்டு வந்து எமது மக்கள் யுத்தத்தின் வலிகளை மறக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். அத்தோடு வளர்ந்து வருகின்ற சிறுவர்கள் இச்சின்னம் ஏன் அமைக்கப்பட்டுள்ளது என கேள்வி எழுப்பும் போது யுத்தத்தின் வலிகள் பரம்பரை பரம்பரையாக கடத்தப்படும். எனவே கிளிநொச்சியில் உள்ள அனைத்து இராணுவ வெற்றிச் சின்னங்களும் அழிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (2-312)

# கிளிநொச்சி மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கு நேற்று சிறுவர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு செயலமர்வு



(பரந்தன்)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஆகியவை இணைந்து நடத்திய சுகாதார அலுவலர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு கிளிநொச்சி பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்றுக்காலை 9 மணிக்கு இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது சிறுவர்கள் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் நாளாந்தம் இடம்பெற்று வரும் நிலையில் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சமூக மட்டத்தில் பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கான விழிப்புணர்வு செயற்றிட்டம் இடம்பெற்று வருகிறது. அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சுகாதார குடும்ப நல .உத்தி யோகத்தர்கள், சுகாதார பரிசோதகர்கள் ஆகியோருக்கு மேற்படி விழிப்புணர்வு செயலமர்வு இடம்பெற்றுள்ளது.

ஒருநாள் செயலமர்வாக இடம்பெற்றுள்ள சிறுவர்களின் உளநல பிரச்சினைகள் ,சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் நலன்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விழிப்புணர்வு கருத்துக்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், கிளிநொச்சி பதில் பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ம.ஜெயராசா, சிறுவர் நல உத்தியோகத்தர் செந்தூரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (2-312)





யாழ். எயிட் நிறுவனத்தினால் இரு முன்னாள் போராளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. இதற்கமைய நெடுங்கேணியைச் சேர்ந்த முன்னாள் போராளி ஒருவர் பக்கவாதம் மற்றும் படுகாயங்களுடன் வாழ்ந்து வருகின்றார். இவரது மனைவி கண்பார்வை இழந்து, காது ,பேச்சு செயலிழந்த நிலையில் கடும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார். இவரின் சுயதொழிலை மேற்கொள்வதற்காக கிணறு புனரமைப்பதற்கு முப்பதாயிரம் ரூபா பணமும் பிள்ளையின் கற்றலுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன. அத்துடன் முல்லைத்தீவைச் சேர்ந்த இடுப்பிற்கு கீழ் இயக்கமற்ற முன்னாள் போராளி ஒருவருக்கு ஆட்டோ செலுத்தும் தொழிலை மேற்கொள்வதற்கு ரயர்,பற்றரி போன்ற பொருட்களும் வழங்கப்பட்டன. இவர்களுக்கான நிதி உதவிகளை பண்டிக்கெய்தகுளத்தை சேர்ந்த நபரின் நினைவாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது.




# வருடாந்த உற்சவம்

வன்னேரிக்குளம் ஐயனார் புரத்திலுள்ள ஐயப்பர் சுவாமி ஆலய வருடாந்த உற்சவம் கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

இதனையொட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறும். (2-307)

### மக்களை மீள்குடியேற்ற தீவிர முயற்சி


# முகாம்களை மூட ஜனாதிபதி முடிவு

## மீள்குடியேற்ற அமைச்சு அறிக்கை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம், முகாம்களை மூடுதல், வீடமைப்பு உட்பட நிரந்தரமான தீர்வுகள் என்பன கட்டம் கட்டமாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா பூந்தோட்ட நலன்புரி முகாமில் 97 உள்ளக இடம்பெயர்ந்த குடும்பங்கள் தங்கியுள்ளனர். இவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்களாக இருப்பதுடன், காணி அற்றவர்களாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு நிரந்தரமான தீர்வினை வழங்கும் நோக்குடன், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு சின்னடம்பனில் 60 ஏக்கர் காணியில் 66 வீடுகள் அரச சார்பற்ற நிறுவனமான ஞானம் பவுண்டேஷன் நிறுவனத்தின் உதவியுடன் கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்



பட்டு ஆவணிமாத இறுதியினுள் வீட்டுத் திட்டங்கள் முடிவுபெறுவதாகவும், கஷ்டங்களை அனுபவித்த மக்களுக்கு நிரந்தரமான தீர்வுகள் பெறப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞான சோதி தெரிவித்தார்.

மேலும், கடந்த மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடைபெற்ற மீள்குடியேற்றம் தொடர்பான உயர் மட்ட கலந்துரையாடலை அடுத்து வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு,புளியங்குளத்தில் 40 ஏக்கர் காணி வன திணைக்களத்தினால் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டு ஞானம் பவுண்டேஷன் நிறுவனத்தினால் 31 வீடுகள் நிர்மாணிப்பதற்கான முன்னேற்பாடுகளான காணி துப்புரவாக்கல், நில அளவை, தொகுதித் திட்டம் என்பன தயாரிக்கப்படுவதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். மேலும் இவ் வீட்டுத் திட்டமானது 2016 ஒக்டோபர் மாதத்தில் முடிவுறுத்தப்படும்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ஆகியோரின் வழிகாட்டலில் பூந் தோட்ட நலன்புரி முகாமில் தங்கியி ருந்த 97 உள்ளக இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு நிரந்தரமான தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளமை நல்லிணக்கத்திற்கான மைல்கல்லாக நோக்கப்படுவதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞான சோதி மேலும் தெரிவித்தார். (2-7-10)

## உ/த பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்களின் பிரச்சினைகளை 15 இற்கு முன் அறிவிக்குக

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்களில் காணப்படும் பிரச்சினைகள் அல்லது திருத்தங்கள் தொடர்பில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்குமாறு பரீட்சை விண்ணப்பதாரர்களிடம் பரீட்சைகள் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த பரீட்சையானது ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை, குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த பாடசாலையை சேர்ந்த விண்ணபதாரர்களின் அனுமதிப்பத்திரமானது பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட விண்ணப்பதாரர்களின் அனுமதிப்பத்திரமானது அவர்களின் தனிப்பட்ட விலாசங்களுக்கும் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

குறித்த பத்திரத்தில் காணப்படும் பாட திருத்தங்கள், மொழி ஊடக திருத்தங்கள் அல்லது பிற திருத்தங்களுக்கு பாடசாலையைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் பாடசாலை அதிபர்களின் மூலமும் தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் தமது திருத்தங்களை பரீட்சைத் திணைக்களத்தின் பாடசாலை பரீட்சைப்பிரிவில் அறிவிக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறிப்பிட்ட திகதிக்காக அனுமதிப் பத்திரங்கள் இதுவரை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் அவர்களின் விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட விலைப் பட்டியலின் பிரதி மற்றும் விண்ணப்பப் பத்திரத்தின் பதிவு தபாலின் பற்றுச்சீட்டு என்பவற்றை சமர்ப்பிப்பதன் மூலம் அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள முடியுமென அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த பிரச்சினைகளுக்கான தீர்வுகளை 1911, 011 278 4208, 011 278 4537, 011 314 0314 என்னும் தொலைபேசி எண்களுக்கு அழைப்பதன் மூலம் அல்லது 0112 784 422 என்னும் மின்னஞ்சல் எண்ணிற்கு மின்னஞ்சலொன்றை அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-7-10)

## தாய்வானில் வீசிய சுப்பர் தைபூன் நெப்பாரக் சூறாவளி

கிழக்கு தாய்வானின் ஹுகலைன் நகரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஊடறுத்த சுப்பர் தைபூன் நெப்பாரக் சூறாவளியால், இருவர் உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

மணிக்கு 220 கிலோ மீற்றருக்கும் அதிகமான வேகத்தில் வீசிய சூறாவளியின் தாக்கத்தால், மேற்படி நகரில் உள்ள 6 கிராமங்களில் மின்சார விநியோகம் தடைப்பட்டது.

மேலும், குறித்த கிராமங்களில் கன மழை பெய்ததாகவும், இதனால் தாழ்வான சில பகுதிகளில் மழை நீர் தேங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடரும் கன மழையால் ஹுகலைன் நகரில் பரவலாக நிலச்சரிவு மற்றும் சேறு வழிதல் போன்ற அனர்த்தங்கள் இடம்பெற அதிகமான வாய்ப்புக்கள் காணப்படுவதனால், அதைத் தடுப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் குறித்த சூறாவளித் தாக்கத்தின்போதான முழுமையான சேத விபர மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (2-7-10)

## சட்ட அலுவலர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரல்

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் நிறைவேற்று வகுதியின் தரம் III இற்கான சட்ட அலுவலர் பதவியில் நிலவுகின்ற ஒரு (01) வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியுடையவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி தகுதியுடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்பதவி வெற்றிடத்துக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி ஒருவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றிலிருந்து சட்டம் தொடர்பான பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். மீயுயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

மீயுயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் பெற்றதன் பின்னர் 3 ஆண்டுகளுக்கு குறையாத முனைப்புடனான தொழிற்றுறை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் இப்பதவிக்கான கடமைகள் மேற்கொள்ளவும் உடல் மற்றும் உள ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். ஏனைய தகைமைகளாக விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜையாக மட்டும் இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும். இப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியளவில் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதியன்று 21 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். மேற்குறித்த அறிவுறுத்தலுக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2016.07.29 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு செயலாளர், மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு , 17 ஆவது மாடி இசுறுபாய, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் சட்ட அலுவலர் பதவிக்குத் திறந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு - 2016 எனத் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பார்வையிட 1975 ஆம் இலக்கம்-2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் திகதி வெளி வந்த இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பத்திரிகையை பார்வையிட முடியும். (2-5)

## கானாவில் ரமழான் கொண்டாட்ட கூட்ட நெரிசலில் 9 பேர் மரணம்!

கானாவில் ரமழான் பண்டிகைக் கொண்டாட்டத்தின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி ஒன்பது பேர் உயிரிழந்தனர்.

இஸ்லாமியர்களின் புனித நோன்பு மாதமான ரமழான் பண்டிகையின் நிறைவை குறிக்கும் விதமாக கானாவில் நடத்தப்பட்ட நிகழ்வு ஒன்றில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் ஒன்பது பேர் உயிரிழந்தனர்.

கானாவின் மத்திய நகரமான குமாஸியில் நடைபெற்ற இந்த விபத்துக்கான ஆரம்பம் எது என்ற தகவல் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

கூட்டத்தின் நடுவே மோதல் ஏற்பட்டதாகவும், மக்கள் அங்கிருந்து தப்ப முயற்சித்ததால் கூட்ட நெரிசல் ஏற்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மின்சாரம் தடைப்பட்டதுடன் துப்பாக்கியில் இருந்து குண்டு ஒன்று வெளியேறியது போன்று எழுந்த அதிக சத்தத்தை தொடர்ந்து எழுந்த பீதி காரணமாக இந்த விபத்து நடந்திருக்கலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விபத்தில் காயம் அடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 6 பேர் பெண்கள், 3 ஆண்கள் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7-10)

# தொழில் அலுவலகக் கட்டடம் யாழில் நேற்று திறந்து வைப்பு




(கொழும்பு)

புதிதாக அமைக்கப்பட்ட யாழ்ப்பாண தொழில் அலுவலக நிர்வாக கட்டடம் நேற்றுக் காலை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் டபிள்யூ. டி.ஜே செனவிரத்ன, பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், ஈஸ்வரபாதம் சரவணபவன், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

முதலில் பாண்ட் வாத்தியத்துடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு பின்னர் கொடிகள் ஏற்றப்பட்டு புதிய கட்டடம் சம்பிரதாயபூர்வமான திறக்கப்பட்டு மங்கள விளக்கேற்றல் நிகழ்வுகள் நடைபெற்றன.

(படங்கள்:-உ.சாளின்)

## சாலாவ பகுதியில் துண்டுப்பிரசுரங்கள்

சாலாவ பகுதியில் அண்மையில் ஏற்பட்ட இராணுவ முகாம் வெடிப்பு சம்பவத்தினையடுத்து குறித்த பகுதியில் பல கோரிக்கைகளை முன்வைத்து துண்டுப்பிரசுங்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறன.

இதுவரை இழப்பீடுகளை வழங்காதவர்களுக்கு, உடனடியாக இழப்பீடுகளை வழங்குமாறும், பொதுமக்களின் வாழ்விடங்களை அண்மித்த பகுதிகளில் உள்ள ஆயுதக் களஞ்சியங்களை அப்புறப்படுத்துமாறு கோரியுமே குறித்த துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. (இ-7-10)

## தங்கம்மா அப்பாக்குட்டியின் 8ஆவது குருபூசை வைபவம்

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 8 ஆவது குருபூசை வைபவம் எதிர் வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் இளைப்பாறிய இசையாசிரியர் கலாபூஷணம் திருமதி ஞானகுமாரிசிவநேசனின்பண்ணிசை அரங்கமும் இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து பிரார்த்தனையுரையை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ வா. சுகினேஸ் வரக்குருக்கள், சுந்தர ஆஞ்சநேயர் தேவஸ்தான ஆதீனகர்த்தா இ.சுந்தரேஸ்வரக்குருக்கள், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகளும் ஆற்றவுள்ளனர்.

இதேவேளை மூத்த சிவாச்சாரியார் களை கௌரவிக்கும் முகமாக சிவ ஸ்ரீ. நாகலிங்கக்குருக்கள், சிவ ஸ்ரீ சோ.பிரணதார்த்திஹரக் குருக்களுக்கான கௌரவிப்பும் இதனைத் தொடர்ந்து பன்னிரண்டாம் திருமுறை, திருத்தொண்டர் புராணம் இரண்டாம் பாகம் வெளியீடும் இடம்பெறும்.


யாழ்.பல்கலைக்கழக இளைப்பாறிய ஆங்கில போதனாசிரியர் ச.விநாயகமூர்த்தி வெளியீட்டுரையை வழங்குவதுடன் முதற் பிரதியை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான உப தலைவர் ச.ஆறுமுகநாதன் பெற்றுக் கொள்வார். (இ-7)

## கலைவாணி முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த குதூகல விளையாட்டுவிழா

யாழ். ஊரெழு கலைவாணி முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த குதூகல விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும்.

சி.இளங்கோ தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் அ.ஈஸ்வரநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினராக ஊரெழு ஜே/267 கிராம உத்தியோகத்தர் எம்.ஆர். ஜெயதரன், சிவபூரணி காளி அம்மன் தேவஸ்தான பொருளாளர் க.கதிரவேலு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)


யாழ்.சாவகச்சேரி தச்சன்தோப்பு கோவிலாக்கண்டி மேற்கில் அமைந்துள்ள கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் அண்மையில் நடைபெற்ற 2015 ஆம் ஆண்டில் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்திய டைந்தவர்களுக்கான கௌரவ ஊக்குவிப்பு வழங்கும் நிகழ்வின் போது...

## நாட்டின் அனைத்து துறைகளிலும் ஊழல், மோசடி இடம்பெறுகின்றது

### ஆதாரம் உண்டு என்கிறார் தென்னக்கோன்

நாட்டில் அனைத்து துறைகளிலும் ஊழல்கள் இடம் பெற்றுக் கொண்டே இருக்கின்றன. இது தொடர்பில் விசாரணைகள் இடம் பெற வேண்டும் என ஊழல் எதிர்ப்பு ஒருங்கிணைப்பு முன்னணியின் செயலாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் மின்சாரத்துறை உட்பட அனைத்து துறைகளிலும் ஊழல்கள் இடம் பெற்று கொண்டே இருக்கின்றன. இவ்வாறான ஊழல் மோசடிகள் அனைத்திற்கும் தம்மிடம் முறையான ஆதாரங்கள் இருப்பதாக அறிவித்தார்.

ஆதாரங்களை வைத்து கொண்டே நாம் கருத்துகளை வெளியிடுகின்றோம். இது தொடர்பில் பொய்யான கருத்துகளை யாரும் பரப்பி நிரபராதிகளாக முயல வேண்டாம் எனவும் கீர்த்தி தென்னக்கோன் எச்சரிக்கை விடுத்தார்.

நாட்டில் இடம் பெறும் ஊழல், மோசடிகள் அனைத்திற்கும் முறையான விசாரணைகள் இடம் பெறவேண்டும். குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் அதுவரையிலும் நாம் கண்காணித்து கொண்டே இருப்போம். ஜனாதிபதி இதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார். (செ-11)

## விவாதப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கலட்டிச் சந்திக்கு அருகேயுள்ள சுகதாமம் மண்டபத்தில் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இடம்பெற்று வருகின்றன விவாதப் போட்டியில் நேற்று 08.07.2016 இல் நடைபெற்ற விவாதப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

முதலாம் சுற்று

போட்டி 1

யா/ புனித அந்தோனியார் கல்லூரி - ஊர்காவற்றுறை

போட்டி 2

யா/ இணுவில் மத்திய கல்லூரி (213 புள்ளிகள்). மு/மல்லாவி மத்திய கல்லூரி (203 புள்ளிகள்)

இரண்டாம் சுற்று

தலைப்பு: பொறுப்புணர்ச்சி அற்றுப் போவதால் இழக்கப்படுவது அமைதியா? சுதந்திரமா?

யா/ இணுவில் மத்திய கல்லூரி (256 புள்ளிகள்). யா/ புனித அந்தோனியார் கல்லூரி - ஊர்காவற்றுறை (258 புள்ளிகள்)

மூன்றாம் சுற்றுக்குத் தெரிவாகிய அணி

யா/புனித அந்தோனியார் கல்லூரி - ஊர்காவற்றுறை

நடுவர்கள்:

பிரதான நடுவர்: சூ. எட்வேட் ரெஜினோல்ட் **BA, PGD in PA, MA (HRCR)** (யாழ் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளராவார்)

நடுவர் 2:வேலுப்பிள்ளை சிவசிதம்பரம் **BSc, SLEAS III** (ஓய்வு பெற்ற அதிபர்)

நடுவர் 3:பிரம்மகுமாரி டாக்டர் மலர்ச்செல்வி மகேசன், **MBBS**

அடுத்த போட்டி விபரங்கள் (11-07-2016)

காலை 9.00- 1.00

போட்டி 1 யார் சிறந்தவன்? மரியாதை கொடுப்பவனா? மரியாதை பெறுபவனா?

போட்டி 2 மன வலிமை தருவது மகிழ்ச்சியா? பணிவா? (இ-5)




பண்டத்தரிப்பு மலரும் மொட்டுக்கள் முன்பள்ளி நிலையம், மானிப்பாய் வண்ணத்துப்பூச்சி சிறுவர் இல்லம் என்பன இணைந்து நடத்திய வருடாந்த விளையாட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது...

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—79

## புற்றுநோயும் பசுமைக் கிராமங்களும்

வாருங்கள் எம்மினிய
உறவுகளே!

நல்ல செய்தியொன்றுடனும்
மனதை நெருடிய திடீர் இழப்
பொன்றுடனும் எழுதும் கைகள்
உங்களைச் சந்திக்கின்றன.
நல்ல செய்தியென்றால் துணிச்
சலான சில முடிவுகள் அநே
கமாக நாம் என்றோ சாதிக்க
நினைத்ததை, முடியவில்லையே
என தளர்வடைந்த காலங்க
ளில் உற்சாகத்தையும் உத்
வேகத்தையும் தந்துவிடுகி
ன்றன. அந்த வகையில் தற்
போது வந்திருக்கின்ற செய்
தியாக சூழலுக்கியைவான
பத்தாயிரம் பசுமைக் கிராமங்
களை உருவாக்குதல் என்னும்
முடிவு நாட்டின் தலைமை ஆட்சி
யாளரிடமிருந்து வந்திருக்கின்
றது. விவசாயத்தில் முழுமை
யான ஈடுபாடுடையவரால் எடு
க்கப்படுகின்ற நாளைய உலகம்
நோக்கிய இவ்வாறான முடிவு
கள் நாட்டின் வளர்ச்சிக்கும்
மக்களின் சுகாதாரத்திற்கும்
நிச்சயம் வலுவூட்டும் என நம்ப
லாம். சூழலை விரைந்து மாசு
படுத்தும் பீடைநாசினிகளை
குறிப்பாக களைநாசினிகளை
தடைசெய்வதற்கு எடுக்கப்படும்
முடிவுகள் முன்பிருந்தே தீட்டப்
பட்டிருந்தால் நாம் சந்திக்கும்
அவலம் தற்போது நடந்திரு
க்காது. பல உயிர்களையும் நாம்
அநாவசியமாக பறிகொடுத்திரு
க்க வந்திருக்காது. ஒரு தேசத்
தன் அபிவிருத்தியென்பது வளர்ந்
திருக்கும் பெரிய மாடிக்கட்ட
டங்களில் இல்லையென்றும்
அத்தேசத்திலிருக்கும் கிரா
மங்களின் வளர்ச்சியென்பது
நன்றாகவே எமக்கு பொருந்
தியிருக்கின்றது. கிராமங்கள்
தேசத்தின் வளர்ச்சியில் வைத்
துக்கட்டப்படும் செங்கற்களாகும்.
அவற்றினை பசுமையாக்கி அதி
லிருந்து பயனைப் பெற முயற்சி
த்திருப்பது பாராட்டுக்குரியது.

மேற்கூறியவற்றுடன் தொட
ர்புபட்ட ஆனால் உள்ளத்தை
நெருடவைத்த செய்தியாக இழப்

மையப்படுத்திய புற்று நோயின்
தாக்கத்தினை நேரடியாக கண்டும
கேட்டும் அனுபவப்பட்ட நிலையில்
இதனை இங்கே பதிவு செய்ய
எழுதும் இக்கைகள் உந்தப்பட்டன.
புற்றுநோயெனும் கொடிய நோயி
னால் வதைபட்டுப்போனவர்களுள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
வவுனியா வளாகத்தில் உயிர்
விஞ் ஞானத் துறையின் சிரேஷ்ட
விரிவுரையாளரும் முன்னை
நாள் தலைவியுமாகவிருந்த திரு
மதி புவனேஸ்வரி லோகநாத
னும ஒருவராவார். பேராதனைப்
பல்க லைக்கழக விவசாயப்
பட்டதாரியாகி, முதுகலைமாணி
பட்டதாரியாகியும் யாழ்ப்பாணப்
பல்கலைக்கழக விவசாய பீடம்
ஆரம்பித்த காலங்களில் தற்
காலிக விரி வுரையாளராகி பின்
வவுனியா வளாகத்தில் உயிர்
விஞ்ஞானத்துறையில் விரி
வுரையாளராகி, சிரேஷ்ட விரிவு
ரையாளராகி சிறநத ஆசிரியப்பணி
செய்து மேலும் பல சமூகப் பணி
கள் புரிந்தவர். வீட்டுத்தோட்டம்
பற்றிய நூலும் விவசாயிகள்
வாசித்து அறிந்து கொள்வதற்காக
எழுதி வெளியிட்டு நூலை




வெளியிட்டபோது கலந்து கொண்
டவர்களுக்கு மரக் கன்றுகளும்
வழங்கிய இயற் கையை விரும்
பியவர். சேதன விவசாயத்தில்
ஆழ்ந்த நம்பிக்கையும் அதற்காக
தனது ஆய்வுகளை முழுமை
யாக செய்தவருமாவார். வீட்டு
த்தோட்டம், கழிவு முகாமை
த்துவம் என்பனவற்றில் மக்


யாகாது. பெற்றெடுத்த மகவையும்
நீண்டநாள் அணைத்து வைத்
திருக்க கொடுத்து வைக்கவி
ல்லை. அந்த வலி மாறமுன்பு
பெண்மைக்குள்ளே புற்றுநோய்
இடங்கண்டு கொண்டது. புற்று
நோய் என்பது கொடிய நோய்.
நோயுற்றவருக்கும் அவருடன்
வாழ்பவருக்கும் நிறைந்த துன்
பத்தை தரும் ஈவிரக்கமற்ற
கொடிய நோய் என கூறலாம்.
ஒருவருக்கு புற்று நோய் என
முடிவாக்கப்பட்ட பின் அதற்கான
பரிகாரங்களில் தலைமயிர் கொட்
டுப்பட்டு உருவம் சிதைந்து தினம
தினம் தனது உருவத்தை தானே
பார்த்து சகிக்க முடியாமல் உள
மும் உருக்குலைந்து அவதிப்
படுவதை காண்பவரையும் உலு
ப்பிவிடும் நோயிது. ஐம்பது வயது
களில் இப்படிப்பட்ட வலி சுமந்து
வாழ்ந்து பிரிந்திருக்கின்ற ஆத்
மாக்களை அவர்கள் எண்ணிய
விடயங்களை நாம் செய்து முடிப்ப
தொன்றே அவர்களுக்கான சாந்
தியாக அமையும். கூடிப்பிறந்த
உறவுகளை விட கூடிப்பழகிய
நண்பர்களுக்கு தினம்தினம்
துடித்து அதன் வலிதாங்கிய கொடு

மையை தந்த வலிதந்த நோயிது.
இந்த நிலை எவருக்குமே வரக்
கூடாது என நோய்வந்தவர்கள்
அதனால் அவதிப்பட்டவர்கள்
சொல்லிச் சென்றிருக்கின்றார்கள்.
பரிகாரங்கள் பல இருந்தும் பாதி
வழியில் அவர்களை நாம் பிரி
ந்துவிட்ட செய்திகள்தான் அதி
கமாக இருக்கின்றன. இதற்கு

காணலும் தீர்வும் பரிந்துரை
க்கப்பட வேண்டும்.

சேதன விவசாயத்தினை நோக
கிய நகர்வு தேசத்தின் விருத்
திக்கு நல்லதொரு சகுனமென்றே
கூறலாம். சேதன விவசாயம்
சாத்தியமா? இல்லையா? என்ப
தல்ல வாதம். சேதன விவசாய
த்தை நோக்கியதான எமது பயிர்ச்
செய்கை நிச்சயமாக எமது வள
மான சந்ததியை கட்டியெழுப்ப
உதவும். இதற்கான ஒரு அடித்
தளமாகவே வீட்டுத்தோட்டத்தை
காண்கிறோம். வீட்டுத்தோட்டம்
என்பது வீடும் வீடுசார்ந்த நிலப்
பரப்பில் வளர்க்கப்படும் தாவ
ரங்கள் அல்லது பயிர்களைக்
குறிக்கும். இங்கே ஆண்டுப்ப
யிர்கள்,ஈராண்டு மற்றும் பல்லா
ண்டுப் பயிர்களும் உள்ளடக்கம்.
வீடு அமைந்திருக்கும் நிலப்பரப்
பில் அமைக்கப்படும் அல்லது
வளர்க்கப்படும் தாவரங்களட
ங்கிய தொகுதியினை வீட்டுத்
தோட்டம் என கொள்ளலாம்.
வீட்டுக்குத் தேவையான அனை
த்தையும் நாம் உற்பத்திசெய்து
பெற்றுக்கொள்ளுதல் இந்த வீட்டு
த்தோட்டத்தினுள் பொதிந்தி
ருக்கும் உண்மையாகும். இது
சாத்தியமா?- இல்லையா? என்பது
பற்றிய வாதப்பிரதிவாதங்களுக்கு
அப்பால் நாம் செய்ய முடியும் என
முடிவெடுத்து விட்டால் முடியாதா
என்ன?இதற்கெல்லாம் கூட்டம்
கூட்டி அளவளாவி செய்யலாமா?
இல்லையா? என முடிவெடுக்க
வேண்டுமா?

மாறாக பட்டினிச்சாவிலிருந்து
மக்களை காப்பாற்றுதல் மற்றும்
உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து
பாதுகாப்பு என்பனவற்றிற்கும்
முக்கியத்துவம் கொடுத்து இவ்
வருடத்திற்கான இரண்டுநாள்
ஆய்வு மாநாடு இலங்கை விஞ்
ஞான மன்றத்தினால் கடந்த இரு
தினங்களாக நடந்து முடிந்தி
ருக்கின்றது. பல விடயங்களை
ப்பற்றி நடைபெறும் ஆய்வுக
ளைப் பற்றி கலந்துரையாடப்ப
டுகின்ற இவ்வாய்வு மாநாடு
உணவும் விவசாயமும், சூழலும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

ட்டில் ஆராயப்பட்டுள்ளன. புற்று
நோயைப் பற்றி பாரியளவில்
கலந்துரையாடப்பட்டிருக்கும்
இம் மாநாட்டில் அதற்கான தீர்வு
களும் திட்டங்களும் பரிந்துரை
க்கப்பட்டுள்ளன. இம்மாநாட்டில்
விஞ்ஞான தொழில்நுட்பம் மற்
றும் ஆராய்ச்சிக்கான அமைச்சர்
சுசில் பிரேமஜயந்த பிரதம விருந்
தினராக கலந்து கொண்டதுடன்
பாடசாலை மாணவர்கள் மற்றும்
தனியார் தொழிற்றுறையாளர்
களையும் அழைத்திருந்தமை
சிறப்புக்குரியதாக இருந்தது.

உணவுப் பாதுகாப்பு மற்றும்
ஊட்டச்சத்து பாதுகாப்பு என்ப
தனை வீடுசார்ந்த பிரச்சினை
யாக உள்வாங்கினால் அத
ற்கான தீர்வினை கண்டு கொள்
ளல் இலகுவானதாகும். நஞ்
சற்ற உலகம் மற்றும் நஞ்சற்ற
தேசம் என்பதனை கொள்கை
யாக கொண்டால் இந்த அவல
நிலைக்கு நாம் அனைவரும்
இணைந்தே முற்றுப்புள்ளி
வைக்கலாம். அந்த வகையில்
வீட்டுத்தோட்டங்கள் இணைந்த
கிராமத்தை வளர்த்தெடுப்பதே
இங்கு முன்வைக்கப்பட்டுள்ள
முன்முயற்சியாகும். அந்த வகை
யில் பத்தாயிரம் பசுமைக் கிரா
மங்கள் என்பது நல்ல முயற்
சியாக இருக்கும். அதே நேர
த்தில் கிராமத்தை நோக்கிய

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 96

பொன்றை மையப்படுத்திய
செய்தியது. வடபுலத்தில் அவசி
யமாகக் கருத்தில்கொள்ள வேண்
டிய உயிர்பறிக்கும் நோய்களுள்
புற்றுநோயும் ஒன்று. என்னவோ
தெரியவில்லை புற்று நோயி
னால் கண்முன்னே அவலப்
பட்டு, அவதிப்பட்டு ,அல்லலுற்று
பலஉயிர்கள் எம்மை விட்டு
பிரிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்
றன. குறிப்பாக பெண்களை

களோடு ஒன்றுபட்டு பல செயற்
பாடுகளை முன்னின்று செய்து
அவற்றில் வெற்றியும் கண்டவர்.
நஞ்சற்ற விவசாயம் என்பது
எம்மால் செய்யக்கூடிய ஒன்று
என்பதனை அனுபவமூடாக எடுத
துக்கூறி அதில் மக்களை இணை
க்க வேண்டுமென்ற அவா கொணடு
தனது ஆய்வுளை அதில் செய்து
காட்டிய துணிச்சலான பெண்
மணி இவர் என்றால் மிகை

என்ன காரணம் என விஞ்ஞான
மும் முயன்று கொண்டிருக்கி
ன்றது. ஆனால் நாம் பயன்படு
த்தும் அசேதன நச்சு இரசாயன
பதார்த்தங்களால் அவை எமது
உடலுக்குள் மெதுவாக செறிவ
டைவதனால் இந்த பிரச்சினை
ஏற்படுவதாக நம்பப்படுகின்றது.
இன்னும் விஞ்ஞானத்தின் ஆய்
வுப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டு
இதற்கான துல்லியமான இனங்

மாற்றுச்சக்தியும், சுகாதாரம்
குறிப்பாக நீரிழிவு, காலநிலை
மாற்றமும் இயற்கை பேரிடரும்,
டெங்கு, இயற்கையான விளை
பொருட்கள், திண்மக் கழிவு முகா
மைத்துவம், இனந்தெரியாத
சிறுநரக நோய், விவசாய தொழில்
நுட்பம், நீர் பாதுகாப்பு மற்றும்
புற்றுநோய் என்பவற்றுடன் தொழி
ற்றுறை சார்ந்து அவற்றின் பங்
களிப்பையும் இந்த ஆய்வு மாநா

தொழில்நுட்பத்தின் வருகை
யும் தொழிற்சாலைகளை கிரா
மம் நோக்கி நகர்த்தி அங்கு
ள்ளவர்களுக்கான வேலை
வாய்ப்பு உறுதிசெய்யப்பட்டால்
இவையனைத்தும் சாத்திய
ப்படும் காலம் உண்டு என
நம்பலாம்.முயற்சி தானே வாழ
க்கை யின் வெற்றி. நாம் அனை
வரும் இணைந்து இந்த வெற்
றிக்காக பாடுபடுவோம்.

# நிலங்களை மீட்க கேப்பாப்புலவு மக்களின் உறுதியான போராட்டம்

நான் எனது வீட்டிற்குள் நுழையும் போது, எனது அம்மாவினதும் எனது அப்பாவினதும் அன்பைப் பெறுவது போன்று உணர்கிறேன்' என நீண்ட காலமாக தனது சொந்த வீட்டிற்குத் திரும்ப வேண்டும் என்கின்ற ஆவலுடன் காத்திருக்கும் கேப்பாப்புலவு கிராமத்தைச் சேர்ந்த மூத்த கிராமவாசி ஒருவர் தெரிவித்தார்.

மே 24 அன்று கேப்பாப்புலவுக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த நிலத்திற்குத் திரும்ப வேண்டும் எனக்கோரி சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர். தமது நிலங்களை இலங்கை அரசாங்கம் மிக விரைவாகக்கையளிக்கும் என்கின்ற நம்பிக்கையுடன் கிராமத்தவர்கள் வாழ்கின்றனர். மே மாதத்தில் கிராமத்தவர்கள் தமது வீடுகளைப் பார்க்க முடிந்தது. ஏனெனில் ஆலய வருடாந்த உற்சவத்தில் கலந்து கொள்வதற்காக இலங்கை இராணுவத்தினரால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கேப்பாப்பிலவுக் கிராம வீதிகள் திறந்து விடப்பட்டன.

'ஒவ்வொரு ஆண்டும் எமது நிலங்களில் பல்வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சில வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. கிணறுகள் மூடப்பட்டுள்ளன. ஏனைய கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. காணிகளின் எல்லைகள் வேறுபட்ட அளவில் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆனால் நாங்கள் எமது காணிகளில் நாட்டிய பலா மற்றும் தென்னை மரங்கள் காய்க்கத் தொடங்கிவிட்டன' என கேப்பாப்புலவுக் கிராமத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலரான சந்திரலீலா தெரிவித்தார். எனினும் கிராமத்தவர்கள் அனைவரும் மீண்டும் தமது சொந்த வீடுகளுக்குச் செல்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வார்கள் என இப்பெண்மணி நம்புகிறார்.

'அவர்கள் எமது நிலங்களை விடுவிக்க வேண்டும். நாங்கள் மீண்டும் எமது சொந்த நிலங்களுக்குச் செல்வோம். அவர்கள் எமது வீடுகளை அழித்தாலும் கூட, அவர்கள் எமது நிலங்களை எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என நாம் விரும்புகிறோம்' என்கிறார் சந்திரலீலா.




### வரலாறு

கேப்பாப்புலவு கிராம சேவகர் பிரிவானது முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவின் கீழ் அமைந்துள்ளது. இப்பிரதேச செயலகத்தின் கீழ் சூரிபுரம், சீனியமோட்டை, கேப்பாப்புலவு மற்றும் பழக்குடியிருப்பு ஆகிய நான்கு கிராமங்கள் உள்ளன. விவசாயிகள் மற்றும் மனவர்களை அதிகமாகக் கொணட இப்பிரதேச வாழ் மக்கள் அறுபது ஆண்டுகளுக்கு மேல் இப்பிரதேசத்தில் தொடர்ந்து வாழ்கின்றனர். அத்துடன் காணியற்ற மக்களுக்கு புலிகள் அமைப்பால் இப்பிரதேசத்தில் காணிகள் வழங்கப்பட்டன. அவ்வாறு குடியேறியவர்களும் தற்போது இங்குள்ளதாக இப்பிரதேச வாழ்மக்கள் தெரிவித்தனர். பயிர் செய்வதற்கு உகந்த செம்மண், நல்ல தண்ணீர்க் கிணறுகள் மற்றும் கடல் வளங்களை கேப்பாப்புலவு தன்னகத்தே கொண்டுள்ளது. 2009ல் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெயர்ந்து சட்டத்திற்கு மாறாக மெனிக்பாம் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பல ஆயிரக்கணக்கான மக்களில் கேப்பாப்புலவுக் கிராமத்தவர்களும் உள்ளடங்குவர்.

2012 செப்டெம்பரில் கேப்பாப்புலவைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கு கால் ஏக்கர் காணி வீதம் ஒதுக்கப்பட்டது. இதனால் இவர்கள் தமது சொந்த இடத்திலிருந்து மீண்டும் சூரிபுரம் என்கின்ற கிராமத்திற்கு மீளவும் இடம்பெயர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதுவே தற்போது 'கேப்பாப்புலவு மாதிரிக் கிராமம்' என அழைக்கப்படுகிறது. தமக்கு எவ்வித உதவிகளும் கிடைக்கப்பெறவில்லை எனவும், அதிகாரிகளிடமிருந்து தங்குமிட வசதிகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை எனவும் இந்த மக்கள் விசனம் கொள்கின்றனர். இவர்கள் மெனிக்பாம் முகாமிலிருந்து கொண்டுவந்த வளத்தைக் கொண்டே தமக்கான சிறிய கூடாரத்தை அமைத்தனர்.




### தற்காலிக அனுமதிகள்

150 குடும்பங்களும் புதிய காணிகளை ஏற்றுக்கொள்வதாக விண்ணப்பம் ஒன்றில் கையொப்பமிடுமாறு முல்லைத்தீவு மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபரால் கோரப்பட்டது. இக்குடும்பங்களில் இரண்டு குடும்பத்தினர் இவ்விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிட மறுத்த போதிலும், இவர்கள் புதிய நிலத்திலேயே தொடர்ந்தும் வாழ வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. பின்னர் இவர்களுக்கு தற்காலிக அனுமதிகள் வழங்கப்பட்டன. தமது உறவினர்களுடன் தங்கியிருந்த கேப்பாப்புலவைச் சேர்ந்த ஏனைய 146 குடும்பத்தினரும் ஜனவரி 2013ல் சூரிபுரத்தில் குடியேறினர். இவர்கள் இங்கு குடியேறுவது தொடர்பாக எவ்வித நிலப் பத்திரத்திலும் கையொப்பமிடுமாறு கேட்கப்படவில்லை. சூரிபுரத்தைச் சேர்ந்த 59 குடும்பங்கள், பிளவு குடியிருப்பைச் சேர்ந்த 55 குடும்பங்கள், கேப்பாப்புலவைச் சேர்ந்த 159 குடும்பங்கள் தற்போது தமது சொந்த இடங்களிலிருந்து மீளவும் இடம்பெயர்ந்து கேப்பாப்புலவு மாதிரிக் கிராமத்தில் குடியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. இவர்களது சொந்த நிலங்கள் இலங்கை இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டு இன்னமும் விடுவிக்கப்படாமையே இதற்கான காரணமாகும். 2013 மார்ச்சில் 16 குடும்பங்கள் தமது சொந்த இடமான சீனியாமோட்டையில் குடியேறுவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்களின் 520 ஏக்கர் நிலப்பரப்பு இலங்கை இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டது. இந்த நிலங்களிலுள்ள வீடுகள் இராணுவத்தினரதும், அவர்களது குடும்பங்களினதும் வாழ்விடமாக மாறியுள்ளது. இதற்கப்பால், பாடசாலைகள், தேவாலயங்கள் போன்றனவும் இலங்கை இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இங்கு இராணுவக் குடும்பங்களைத் தங்கவைப்பதற்காக புதிய வீடுகள் கூட கட்டிக் கொடுக்கப்பட் டுள்ளன.

### வீட்டுத்திட்டம்

மார்ச் 2014இல், ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களைச் சேர்ந்த மக்களுக்காக இராணுவத்தினரால் 287 தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டன. 2013இல் இந்த வீட்டுத் திட்டத்தை கையளிக்கும் நிகழ்வில் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கலந்து கொண்டு உரையாற்றும் போது, 'இது தற்காலிக வீட்டுத் திட்டம் என்பதால் இங்கு எவ்வித மரங்களையும் நாட்ட வேண்டாம்' என மக்களிடம் தெரிவித்திருந்தார். 'அரசியல் நிலைமை மாறினால், சொந்த நிலங்களுக்கு நீங்கள் செல்லக் கூடிய நிலை உருவாகும்' என அமைச்சர் முரளிதரன் மக்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார்.

இந்தப் பிரதேசத்தில் போதிய ளவு நீர் வசதியில்லாததால் கிட்டத்தட்ட 25-30 வரையான குடும்பங்கள் இராணுவத்தினரால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளில் தங்கியிருக்கவில்லை. 'நாங்கள் முன்னர் வாழ்ந்த இடத்தில் பெரிய கிணறுகள் இருந்தன. இதனால் குளிர்மையான, சுத்தமான நீரை நாங்கள் குடித்தோம். எமது தாகம் தீரும் வரை நீரைக் குடிக்கக் கூடிய வளம் எம்மிடம் இருந்தது. ஆனால் தற்போது நீண்ட துரம் நடந்து சென்றே குளிக்க வேண்டியுள்ளது' என இக்கிராமத்தைச் சேர்ந்த வயது முதிர்ந்தவர்கள் ஏக்கத்துடன் கூறினர்.

விவசாயிகள் பயிர்ச்செய்கை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இவர்கள் தமது புதிய குடியேற்றக் கிராமத்திலிருந்து பத்து கிலோமீற்றர் தொலைவிலுள்ள நெல்வயல்களுக்குச் செல்வதென்பது இலகுவான காரியமல்ல. இந்த வயல் நிலங்கள் இந்த மக்களின் சொந்தக் கிராமங்களிலிருந்த வீடுகளுக்கு அரு கில் உள்ளன. ஆனால் இராணுவ ஆககிரமிப்பின் காரணமாக இந்த மக்கள் பல மைல்கள் தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளது. வீட்டுத் தோட்டம் மற்றும் பயிர்ச்செய்கை போன்றன இந்த மக்களின் பிரதான செயற்பாடுகளாக இருந்த போதிலும், தமது சொந்த இடத்திற்குச் செல்வதற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருப்பதால் தாம் தற்போது குடியேற்றப்பட்டுள்ள வீடுகளைக் கண்காணிப்பதற்காக பெண்களும் சிறுவர்களும் தொடர்ந்தும் வீடுகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

### இராணுவ ஆக்கிரமிப்பு

கிட்டத்தட்ட கடற்கரை வழியாக மூன்றரைக் கிலோமீற்றர் நீண்ட பாதையான இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் அதன் ஊடாகப் பொதுமக்கள் பயணிக்க முடியாத நிலை காணப்படுவதாக மீனவர் சங்கத்தின் தலைவர் காளியப்பன் மகேஸ்வரன் தெரிவித்தார். மீனவர்கள் தமது படகுகளைக் கரையில் நிறுத்தி வைக்க முடியாத நிலை காணப்படுகிறது. இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கடற்கரையிலிருந்து கடலில் 40 மீற்றர் தூரம் வரை மீன்பிடியில் ஈடுபடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என மீனவ சங்கத் தலைவர் சுட்டிக்காட்டினார். இடப்பெயர் வின் முன்னர் தமது வீடுகளிலிருந்து கடற்கரையானது 150 மீற்றர் கிட்டிய தூரத்தில் இருந்தது. தற்போது கடலுக்குச் செல்வதற்கு 700 மீற்றர் தூரத்தைக் கடந்து செல்ல வேண்டியுள்ளதாக காளியப்பன் மகேஸ்வரன் தெரிவித்தார்.

இராணுவத் தடைகள் காரணமாக இரண்டு அல்லது மூன்று நாட்களில் ஒரு தடவை மட்டுமே மீனவர்கள் கடலில் மீன்பிடிக்க முடியும். இதனால் இவர்களது வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது.

இடப்பெயர்விற்கு முன்னர் மீன்பிடிக்குச் செல்வதற்கான தடை விதிக்கப்பட்ட நேரங்களில் தனது நிலத்தில் கச்சான் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டதால் வருமானத்தைப் பெற முடிந்ததாக மகேஸ்வரன் தெரிவித்தார். எனினும், தற்போது இப்பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கான சாத்தியம் இல்லை எனவும் மாதிரிக் கிராமத்தில் பொதுக் கிணறுகளிலேயே நீரைப் பெற்றுக்கொள்ள முடிவதாகவும் இவர் குறிப்பிட்டார்.

வேலைவாய்ப்பின்மை, வாழ்க்கை முறைமை மாற்றமுற்றமை போன்றன கிராமத்து இளைஞர்களை மோசமான நிலைக்குக் கொண்டு செல்வதாக கிராமத்தவர்கள் கூறினார்கள். மக்கள் சட்டவிரோத மதுபானத்தைப் பாவிக்கின்றனர். பொலிஸார் அடிக்கடி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டாலும் கூட, இவ்வாறான சட்டவிரோத மது உற்பத்தியாளர்களிடமிருந்து மிகக் குறைந்தளவு தண்டப்பணத்தையே அறவிடுகின்றனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)


★ வலம்புரி கல்விப்பிரிவு ★

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## பௌதிகவியல் பகுதி-I    கொழும்பு றோயல் கல்லூரி

1) பின்வரும் பௌதிகக்கணியங்களைக் கருதுக.
(A)தொடர்ப்டர்த்தி (B)தொடர்பு வேகம் (C)தொடர்பு அனுமதித்திறன்
(D)தொடர்பு ஈரப்பதன் (E)ஒலிச்செறிவு மட்டம்
அலகும் பரிமாணமும் உள்ள கணியம்/கணியங்கள்
(1)(B) (2)(B),(E) (3)(C),(E) (4)(A),(B),(E) (5)(B),(C),(E)

2) சர்வசமனான A,B,C எனும் மூன்று மரக்குற்றிகள் கரடான கிடை மேற்பரப்பில் ஓய்வில் உள்ளன. அவற்றில் உருவில் காட்டப்பட்டுள்ள திசைகளில் F பருமனுடைய விசைகள் தொழிற்படுகின்றன. அவை ஆர்முடுகுமாயின் அவற்றின் ஆர்முடுகல்கள் முறையே $a_A, a_B, a_C$ ஆயின்





1) $a_A > a_B > a_C$ ஆகும் 2)$a_C > a_A > a_B$ ஆகும் 3)$a_A > a_C > a_B$ ஆகும்
4) $a_A = a_B = a_C$ ஆகும் 5)$a_A > a_B > a_C$ ஆகும்

3) சிலுங்கியைப் பயன்படுத்தி செய்யப்படுகின்ற பரிசோதனைகள் மூலம் அவதானிக்க முடியாதது?
(1)குறுக்கு,நெட்டாங்கு விருத்தி அலைகள்
(2)குறுக்குத்துடிப்பின் தெறிப்பு
(3)குறுக்குத்துடிப்பின் மேற்பொருந்துகை
(4)குறுக்கு நின்ற அலை
(5)குறுக்கு அலைகளின் முறிவு

4) கடத்திக்கோளமொன்றின் மின் கொள்ளளவம் தங்கியுள்ள காரணிகள்
(A) கடத்திக்கோளத்திலுள்ள சுயாதீன இலத்திரன்கள் அடர்த்தி
(B) கடத்திக்கோளத்திற்கு வெளியேயுள்ள ஊடகம்
(C) கடத்திக்கோளத்தின் ஆரை
(D) கடத்திக்கோளத்தின் மேற்பரப்பின் இயல்பு
இவற்றுள்
(1) (C) இல் மாத்திரம் ஆகும்
(2) (B),(C) ஆகியவைகளில் மாத்திரம் ஆகும்
(3) (A),(B),(C) ஆகியவைகளில் மாத்திரம் ஆகும்
(4) (B),(C),(D) ஆகியவைகளில் மாத்திரம் ஆகும்
(5) (A),(B),(C),(D) ஆகிய யாவற்றிலும் ஆகும்.


5) அண்ணளவாக 1cm ஆரையுடைய உலோகத் திண்மக் கோளமொன்றின் உட்பகுதியில் வளிக்குழியொன்று உள்ளது.கோளத்தின் அடர்த்தி தெரியுமாயின் வளிக்குழியின் கனவளவைத் துணிவதற்குத் தேவையான ஆய்வுகூட உபகரணம்/உபகரணங்கள்
(1)இலத்திரனியல் தராசு,நுண்மானித்திருகுக்கணிச்சி
(2)நீருள்ள அளவு சாடி,நுண்மானித்திருகுக்கணிச்சி
(3)கோளமானி,நுண்மானத்திருகுக்கணிச்சி
(4)நகரும் நுணுக்குக்காட்டி,இலத்திரனியல் தராசு
(5)வேணியர் இடுக்கிமானி,கோளமானி

6) இரு முனைகளும் ஈர்க்கப்பட்டுள்ள 20cm நீளமுடைய இழை இரண்டாம் மேற்றொனியில் அதிருமாயின் இழையில் 8cm இடைத்தூரத்திலுள்ள இரு புள்ளிகளுக்கிடையில் அவத்தை வித்தியாசம்



1)0 2) $\pi$ 3)0 அல்லது 4)0 அல்லது $\pi/2$ 5) அல்லது $\pi/2$


7) எளிய இசை இயக்கத்தை ஆற்றும் துணிக்கையொன்றின் இடப்பெயர்ச்சி (y)-நேர (t) வரைபு காட்டப்பட்டுள்ளது. இவ்வியக்கத்திற்கான உயர் ஆர்முடுகல்





1)$0.4\pi^2 ms^{-2}$ 2) $1.33\pi^2 ms^{-2}$ 3)$2\pi^2 ms^{-2}$ 4) $4\pi^2 ms^{-2}$ 5)$4.6\pi^2 ms^{-2}$

8) ஒலி விரியலாக்கியொன்றின் பயப்பு வலு 100mw இலிருந்து 1 W வரை அதிகரிக் கப்படுகின்றது. இதற்கொத்த ஒலிச்செறிவு மட்ட அதிகரிப்பு
(1) 10 dB (2)20 dB (3) 22 dB (4)28 dB (5)30 dB


9) மூன்று வித்தியாசமான இசைக்கருவிகள் ஒலிக்கப்படும் போது உருவாகும் அலைகள் உருவில் காட்டப்பட்டுள்ளது.இவ்வலைகளில் ஒலியின் எவ்வியல்பை அவதானிக்க முடியும்?
(1)பரிவு
(2)அடிப்பு
(3)பண்பு
(4)சுரம்
(5)மேற்பொருந்துகை





10) இசைக்கவையொன்றை அதிரச் செய்து அதன் பிடியை சுரமானி பெட்டி மீது அழுத்திப் பிடிக்கப்படுகின்றது. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
(A)இசைக்கவையின் புயங்கள் குறுக்காக அதிரும்
(B)இசைக்கவையிலிருந்து அதிரும் சக்தியானது பெட்டிக்கு ஊடுகடத்தப்படும் கதியானது இசைக்கவை ஆக்கப்பட்ட திரவியத்தின் அடர்த்தியில் தங்கியுள்ளது.
(C)அழுத்தப்படும்போது ஏற்படும் அதிர்வுச்சக்தியானது சிறிய நேரத்தில் விடுவிக்கப் படுவதால் உரத்த ஒலியைச் செவிமடுக்க முடிகின்றது.
இக்கூற்றுக்களில்
(1) (A) மாத்திரம் உண்மையானது
(2) (A),(C) ஆகியன மாத்திரம் உண்மையானவை
(3) (B),(C) ஆகியன மாத்திரம் உண்மையானவை
(4) (A),(B) ஆகியன மாத்திரம் உண்மையானவை
(5) (A),(B),(C) ஆகிய யாவும் உண்மையானவை

11)



நேர் ஏற்றத்தினால் ஏற்றப்பட்டுள்ள கடத்தி கோளத்தின் மையத்திலிருந்து குறித்த தூரத்தில் x அச்சு வழியே கடத்தியொன்று உள்ளது.x அச்சு வழியே மையத்திலிருந்தான தூரம்(x) உடன் மின்அழுத்தம் (V) மாறுவதைக் காட்டும் வரைபு






12) மத்தியில் பொருத்தப்பட்டுள்ள கோல் நெட்டாங்காக அதிரச்செய்யும் போது அடிப்படைச் சுரத்திற்கான மீடிறன் 500Hz ஆகும்.அதிரும் சக்தி கோலின் ஒரு முனையிலிருந்து அடுத்த முனைக்கு செல்வதற்கு எடுக்கும் நேரம்



1) 1ms 2)2 ms 3)2.5ms 4)5ms 5)1 s


13) A,B என்னும் முறையே $C_1, C_2$ கொள்ளளவுடைய கொள்ளளவிகளில் $C_1 > C_2$ ஆகும்.ஆளி K ஐ a உடன் தொடுத்து A ஆனது முற்றாக ஏற்றப்படுகின்றது. பின்னர் ஆளி K ஆனது b உடன் தொடுத்து B ஆனது முற்றாக ஏற்றப்படுகின்றது. ஏற்றும்போது A,B இல் சேமிக்கப்பட்டுள்ள ஏற்றம் (Q) ஆனது நேரத்துடன (t) மாறுவதைக் காட்டும் வரைபு





14) புவியைச் சுற்றிய வட்டமண்டிலத்தில் இயங்கும் செய்மதியொன்றின் ஆவர்த்தனகாலம் T ஆகும். வட்டமண்டிலத்தில் ஆரை அரைமடங்காக்கப்பட்டால் தற்போது ஆவர்த்தனகாலம்
(1) $\frac{T}{2\sqrt{2}}$ (2) $\frac{T}{\sqrt{2}}$ (3) $\frac{T}{8}$ (4) $\frac{T}{4\sqrt{2}}$ (5) $\frac{T}{2}$


15) உருவில் காட்டப்பட்டுள்ளவாறு அமைக்கப்பட்டுள்ள பாதையில் பயணம் செய்யக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி வாகனத்தின் சரியான வடிவத்தைத் தருவது







16) பார்வைக்குறைபாடுள்ள ஒருவனின் அண்மைத்தூரம் 25cm ஐ அவதானிப்பதற்கு 50cm குவியத்தூரமுடைய வில்லையைப் பயன்படுத்துகின்றார். இந்நிலையில் கண் வில்லையின் குவியத்தூரம் (கண்ணின் விட்டம் 2.5cm ஆகும்)
1) 50/11 cm 2)50/21 cm 3)2.5 cm 4) 0.5 cm 5) 5/3 cm

17) செங்கோண அரியமொன்றின் முகங்களுக்கு முன் $O_1, O_2, O_3$ மூன்று பொருட்கள் உருவில் காட்டப்பட்டுள்ளவாறு வைக்கப்பட்டுள்ளன. $E_1, E_2, E_3$ எனும் மூன்று நிலைகளில் பொருள் அவதானிக்கப்படுகின்றது. அரியத்தின் முறிவுச்சுட்டி 1.5 ஆகும். பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.





(A) கண் $E_1$ இற்கு $O_1$ இன் தலைகீழான மெய்விம்பத்தை அவதானிக்கலாம்
(B) கண் $E_2$ இற்கு $90^o$ திரும்பலடைந்த $O_2$ இன் மாய விம்பத்தை அவதானிக்கலாம்
(C) கண் $E_3$ இற்கு $O_3$ இன் தலைகீழான மெய்விம்பத்தை அவதானிக்கலாம்
உண்மையானது/உண்மையானவை
1) (A) மாத்திரம் 2) (B) மாத்திரம் 3) (C) மாத்திரம்
4) (A),(C) ஆகியன மாத்திரம் 5) (A),(B),(C) ஆகிய யாவும்

18) 4m நீளமுடைய அழுத்தமானிக் கம்பியானது ஒவ்வொன்றும் 1m நீளமுடைய 1,2,3,4 எனும் நான்கு கம்பிகளைக் கொண்டுள்ளது. தடையி $R_1$ உடனான சமநிலை நீளம் மூன்றாம் கம்பியின் மத்தியில் பெறப்பட்டது.$(R_1+R_2)$ உடனான சமநிலை நீளம் இரண்டாம் கம்பியின் மத்தியில் பெறப்பட்டது.$R_1/R_2$ விகிதம் ஆனது




1) 2/3 2) 3/2 3) 5/3 4) 2 5) 3

19) உருவில் காட்டப்பட்டுள்ள தர்க்கப் படலைக்கு ஒத்த உண்மை அட்டவணை




(1)

| A | B | F |
|---|---|---|
| 0 | 0 | 1 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 |
| 1 | 1 | 1 |

(2)

| A | B | F |
|---|---|---|
| 0 | 0 | 0 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 |
| 1 | 1 | 1 |

(3)

| A | B | F |
|---|---|---|
| 0 | 0 | 0 |
| 0 | 1 | 1 |
| 1 | 0 | 1 |
| 1 | 1 | 0 |


(4)


| A | B | F |
|---|---|---|
| 0 | 0 | 1 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 |
| 1 | 1 | 0 |

(5)

| A | B | F |
|---|---|---|
| 0 | 0 | 0 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 1 |
| 1 | 1 | 1 |

20)A,B எனும் முறையே $m_1, m_2$ திணிவுகளையுடைய $(m_1 > m_2)$ இரு பொருட்கள் ஒப்பமான கப்பிக்கு மேலாக செல்லும் இலேசான இழையின் இரு முனைகளுக்கு இணைக்கப்பட்டு இழை தொய்யாதவாறு பிடிக்கப்பட்டு ஓய்விலிருந்து விழவிடப்படுகின்றது.சிறிய நேரம் ஆர்முடுகிய பின்னர் இழை அறுகின்றது. பொருள் B ஆனது கப்பியில் மோதாது எனின் ஆரம்பத்திலிருந்து A,B ஆகியவைகளின் இயக்கங்களுக்கான வேக(V) நேர (t) வரைபு





21)$1m^3$ கனவளவுடைய சிறிய மூடிய அறையில் வளியின் வெப்பநிலை $30^o C$ யும் தொடர்பு ஈரப்பதன் 80% உம் ஆகும்.வளியின் வெப்பநிலை $20^o C$ ஆகும் போது அறை நிரம்பலடைந்துள்ளதுடன் ஒடுங்கிய நீர் அகற்றப்பட்டது.மீண்டும் வளியின் வெப்பநிலை $30^oC$ ஆகும் வரை அதிகரிக்கப்பட்டால் தற்போது தொடர்பு ஈரப்பதன் ($30^o C$, $20^o C$ வெப்பநிலைகளில் நிரம்பலாவியின் தனி ஈரப்பதன் முறையே $30 \times 10^{-6}$ KG $M^{-3}$ உம் $17.4 \times 10^{-6} kg\ m^{-3}$ உம் ஆகும்)
1) 58% 2) 54% 3) 17.4% 4)22% 5)24%


22) நீரின் மும்மைப்புள்ளி வெப்பநிலையிலும் வெப்பநிலை θ இலும் வெப்ப இணையின் மி.இ.வி. முறையே 2mV உம் 2.4 mV உம் ஆகும். வெப்பநிலையுடன் வெப்பமான இயல்பின் மாற்றம் ஏகபரிமானது ஆயின் θ இன் பெறுமானம்
(1) $(273.16 \times 1.2 - 273)$ °C (2) $(273.15 \times 1.2 - 273.16)$ °C (3) $(273.16 \times 1.2 - 273.15)$ °C
(4) $\left(\frac{273 \times 1.2}{273.16}\ 27315\right)$ °C (5) $\left(\frac{273.15 \times 1.2}{273.16}\right)$ °C

23)குவிவு வில்லைக்கு முன்னால் 19 cm தூரத்தில் ஒளிர்பொருள் O உள்ளது.தலைமை அச்சுக்குச் செங்குத்தாக 1.5 முறிவுச்சுட்டியும் 3 cm தடிப்புமுடைய செவ்வக வடிவான கண்ணாடிக்குற்றியொன்று உருவில் காட்டப்பட்டுள்ளவாறு வைக்கப்பட்டுள்ளது. வில்லையிலிருந்து 36cm தூரத்தில் O இன் மெய்விம்பம் பெறப்பட்டது. வில்லையின் குவியத்தூரம்




1) 8.0cm 2)8.2cm 3)9.0cm 4)12.0cm 5) 18cm

24)அடிப்பரப்பளவு A உடைய பாத்திரமொன்றில் பொருளொன்று வைக்கப்பட்டு பாத்திரமொன்றில் $h_o$ ஆழத்திற்கு அமிழ்ந்து மிதக்கின்றது. தற்போது பொருள் உருவில் காட்டப்பட்டுள்ளவாறு இலேசான இழையினால் தொங்கவிடப்பட்டபோது பாத்திரம் அமிழ்ந்து மிதக்கும் ஆழம் h ஆகும். பொருளின் கனவளவு




(1) $\frac{A h_0}{8}$ (2) $\frac{A h_0}{4}$ (3) $\frac{A(h_0 \mp h)}{2}$ (4) $A(h_0 - h)$ (5) $\frac{A(h_0 - h)}{4}$

14 ஆம் பக்கம் பார்க்க...

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## இணைந்த கணிதம் பகுதி-II

Teacher:T.Vijaenthiran (BSc, Dip, in.Ed) J/H/C

நேற்றைய தொடர்ச்சி...

### பகுதி - B

11. a.8U என்னும் சீரானகதியுடன் செல்லும் புகைவண்டி பாதை திருத்தப்படுவதால் தனது கதி 2U ஆகக் குறையும் வரை 2f எனும் அமர்முடுகலுடன் இயங்குகிறது. அக்கதி அடுத்த a தூரத்திற்கு நிலை நிறுத்தப்பட்டு அதன் பின்பு மீண்டும் 8U கதியை அடையும் வரை புகைவண்டி f எனும் ஆர்முடுகலுடன் இயங்கியது. வேகநேரவரைபை வரைந்து இதன்மூலம்,

i.அமர் முடுகியநேரம்

ii.ஆர் முடுகியநேரம்

iii.சீரானகதியில் இயங்கியநேரம் என்பவற்றைக் காண்க.

iv.பாதை திருத்தப்படுவதால் ஏற்பட்டதாமதம் $3\left(\frac{9U^2+af}{8Uf}\right)$ எனக் காட்டுக.

b.ஆறு ஒன்று U எனும் சீரான கதியுடன் கரைகளிற்குச் சமாந்தரமாகப் பாய்கிறது. ஆற்றின் கரைகளில் ஒன்றில் புள்ளி Aயும், மற்றையதில் புள்ளி Bயும் உள்ளது. AB ஆனது ஆறு பாயும் திசையுடன் கூர்ங்கோணம் $\alpha$ ஐ அமைக்கின்றது. ஆறு தொடர்பாக 3U கதியுடன் நீந்தக்கூடிய P, Q எனும் இருவர் முறையே A இலிருந்தும் B இலிருந்தும் AB, BA வழியாக நீந்திச் செல்கின்றனர். அதற்கு எடுத்தநேர விகிதம் 2 : 3 ஆகும்.

i.$\cos\alpha = \frac{1}{\sqrt{3}}$ எனக் காட்டுக.

ii.இருவரும் எடுத்த மொத்த நேரம் $\frac{5d}{4\sqrt{3}U}$ எனக் காட்டுக. இங்கு AB = d ஆகும்.

12. a. ABC என்பது M திணிவுள்ள ஒழுங்கான ஆப்பு ஒன்றின் மையக் குறுக்கு வெட்டாகும் ஆப்பிற்கு AB மேசையுடன் தொடுகையிலிருந்தவாறு இயங்கச் சுயாதீனமுடையது. கோணம் $ACB = 90°$ ,கோணம் $CAB = \alpha$ , $m_1$, $m_2$ எனும் திணிவுகளுள்ள P, Q என்னும் இரு துணிக்கைகள் ஆப்பின் C எனும் புள்ளிக்கு அண்மையில் வைக்கப்பட்ட பின் தொகுதி முழுவதும் ஓய்விலிருந்து மென்மையாக விடுவிக்கப் படுகின்றது. ஆப்பினதும் துணிக்கைகளினதும் ஆர்முடுகல்களைத் துணிவதற்குப் போதிய எண்ணிக்கையான சமன்பாடுகளை எழுதுக. பின்னர் நிகழும் இயக்கத்தில் PQ என்றகோடு கிடையாக இருந்தால் $M\cos 2\alpha = m_1\sin^2\alpha - m_2\cos^2\alpha$ எனக் காட்டுக.

b. நீளமான இலேசான நீளா இழையொன்றின் ஒருமுனை பூரணமான கரடான கிடைமேசை மீது ஓய்விலிருக்கும் M திணிவுடைய சுமை A இற்கு இணைக்கப்பட்டுள்ளது. இழையின் மறுமுனை A இலிருந்து a தூரத்தில் பிடிக்கப்பட்டு m திணிவுடைய துணிக்கை B இற்கு இணைக்கப்பட்டு இத்துணிக்கை மேசையிலிருந்து U எனும் வேகத்துடன் நிலைக்குத்தாக மேனோக்கி எறியப்படுகின்றது. சுமை A ஓய்விலுள்ளதெனக் கொண்டு AB கிடையுடன் $\theta$ கோணத்தை ஆக்கும் போது இழையில் உள்ள இழுவையைக் காண்க. சுமை A மீதான மேசையின் செவ்வன் மறுதாக்கம்,

$$Mg\left[1 - \frac{m}{M}\sin\theta\left(\frac{U^2}{ag} - 3\sin\theta\right)\right]$$ எனக் காட்டுக.

இக்கோவையின் மிகக் குறைந்தபெறுமதியைக் கண்டு இதிலிருந்து,

i. $3 \le \frac{U^2}{ag} \le 6$ எனவும்

ii.B ஒருஅரைவட்டத்தில் இயங்கும போது $\frac{m}{M} > \frac{1}{12}\left(\frac{U^2}{ag}\right)^2$ எனின், சுமை A மேசையுடன் தொடுகையில் இருக்கும் எனவும் காட்டுக.

13. a. $x = a\sin\omega t$ எனும் வடிவில் இயங்கும் துணிக்கையின் இயக்கம் ஓர் எளிமை இசை இயக்கம் எனக் காட்டி, யாதாயினும் ஓர் நிலையில் அதன் வேகம் $x^2 = \omega^2(a^2 - x^2)$ எனக் காட்டுக.

b.O வை மையமாகவும் M திணிவாகவும் உடைய ஓர் வட்டத்தட்டு ஓர் கிடை மேசையில் வைக்கப்பட்டுள்ளது. இயற்கை நீளம் a யும் மீள்தன்மை மட்டு mg உம் உடைய ஒரு மீள்தன்மை இழையின் ஒரு முனை O இற்குக் கட்டப்பட்டு இழையின் மறுமுனையில் m திணிவுடைய ஒரு துணிக்கை கட்டப்பட்டு துணிக்கையானது தட்டின் மையம் O இல் வைக்கப்பட்டு துணிக்கைக்கு நிலைக்குத்தாக மேல்நோக்கி $\sqrt{5ag}$ வேகம் கொடுக்கப்படுகிறது. பின்னர் நடைபெறும் இயக்கத்தில் தட்டு ஓய்வில் உள்ளது. M > m எனக் காட்டி துணிக்கையானது O விற்குத் திரும்ப எடுத்தநேரம் $2\sqrt{a/g}\left[\sqrt{5} - \sqrt{3} + \frac{\pi}{3}\right]$ எனக் காட்டுக.


14. a.A, B, C, D என்பனநாற்பக்கல் ஒன்றின் உச்சிகள் ஆகும். இங்குA=(0, 0), B=(0,2), C=(-2, 3), D=(-4, 1)ஆகும். புள்ளிகள் A, B, C, D என்பவற்றில் முறையே $2i, -6i + 3j, -2i - 4j, 4i + j$ எனும் விசைகள் தாக்குகின்றன. தொகுதியை ஆள்கூற்று அச்சில் கூறு வடிவில் குறித்துக்காட்டுக. வழமையான குறியீடுகளின் படி X, Y, $G_0$ ஐக் கண்டுதாக்கக்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.

b. (i)காவி a காவி b என்பன பூச்சியமற்ற காவிகளாகவும் $|a| = a, |b| = b$ ஆகவும் இருப்பின் காவி c = b a + a b என்பது a, b இற்கு இடைப்பட்ட கோணத்தை இருகூறிடும் எனக்காட்டுக.

(ii)காவி ~ ஆனது காவிகள் b,c இற்குச் செங்குத்தாக இருப்பின் $\lambda c + \mu b$ என்பது காவி a இற்கு செங்குத்தானது எனக் காட்டுக. (இங்கு $\lambda, \mu$ மாறிகள் ஆகும்.)

15. a.AB, BC, AC ஆகிய மூன்று சீரான சமநீளமுடைய கோல்கள் A, B, C இல் ஒப்பமாக மூட்டப்பட்டுள்ளன. CA, AB ஒவ்வொன்றும் W நிறையும் BC ஆனது 2W நிறையுமுடையன. இது C இலிருந்து சுயாதீனமாகத் தொங்கவிடப்பட்டால் BC கிடையுடன் $\tan^{-1}\left(\frac{4}{\sqrt{3}}\right)$ எனும் கோணத்தை அமைக்கும் எனக்காட்டி, மூட்டு A இலுள்ளமறுதாக்கங்களைக் காண்க.

**b.** மேலேயுள்ள படம் A, B, C, D இல் சுயாதீனமாகப் பிணைக்கப்பட்ட இலேசான கோல்கள் AB, BC, CD, DA, BD இன் நிலைக்குத்தான சட்டப் படலைக் காட்டுகின்றது. C இல் ஒருசுமை W பிரயோகிக்கப்படுகிறது. A, B எனும் புள்ளிகளில் தாக்கும் நிலைக்குத்து விசைகளினால் தாங்கப்படுகிறது. தகைப்பு வரிப்படம் வரைவதன் மூலம் இழுவைகளையும் நெருக்கல்களையும் காண்க .




இவ் வினாத்தாளுக்குரிய விடைகளை www.facebook.com/ valampurii எனும் முகநூலிலும் www.valampurii.lk என்ற இணையத்தள முகவரியிலும் பார்வையிடலாம்.

16. a.ஆரையுடைய திண்ம அரைக்கோளத்தின் ஈர்வை மையத்தை மையத்திலிருந்து காண்க.

a)aஆரையுடைய திண்ம அரைக்கோளம் ஒன்று அதன் வளைந்த மேற்பரப்பானது கரடான கிடைத்தரை ஒன்றையும் கரடான நிலைக்குத்துச் சுவர் ஒன்றையும் தொட்டுக் கொண்டிருக்க ஓய்வில் இருக்கிறது. இரு தொடுகைப் புள்ளிகளிலும் உராய்வுக் குணகம் $\mu$ ஆகும். அரைக்கோளம் நழுவும் தறுவாயிலிருப்பின் தரையினதும் சுவரினதும் மொத்த மறுதாக்கங்கள் சுவரிலிருந்து $\frac{a(1-\mu)}{1+\mu^2}$ தூரத்தில் உள்ள புள்ளியில் இடைவெட்டும் எனக்காட்டி, தள அடியானது $\sin\alpha = \frac{8\mu(1+\mu)}{3(1+\mu^2)}$ ஆல் தரப்படும் ஒருகோளம் $\alpha$ இல் சாய்ந்திருக்கும் எனக் காட்டுக.

b)W நிறையும் a ஆரையுமுள்ள சீரான திண்ம அரைக் கோளமானது விளிம்பில் கட்டப்பட்ட நீளா இழையால் ஒப்பமான சுவரில் கட்டப்பட்டுத் தொங்குகிறது. வளைபரப்பு சுவரைத் தொட்ட வண்ணம் சமநிலையில் உள்ளது. இழை, வட்ட அடி என்பன முறையே நிலைக்குத்துடன் அமைக்கும் கோணங்கள் $\theta, \alpha$ எனின் $8(\tan\alpha - \tan\theta) = 3$ எனக் காட்டுக. (திண்மஅரைக்கோளத்தின் ஈர்வை மையம் மையத்திலிருந்து $\frac{3a}{8}$ ஆகும்.)

17. a.ஓர் ஒழுங்கற்ற தாயக்கட்டை எறியப்படும் போது பெறப்படும் நிகழ்ச்சிகளையும் அவற்றுக்குரிய நிகழ்தகவுகளும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| முகம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| நிகழ்தகவு | 0.1 | 0.32 | 0.21 | 0.15 | 0.05 | 0.17 |

இத்தாயக்கட்டை எறியப்படும் போது இலக்கம் 1 அல்லது 2 பெறப்பட்டிருப்பின் பெறப்பட்ட இலக்கம் 1 ஆக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

b.

| வகுப்பாயிடை | 0 - 10 | 10 - 20 | 20 - 30 | 30 - 40 | 40 - 50 |
|---|---|---|---|---|---|
| மீடிறன் | 8 | 15 | 12 | 9 | 6 |


இப்பரம்பலின் இடை, இடையம், ஆகாரம், நியமவிலகல் என்பவற்றைக் காண்க.

## பௌதிகவியல் பகுதி-I தொடர்ச்சி

25)வளியில் விழும் கோள மழைத்துளியொன்றின் முடிவுவேகம் $V_o$ ஆகும்.தொடர்படர்த்தி d உம் அதே ஆரையுமுடைய இலேசான கோளமொன்றின் வளியில் முடிவுவேகம் (வளியின் தொடர்புபடுத்தி $d_o$ ஆகும்)


(1) $\frac{v_0(d-d_0)}{(d+d_0)}$ (2) $\frac{v_0(d-d_0)}{(1-d_0)}$ (3) $\frac{v_0(1-d_0)}{(d-d_0)}$ (4) $\frac{v_0(1+d_0)}{(d-d_0)}$ (5) $\frac{v_0 d}{d_0}$

26) கிடை அச்சுப்பற்றி நிலைக்குத்தாக சுழலக்கூடிய ஆரை r உடைய கரடான மேற்பரப்புடைய உருளையொன்றின் மேற்பரப்பு வழியே உருவில் காட்டப்பட்டுள்ளவாறு m திணிவுடைய எலியொன்று மாறாக்கதியுடன் மேல் நோக்கி பயணிக்கின்றது.ஆனால் அச்சு சார்பாக எப்போதும் எலி கிடையுடன் $\theta$ கோணத்தில் உள்ளது.அச்சினால் உருளை மீது ஏற்படுத்தப்படும் உராய்வு முறுக்கம்





(1)mg r cos$\theta$ (2)mg r (3)mg r sin$\theta$
(4) mg $r^2$ sin$\theta$ (5)mg $r^2$ cos$\theta$

27)மீன் தாங்கியொன்றின் முன்பகுதியிலுள்ள கண்ணாடித்தட்டின் தடிப்பு 9cm ஆகும். கண்ணாடிக் குற்றிக்கு முன் வளியில் பூச்சியொன்று (O) உள்ளது. நீரிலுள்ள மீனுக்கு பூச்சியின் தோற்ற இடப்பெயர்ச்சி புள்ளி O இலிருந்து (நீரின் முறிவுச்சுட்டி=4/3 , கண்ணாடியின் முறிவுச்சுட்டி=3/2)




1) 2 cm நோக்கி தோன்றும் 2) 2 cm விலக்கி தோன்றும்
3) 3 cm விலக்கி தோன்றும் 4) 4 cm விலக்கி தோன்றும்
5) 4 cm நோக்கி தோன்றும்

28)உருவில் காட்டப்பட்டுள்ளவாறு கையில் பையொன்றுடன் மனிதன் கரடான கிடையான தளத்தில் ஓய்விலிருந்து சீரான ஆர்முடுகலுடன் முன்னோக்கிச் செல்கின்றான். இயக்கத்தை ஆரம்பித்து t நேரத்தில் எதிர்பாராத விதமாக ஒப்பமான தளத்தினுள் புகுகின்றான். மேலும் t நேரம் வரை தள்த்தில் வழுக்கிச்சென்ற பின்னர் அவனின் கையிலிருந்து பை விழுகின்றது.மேலும் t நேரம் வரை ஆரம்பத்திலிருந்து மனிதனின் இயக்கத்திற்கான வேக (V)- நேர (t) வரைபு







29) திருசியமானியிலுள்ள யாவும் சரியாக செப்பஞ் செய்யப்பட்டிருப்பின் பின்வருவனவற்றுள் எது உண்மையற்றது?

1) நேர்வரிசையாக்கியிலுள்ள பிளவு நிலைக்குத்தாக இருக்கும்.
2)நேர்வரிசையாக்கியிலுள்ள பிளவிற்கும் அதன் வில்லைக்கும் இடைப்பட்ட தூரம் வில்லையின் குவியத்தூரத்தைத் தரும்
3)குறுக்குக்கம்பி தொலைகாட்டியிலுள்ள பார்வைத்துண்டின் குவியத்தில் இருக்கும்
4)குறுக்குக்கம்பியின் பிரகாசமான விம்பத்தை பார்வைத்துண்டில் இருப்பதை அவதானிக்கலாம்
5) நேர்வரிசையாக்கி தொலைகாட்டி ஆகியவைகளின் அச்சுக்கள் ஒரே தளத்தில் இருக்கும்.

மிகுதி திங்கட்கிழமை வெளிவரும்

## மின்சார நாற்காலியிலிருந்து காப்பாற்றிய

# மைத்திரியை மகிந்த வணங்க வேண்டும்


## அமைச்சர் ரங்கே பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

**மின்சார நாற்காலி தண்டனையிலிருந்து காப்பாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விழுந்து வணங்க வேண்டுமென அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், சர்வதேச போர்க் குற்ற நீதிமன்றம் மற்றும் மின்சார நாற்காலி தண்டனையிலிருந்து மகிந்த ராஜபக்ஷவை, ஜனாதிபதி மைத்திரிபால காப்பாற்றியுள்ளார்.



எனவே ஜனாதிபதியை வெள்ளை கைக்குட்டை ஒன்றை கீழே இட்டு ஜனாதிபதியை மகிந்த வணங்க வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ விஹாரைகளுக்குச் சென்று அரசாங்கத்தையும், ஜனாதிபதியையும் திட்டுவதனை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் குற்றச்சாட்டுக்களை நாடாளுமன்றில் அவர் வெளிப்படுத்த வேண்டும்.

எனினும் நாடாளுமன்றிற்குச் செல்லாமல் ஆட்சியில் இருந்த காலத்தில் செயற்பட்ட எதனோல்காரர்கள், கப்பம் கோருபவர்கள் மற்றும் குற்றவாளிகளைக் கொண்ட குழு ஒன்றை உருவாக்கி ஜனாதிபதியை விமர்சனம் செய்து வருகின்றார்.

பன்றிக்கு அழுக்கு இன்றி வாழ முடியாது. அதே போன்று இவர்களுக்கும் அழுக்கு இன்றி வாழ முடியாத நிலைமை காணப்படுகின்றது.

மகிந்த ராஜபக்ஷ மக்கள் மீது கரிசனை கொண்ட தலைவராக நான் பார்க்கவில்லை. வற்வரி தொடர்பில் போராட்டம் நடத்தப்படுகின்றது.

அதிகளவில் சில்லறை வர்த்தகர்களே இந்தப் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். எனினும் இவர்களில் பலர் வற்வரி செலுத்துவதற்காக பதிவு செய்து கொண்டவர்கள் அல்ல என பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். (இ-7-10)

# ஆயுதக் களஞ்சியம் வெடிப்பு; நிவாரணப் பணிகள் பூர்த்தி

வெள்ளம், மண்சரிவு மற்றும் சாலாவ இராணுவ ஆயுதக் களஞ்சிய வெடிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான கொடுப்பனவுகள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவர்களை குடியேற்றுவதற்கான மாற்றுக்காணிகளை அடையாளம் காணும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிரதமரிடம் நேரடி பதிலைப்பெறுவதற்கான கேள்வி நேரத்தின்போது கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட கொழும்பு மாவட்டத்துக்கு 109 மில்லியன் ரூபாவும், கம்பஹா மாவட்டத்துக்கு 152 மில்லியன் ரூபாவும், புத்தளம் மாவட்டத்துக்கு 9 மில்லியன் ரூபாவும், கேகாலை மாவட்டத்துக்கு 20 மில்லியன் ரூபாவும், இரத்தினபுரி மாவட்டத்துக்கு 4 மில்லியன் ரூபாவும், களுத்துறை மாவட்டத்துக்கு 6 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாவட்ட அரசாங்க அதிபர்களால் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாகவும் அவர் இதனபோது கூறினார்.

அத்துடன், இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் மண்சரிவினால் பாதிக்கப்பட்டு தமது வீடுகளிலிருந்து வெளியேறியுள்ள மக்களுக்கு தனியார் பெருந்தோட்ட நிறுவனங்களின் மாற்று இடங்களைப் பெற்று வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் சாலாவ இராணுவ முகாம் ஆயுத களஞ்சிய வெடிப்புச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட 276 வீடுகள் மற்றும் 50 வர்த்தக நிலையங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவை வழங்குவதற்காக கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கு 18 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இலங்கையிலுள்ள தனியார் ஊடகங்கள் அரசை விமர்சிக்கின்றன-ஜனாதிபதி கவலை

(கொழும்பு)

இலங்கையிலுள்ள தனியார் வானொலிகள், தொலைக்காட்சிகள் மற்றும் பத்திரிகைகள் அனைத்தும், அரசை விமர்சிக்கும் விதமாகவே செயற்படுகின்றன என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



குறித்த ஊடகங்களில் 80 வீதமான நேரங்கள் அரசை விமர்சிப்பதாகவும், அரசின் கொள்கைகள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்த 20 வீதமான நேரத்தையே ஊடகங்கள் ஒதுக்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையகத்துக்கு நேற்று விஜயம் செய்திருந்த போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

தான் மேற்கொண்ட ஆய்வு ஒன்றின் அடிப்படையிலேயே இதனை தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒன்றரை வருட ஆட்சிய மட்டுமே கடந்துள்ள இந்த அரசை இலங்கையின் தனியார் ஊடகங்கள் இவ்வாறு விமர்சிக்கும்போது இந்த அரசு மீது மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இலங்கையின் தனியார் ஊடகங்கள் இதனைவிட சாதாரணமாக நடந்து கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

# தானம் செய்யுமுன்...

உங்கள் தானத்திற்கு–

–விளம்பர நோக்கம் உண்டா?

– பின்னாலேயே விண்ணப்ப மனு ஒன்று அனுப்பும் எண்ணம் உண்டா?

பிரதிபலனாக எதையும் எதிர்பாராமல்தான் கொடுக்கிறீர்களா?

வாங்கிக் கொள்பவர்கள் இனி நமக்குக் கட்டுப்பட்டவர்கள் என்ற நினைப்போடு தான் தருகிறீர்களா?

–அவர்கள் சரிவரப் பிரதிபலிக்காவிட்டால் வருந்துவீர்களா?

–தவறாக விமர்சித்தால் தாங்கிக் கொள்வீர்களா?

–சம்பந்தப்பட்ட பொருட்கள், சம்பந்தப்பட்ட நபர்களுக்குப் பயன்தரக் கூடியவைதானா?

–தகுதியுடையவர்களுக்குத்தான்,அதன் அருமை தெரிந்தவர்களுக்குத்தான் கொடுக்கிறீர்களா?

– தானம் செய்யப்படும் பொருள் உரியவர்களைச் சென்று அடைகிறதா? முறையாகப் பயன்படுத்தப்படுகிறதா? என்கிற அக்கறையெல்லாம் உண்டா?

மேற்கூறி கேள்விகளுக்கெல்லாம் மனச்சாட்சி விரும்பும் பதில்கள் அமைய வேண்டும் என்பது மிக முக்கியம்.

விளம்பர நோக்கம் கொண்ட தானம் கீழ்த்தரமானது என்பது போக, அதனால் மேற்கொண்டு தொல்லைகளே வரும். நீங்கள் அதற்கு இவ்வளவு கொடுத்தீர்களாமே, இவருக்கு இவ்வளவு செய்தீர்களாமே, இதை ஏன் செய்யக் கூடாது என்பன போல் விடயம் திரும்பி விடும்.

நம்மிடம் தானம் பெற்றவர்கள் நமக்குக் கடமைப்பட்டவர்கள் ஆகமாட்டார்கள்! ஆனால் நன்றிக் கடன்பட்டவர்கள். இது அவரவர்களின் பண்பைப் பொறுத்தது.

நம்மிடம் இருந்து பொருளைப் பெறுகிறவர்கள் நாம் தந்த பொருளைப் பார்த்ததும் ஏகமாய் மகிழ்ச்சி அடைய வேண்டும்; வானத்திற்கும் பூமிக்கும் குதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். சிலர் உணர்ச்சிகளை வெளிக்காட்டுவார்கள்.சிலர் வெளிக்காட்டமாட்டார்கள். அந்த நிமிடத்தின் கவலை, வேறு சிந்தனை ஆகியவை காரணமாகவும் அவர்கள் பிரதிபலிக்காமல் இருக்கக் கூடும்.

சிலர் தானம் கொடுத்த மாட்டின் பல்லைப் பிடித்துப் பார்ப்பார்கள். இதைவிட வேறு கிடைக்கவில்லையாயென்று கேலியும் செய்வார்கள். இது உரிமையோடும், நகைச் சுவை உணர்வோடும் செய்யப்படுவது, இதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை.

பொருட்களை ஏனோ தானோ என்று தானமளிக்காமல் அவரவர்களுக்கு பயன்தரக் கூடிய பொருளாக அளிக்க வேண்டும். கையில்லாதவருக்கும் கல்வியறிவில்லாதவருக்கும் பேனாவைக் கொடுத்து என்ன பயன்?

ஒரு குழந்தை கேட்கிறது என்பதற்காக நாம் மிட்டாயை வாங்கிக் கொடுத்துக் கொண்டே இருக்கலாமா? வேண்டிய ஒருவர் மிகவும் கேட்கிறார் என்பதற்காக அவர் மிகவும் விரும்பும் சாராயத்தை வாங்கித் தருவது சரியில்லையே!

யாரோ ஒருவர் ஏழைகளுக்கு அன்னதானம் போடு கிறோம்; ரசீத்துச் சீட்டை நிரப்பி நன்கொடை கொடுங்கள் என்று கேட்டால், அவர் யார், என்ன, ஏது என்கிற கேள்விகள் எழ வேண்டும். தானம் நிதானத்துடன் செய்யப்பட வேண்டும். நன்கொடை என்ற பெயரால் பணம் சுருட்டுபவர்கள் பெருக்கிவிட்ட இந்த நாளில், நாம் உழைத்துச் சம்பாதித்த பணம் விழலுக்கிறைத்த நீராகி விடக் கூடாது.

தானம் என்பது கொடுக்கும் போதே உள்ளுக்குள் மகிழ்ச்சியைத் தருவதாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட மகிழ்ச்சி அந்தக் கணமே பிறக்காவிட்டால் அது தானமாகாது.

மாறாக–

அது–

வலையில் வீசப்பட்ட இரை!

– தூண்டில் முனையில் வைக்கப்பட்ட புழு. வேறு வகையில் சொல்லப் போனால் – அது ஒரு வகை வியாபாரம்!

**லேனா தமிழ்வாணன்**

# நிலங்களை மீட்க கேப்பாப்புலவு மக்களின் உறுதியான போராட்டம்

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் இவர்கள் மீண்டும் தமது உற்பத்தியில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது. சில குடும்பங்கள் பெண்களின் பொறுப்பில் உள்ளன. இதனால் இந்தப் பெண்கள் தமது குடும்பங்களுக்காக சுமைதாங்கிகளாக மாறியுள்ளனர். இளம்பெண்கள் சிலர் வேலை தேடி கொழும்பு ஆடைத் தொழிற்சாலைகளுக்கும் வேறு தூர இடங்களுக்கும் பயணிக்கின்றனர். பெண்கள் தமது பணிகளை முடித்து விட்டு வீட்டிற்கு காலதாமதமாகி வருவதானது குடும்பங்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்துகிறது. இக்கிராமத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் இராணுவத்திலும் இணைந்துள்ளனர்.



### அதிபர் செயலகத்திற்கான விண்ணப்பம்

தமது சொந்த நிலங்களை வடுவிக்குமாறு கோரி 2012 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியில் கேப்பாப்புலவு வாழ் மக்கள் ஐந்து தடவைகள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டுள்ளனர். இதன்விளைவாக 2015இல் இந்த மக்கள் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மற்றும் தொழிற்றுறை மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாட் பதியுதீனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இவர்கள் இந்த அமைச்சர்களிடம் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கான வழியை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்தனர். இந்த மக்கள் ஜனாதிபதி செயலகத்திற்கும் தமது நிலைப்பாட்டை எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளனர். இவர்கள் 60 நிலப் பத்திரத்தின் பிரதிகளை இணைத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி யுள்ளனர்.

இரண்டு பிள்ளைகளின் தாயொருவர் தனது சொந்த நிலத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். இவருடன் மேலும் மூவர் தமது சொந்த நிலத்தைத் திருப்பித் தருமாறு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். பாதுகாப்பாக வாழ முடியாத நிலை காணப்படுவதால் தனது சொந்த நிலத்தைத் தன்னிடம் கையளிக்குமாறு கணவனை இழந்து தனியாக வாழும் இப்பெண்மணி நீதிமன்றில் கோரியுள்ளார். இலங்கை அதிகாரிகளின் தொடர்ச்சியான தலையீடுகள், அச்சுறுத்தல்கள் மற்றும் கெட்டவார்த்தைகள் போன்றவற்றுக்கு மத்தியிலும் இப்பெண்மணி தனது வழக்கைத் தொடர்கிறார். தனது சொந்த இடத்தில் 5 ஏக்கர் நிலங்களும் நெல் வயலும் இருந்ததாக இப்பெண்மணி தெரிவித்தார். 'எனது நிலத்தில் இலங்கை இராணுவத்தினரால் வெதுப்பகம், சமையலறை, வைத்தியசாலை, இரண்டு கிணறுகள் போன்றன அமைக்கப்பட்டுள்ளன. கேப்பாப்புலவிற்கு வருகை தரும் மூத்த இராணுவ அதிகாரிகள் எனது நிலத்திலேயே தங்க வைக்கப்படுவதாக நான் அறிந்தேன்' என இப்பெண்மணி தெரிவித்தார்.

### மாற்று நிலம

மாற்றீடாக வேறொரு நிலத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு இப் பெண்ணிடம் பிரதேச செயலகத்தினர் கோரிக்கை விடுத்தபோது இவர் அதனை மறுத்துவிட்டார். 'நாங்கள் ஒருசிலரே நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த போதிலும் மிகவும் உறுதியுடன் செயற்படுகிறோம். இலங்கை அரசாங்க அதிகாரிகளின் எந்தவொரு கூட்டங்களிலும் நான் பங்கெடுப்பதில்லை. ஏனெனில் நான் அவர்கள் மீது கோபம் கொண்டுள்ளமையே இதற்குக் காரணமாகும்' என இப்பெண் உறுதிபடத் தெரிவித்தார்.

கடந்த மேமாதம் கேப்பாப்புலவு வாழ் மக்களால் மேற்கொள்ளப்பட்ட சாகும் வரையான உண்ணா விரதப் போராட்டத்தின் போது அரசியற் கட்சிகள் தலையீடு செய்ததாகவும் இப்பிரச்சினைக்கு மூன்று மாதங்களுக்குள் தீர்வு காண்பதாக ஆர்ப்பாட்டத்தின் மூன்றாவது நாள் வடக்கு மாகாண முதலமைச்சர் கடிதம் மூலம் தம்மிடம் உறுதியளித்த நிலையில் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டதாக சமூக ஆர்வலரான சந்திரலீலா தெரிவித்தார். 'மூன்று வாரங்களின் பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சரால் எமது நிலைமைகளை நேரடியாகப் பார்வையிடுவதற்காக ஐந்து பேர் கொண்ட குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டன. அவர்கள் எம்மிடம் பொதுவான கேள்விகளைக் கேட்டனர். ஆனால் நிலத்தை மீளவும் கையளிப்பது தொடர்பான எவ்வித பணியும் இன்னமும் முன்னெடுக்கப்படவில்லை' என சந்திரலீலா தெரிவித்தார்.

### பாதுகாப்பும் அபிவிருத்தியும்

சில ஆண்டுகால ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வழக்கு விசாரணைகளைத் தொடர்ந்து கடந்த மார்ச் மாதம், தென்கிழக்குக் கரையோரத்தில் அமைந்துள்ள பாணமைக் கிராமத்து மக்கள் பலவந்தமாகத் தமது காணிகளுக்குச் சென்றனர். இந்த நிலங்கள் இலங்கை கடற்படை, வான்படை மற்றும் சிறப்பு அதிரடிப்படை போன்றவற்றால் 2010லிருந்து ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன. பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி என்ற பெயரில் இலங்கை அரச படைகளால் பலவந்தமாக, சட்டரீதியற்ற முறையில் ஆக்கிரமிக்கப்பட்ட தமது சொந்த நிலங்களை மீளவும் தம்மிடம் கையளிக்குமாறு கோரி மக்கள் தொடர்ந்தும் போராட்டங்களை மேற்கொள்கின்றனர். இலங்கை அரசாங்கமானது மிகச் சிறிய அளவு நிலங்களையே மக்களிடம் மீளவும் ஒப்படைத்துள்ளனர். ஆனால், இலங்கை அரசாங்கமானது இடம் பெயர்ந்த அனைத்து மக்களும் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பிச் செல்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமா?

மொழியாக்கம்
நித்தியபாரதி
வழிமூலம்
சிலோன் ருடே

---

# தமிழ் சினிமா வரலாறு

## 202 மேல் நாட்டு பாணியில் சிவாஜி எடுத்த 'புதியபறவை'

1964இல் நடித்த படங்கள் கர்ணன், பச்சை விளக்கு, ஆண்டவன் கட்டளை, கைகொடுத்த தெய்வம், புதிய பறவை, முரடன் முத்து, நவராத்திரி.

### புதியபறவை

சிவாஜிகணேசனின் மிகச் சிறந்த படங்களில் ஒன்று புதிய பறவை. ஆங்கிலப் படம் ஒன்றின் கதையைத் தழுவி தயாரிக்கப்பட்ட இப் படத்திற்கு ஆரூர்தாஸ் சிறப்பாக வசனம் எழுதினார்.

எம்.எஸ்.விஷ்வநாதன் இசையில் பார்த்த ஞாபகம் இல்லையோ, உன்னை ஒன்று கேட்டேன், எங்கே நிம்மதி, சிட்டுக்குருவி முத்தம் கொடுத்து முதலான எல்லாப் பாடல்களும் இனிமையாக ஒலித்தன.

சிவாஜிகணேசனுடன் சரோஜாதேவி, சவுக்கார் ஜானகி, எம்.ஆர்.ராதா ஆகியோர் இணைந்து நடித்தனர். தாதாமிராசி டைரக்ஷனில் திரைக்கதை அமைப்பு, நடிப்பு, படப்பிடிப்பு, இசை அனைத்தும் சிறப்பாக அமைந்த புதிய பறவை மேல்நாட்டுப் படங்களுக்கு இணையான மெஹாஹிட் படம்.

### 100 ஆவது படம்

சிவாஜிகணேசனின் 100 ஆவது படம் என்ற சிறப்புக்குரியது நவராத்திரி. இதில் அவர் 9 வேடங்களில் நடித்தார்.



நவராத்திரி படத்தில் சிவாஜியின் 9 வேடங்கள்

ஏ.பி.நாகராஜனின் விஜலக்ஷ்மி பிக்சர்ஸ் இந்தப் படத்தை தயாரித்தது. சிவாஜி கணேசனின் 100 ஆவது படம் என்ற முறையில் அவரது நவரச நடிப்புத் திறனை வெளிப்படுத்தும் விதத்தில் இக் கதையை உருவாக்கினார் நாகராஜன்.

கதாநாயகி (சாவித்திரி) மாப்பிள்ளை பிடிக்காமல் வீட்டை விட்டு வெளியேறுகிறார். 9 விதமான மனிதர்களை சந்திக்கிறார். அந்த 9 விதமான கதாபாத்திரங்களாக சிவாஜி நடித்தார்.

சிவாஜியின் சிறந்த நடிப்பைக் கொண்ட இந்தப் படம் 100 நாட்களை கடந்து வெற்றிகரமாக ஓடியது.

### கர்ணன்

பத்மினி பிக்சர்ஸ் சார்பாக பி.ஆர்.பந்துலு தயாரித்து இயக்கிய பிரமாண்டமான படம் கர்ணன்.

சிவாஜிகணேசன் ஜோடியாக தேவிகா நடித்தார். துரியோதனாக அசோகன், அவர் மனைவியாக சாவித்திரியும் நடித்தனர். கிருஷ்ணனாக எம்.டி.ராமராவ் நடித்தார்.

வசனத்தை சக்தி கிருஷ்ண சாமி எழுத இசையை விஷ்வநாதன் ராமமூர்த்தி அமைத்தார். பாடல்கள் மிகச் சிறப்பாக அமைந்தன.

கிட்டத்தட்ட கட்டபொம்மனுக்கு நிகராக படம் அமைந்தும் எதிர்பார்த்த அளவுக்கு அமைந்தும் படம் எதிர் பார்த்த அளவுக்கு ஓடவில்லை. ஆனால் மீண்டும் வெளியான போது நல்ல வரவேற்பைப் பெற்றது.

### படித்தால் மட்டும் போதுமா?

பாசமலர் வெற்றிக் கூட்டணியை வைத்து ஒரு படத்தை உருவாக்க ரங்கநாதன் பிக்சர்ஸ் என்ற படக் கம்பனி ஏற்பாடு செய்தது. அந்தப் படம் தான் படித்தால் மட்டும் போதுமா?

பாசமலர் படத்துக்கு வசனம் எழுதிய ஆரூர்தாஸ் இந்தப் படத்துக்கும் வசனம் எழுதினார். பாசமலர் படத்தை டைரக்ட் செய்த ஏ.பீம்சிங் இந்த படத்தை டைரக்ட் செய்ய ஒப்பந்தமானார்.

பாசமலர் படத்தில் நடித்த சிவாஜி, ஜெமினி, சாவித்திரி ஆகியோரை ஒப்பந்தம் செய்ய பட அதிபர்கள் சென்ற போது படத்தில் நடிக்க சிவாஜி, சாவித்திரி இருவரும் ஒப்புக் கொண்டனர். ஜெமினி மறுத்துவிட்டார். காரணம்-கதை.

(தொடரும்)

# பிரிட்டோரியாவில் பிரதமர் மோடிக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது



(பிரிட்டோரியா)

ஆபிரிக்க நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தின் இரண்டாம்கட்டமாக நேற்று தென்னாபிரிக்க தலைநகரான பிரிட்டோரியா நகருக்கு சென்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஆபிரிக்காவின் மொசாம்பிக், தென்னாபிரிக்கா, தன்சானியா, கென்யா ஆகிய நாடுகளுக்கான 5 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

பயணத்தின் முதற்கட்டமாக நேற்று முன்தினம் ஆபிரிக்காவின் மொசாம்பிக் நாட்டிற்கு சென்ற பிரதமர் மோடி அங்கு பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். மபுடோ நகரில் உள்ள கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி மையத்திற்கு சென்ற பிரதமர் மோடி அங்குள்ள மாணவர்களிடையே கலந்துரையாடினார்.

பின்னர், கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி மையத்திற்கு பிரதமர் 4 பேருந்துகளை இந்தியா சார்பில் வழங்கினார்.

மேலும், இந்தியா-மொசாம்பிக் நாடுகளுக்கு இடையே உள்நாட்டு பாதுகாப்பு, இராணுவ ஒத்துழைப்பு, உணவு பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு புதிய ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

இதையடுத்து, சுற்றுப்பயணத்தின் இரண்டாம் கட்டமாக பிரிட்டோரியா நகருக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தென்னாபிரிக்க நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் இந்கோனா-மஷாபானே, சிறு தொழில்கள் துறை அமைச்சர் லின்டிவே ஸுலு ஆகியோர் பிரிட்டோரியா விமான நிலையத்தில் பிரதமர் மோடியை செங்கம்பள வரவேற்பு அளித்து வரவேற்றனர். (இ-10)

# மிக விலை உயர்ந்த திராட்சைக்கொத்து

## சாதனை விலைக்கு விற்பனை



ஜப்பான் நாட்டில் திராட்சைக்கொத்து ஒன்று சாதனை விலைக்கு விற்பனையாகியுள்ளது.

உலகின் மிக அரிய வகை திராட்சை என கூறப்படும் ரூபி ரோமன்ஸ் வகை திராட்சைக் கொத்து ஒன்றை 7.36 இலட்சம் ரூபாய் கொடுத்து வாங்கியுள்ளார் ஒரு ஜப்பானியர். வெறும் 30 திராட்சை பழங்கள் மட்டுமே உள்ள அந்த திராட்சைக் கொத்தில் இருந்துள்ளது.

வாடிக்கையாளர்களை தங்கள் கடைகளில் ஈர்ப்பதற்கென்றே விற்பனையாளர்கள் இதுபோன்ற அரிய வகை பழங்களை ஜப்பானில் சாதனை விலைக்கு வாங்கி வைப்பது வாடிக்கை.

ஜப்பான் நாட்டவர்களுக்கு பழங்கள் என்றால் கொள்ளை பிரியம். பழ வகைகளை விலைமதிப்பற்றவையாக கருதும் ஜப்பானியர்கள், தங்களது உற்றார், உறவினர்களுக்கு விலை உயர்ந்த பொருட்கள் பரிசளிக்க வேண்டும் என்றால் பழங்களையே அளிக்கின்றனர்.

ரூபி ரோமன்ஸ் எனப்படும் அரியவகை திராட்சை ஜப்பானில் மட்டுமே காய்க்கின்றது. ping-pong பந்து அளவே இருக்கும் இதன் பழங்கள் சுவைகளின் உச்சம் என கூறப்படுகிறது.

2008ஆம்ஆண்டுவரை இந்த தீஞ்சுவை பழத்திற்கு குறிப்பிட்ட பெயர் எதுவும் இல்லையாம். (இ-7-10)

# அமெரிக்க ஆர்ப்பாட்டத்தில் 4பொலிஸார் சுட்டுக்கொலை

(நியூயோர்க்)

**அமெரிக்காவில் கறுப்பினத்தவர்களை அடுத்தடுத்து பொலிஸார் சுட்டுக் கொல்லும் அத்துமீறலை கண்டித்து நடைபெற்ற போராட்டம் வன்முறையாக வெடித்த சம்பவத்தில் நான்கு பொலிஸ் அதிகாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.**

அமெரிக்காவின் லூசியானாமற்றும்மின்னெசோட்டா மாநிலங்களில் அடுத்தடுத்து பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இரு கறுப்பினத்தவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதற்கு கண்டனம் தெரிவித்து நாட்டின் பல பகுதிகளிலும் கறுப்பின மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவ்வகையில் இங்குள்ள டெக்சாஸ் மாநிலத்தின் டல்லாஸ் நகரில் நேற்று முன்தினம் நூற்றுக்கணக்கான கறுப்பினத்தவர்கள் பொலிஸாரின் மனிதவுரிமை மீறல் மற்றும் அராஜகத்தை கண்டித்து போராட்டத்தில்ஈடுபட்டனர்.

போராட்டக்காரர்களை பொலிஸார் கட்டுப்படுத்த முயன்றபோது அவர்களில் சிலர் நடத்திய துப்பாக்கி சூட்டில் நான்கு பொலிஸ் அதிகாரிகள் உயிரிழந்தனர். பத்துக்கும் அதிகமான பொலிஸ் அதிகாரிகள் துப்பாக்கி குண்டு பாய்ந்து படுகாயமடைந்தனர்.

இந்த திடீர் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டதாகவும் சம்பவ இடத்தில் இருந்து வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7-10)

## தொடரும் வன்முறைக் கலாசாரம்



# மசூதி அருகே தீவிரவாதிகள் தாக்குதல்;35 பேர் பலி!




ஈராக் தலைநகர் பக்தாத்தில் ஷியா பிரிவினரின் பிரபல மசூதியை குறிவைத்து தீவிரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலுக்கு 35 பேர் உயிரிழந்தனர். 50 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். பக்தாத் நகரில் இருந்து வடக்கே சுமார் 70 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பலாட் என்ற இடத்தில் ஷியா பிரிவினரின் வணக்கஸ்தலமான சய்யித் முஹம்மது தர்கா மற்றும் அதையொட்டிய மசூதியும் உள்ளது. நேற்று முன்தினமிரவு இந்த மசூதி மீது தீவிரவாதிகள் 'மோட்டார்' ரக குண்டுகளைவீசிதாக்குதல்நடத்தினர்.

இதனால், அங்கிருந்தவர்கள் பீதியால் சந்தை வழியாக தப்பியயோடியபோது அந்த கூட்டத்துக்குள் புகுந்த இரு தற்கொலைப் படையினர் தங்களது உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்தனர். இந்த தாக்குதலில் 35 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி பலியாகினர்.

மேலும் ஒரு தற்கொலைப்படை தீவிரவாதியை சுட்டுக் கொன்ற பாதுகாப்பு படையினர், அவனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை செயலிழக்க வைத்தனர். இந்த தாக்குதலில் படுகாயமடைந்த ஐம்பதுக்கும் அதிகமானோர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. பக்தாத் நகரில் அண்மையில் தீவிரவாதிகள் நடத்திய மனிதகுண்டு தாக்குதலுக்கு 250 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# சீனாவில் நிலச்சரிவு 35 பேர் உயிரிழப்பு!

வடமேற்கு சீனாவின் ஜின்ஜியாங் உய்குர் தன்னாட்சி பிராந்தியத்தின் எல்லைக் கிராமத்தில், கடந்த புதன்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 35 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலச்சரிவினால் அப்பகுதிக்கான போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மின்சார விநியோகம் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளும் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கிராமம் குன்லுன் எனும் மலையைச் சுற்றி அமைந்திருப்பதனால் ஏற்பட்ட நிலச்சரிவை அடுத்து, போக்குவரத்து மார்க்கம் தடைப்பட்டுள்ளது. மீட்புப் பணியாளர்கள் கால்நடையாகவும், கழுதைகளின் உதவியுடனுமே அனர்த்தம் இடம்பெற்ற பகுதிக்கு செல்வதாகக் தெரிவிக்கப்படுகிறது. (இ-7-10)

# திருடர்கள் அதிகமுள்ள இடம் பரீட்சைகள் திணைக்களம்

## சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் திருடர்கள் அதிகம் உள்ள இடமாக பரீட்சைகள் திணைக்களம் காணப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.



இது தொடர்பில் கல்வி அமைச்சர் அறிந்துள்ளாரா? என்பது தொடர்பில் எனக்குத் தெரியவில்லை. என்றாலும் இங்கிருந்து அவர் அதனை அறிந்து கொள்வார் எனவும் அவர் தெரிவித்தார்.

நிட்டம்புவ சங்கபோதி வித்தியாலயத்தின் மூன்று மாடி கட்டடத்திற்கான அடிக்கல், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவினால் நேற்று நாட்டப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக தற்போதைய அரசாங்கம் கல்விக்கான நிதியை 5 மடங்கில் அதிகரித்துள்ளது. கடந்த வரவு செலவுத் திட்டத் தில், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் 1.3 வீதத்தையே கல்விக்காக ஒது க்கியிருந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-09.07.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.32 | 147.96 |
| பிரிட்டன் | பவுண்ட் | 186.06 | 192.55 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 158.78 | 164.94 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 146.46 | 152.50 |
| கனடா | டொலர் | 110.22 | 114.73 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 107.31 | 112.24 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.45 | 110.47 |
| இந்தியா | ரூபா | 2.1514 | -------- |
| சீனா | யுவான் | 21.7187 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 384.9212 |
| குவைத் | டினார் | 481.3587 |
| ஓமான் | ரியால் | 377.2237 |
| கட்டார் | ரியால் | 39.8891 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.7158 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.5475 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார் மடம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 100 | 70 | 80 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 700 | 800 | 600 | 650 | 500 | 600 |
| தக்காளி | 250 | 280 | 210 | 240 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 80 | 80 | 80 | 120 |
| கோவா | 160 | 200 | 100 | 140 | 160 | 150 |
| கரட் | 250 | 400 | 150 | 200 | 240 | 250 |
| பூசணி | 120 | 200 | 130 | 130 | 160 | 80 |
| புடோல் | 100 | 100 | 50 | 80 | 80 | 70 |
| வாழைக்காய் | 120 | 150 | 100 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 150 | 150 | 120 | 120 | 150 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 220 | 400 | 160 | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 60 | 80 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 140 | 200 | 100 | — | 160 | 150 |
| பயற்றங்காய் | 150 | 150 | 110 | 100 | 80 | 200 |
| லீக்ஸ் | 160 | 200 | 120 | 160 | 200 | 200 |
| பீற்றூட் | 150 | 200 | 100 | 120 | 160 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 300 | 200 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 300 | 150-300 | 350 | 400 | 300 | 500 |
| போஞ்சி | 200 | 250 | 150 | 170 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 50 | 50 | 80 | 80 | — |
| கீரை - 1பிடி | 30 | 20 | 15 | 20 | 20 | 25 |
| தேசிக்காய் | 180 | 150-220 | 220 | 150 | 200 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-25 | 20 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 180 | 300 | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 100 | 300 | — | — | 400 | 300 |
| முள்ளங்கி | 60 | 100 | 60 | 80 | 50 | 80 |
| பொன்னாங்காணி | 120 | 50 | 15 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 120 | 40 | 50 | 60 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கை அரசு – விடுதலைப்புலிகள் மீண்டும் சமரசப் பேச்சு 224

**ம**ட்டக்களப்பில் செயின்ட் மைக்கேல் தேவாலயம் உள்ளது. அங்கு கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு 25-12-2005 அன்று அதிகாலையில் சிறப்புப் பிரார்த்தனை கூட்டம் நடைபெற்றது. அதில் ஜோசப் பரராஜசிங்கம்,தனது மனைவியுடன் கலந்து கொண்டார்.

### சுட்டுக்கொலை


அப்போது அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் சிலர் உள்ளே புகுந்தனர். அவர்கள் ஜோசப் பரராஜசிங்கத்துக்குப் பின்னால் மிக அருகில் இருந்தபடி அவரை துப்பாக்கியால் சுட்டனர். இதில் அவர் அதே இடத்தில் பலியானார்.

இதையடுத்து ஜோசப் பரராஜசிங்கத்தின் மெய்க்காப்பாளர்களுக்கும் அந்த மர்ம நபர்களுக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் பரராஜசிங்கத்தின் மனைவி உட்பட 9 பேர் குண்டு பாய்ந்து படுகாயம் அடைந்தனர். அவர்களில் 3 பேர் பெண்கள் ஆவர். மனைவி உட்பட 9 பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது. சண்டைக்குப் பின்னர் மர்ம நபர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

### கருணா கோஷ்டியா?

இந்தப்படுகொலைக்கு இதுவரை எந்த இயக்கமும் பொறுப்பு ஏற்கவில்லை. மட்டக்களப்பு உள்ளிட்ட கிழக்குப்பகுதியில் கருணா தலைமையிலான விடுதலைப் புலிகள் அதிருப்தி கோஷ்டியினர்தான் இந்தக் கொலையைச் செய்து இருக்கலாம் என்று கருதப்பட்டது. தேடுதல் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டது.

சுட்டுக் கொல்லப்பட்ட ஜோசப் பரராஜசிங்கத்துக்கு வயது 71. இவர் 1990ஆம் ஆண்டில் இருந்து எம்.பி.ஆக இருந்து வந்தார்.



### அரசு குற்றச்சாட்டு

இதற்கிடையே இந்தக் கொலையை விடுதலைப்புலிகள் தான் செய்ததாக அரசு குற்றம் சாட்டியது. இது தொடர்பாக இராணுவ அமைச்சகம் வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருந்ததாவது,

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த தமிழ் அரசியல்வாதிகளைக் கொன்று விட்டு பழியை இராணுவத்தின் மீது போட விடுதலைப்புலிகள் விரும்புகிறார்கள்.

ஜோசப் பரராஜசிங்கத்தை அவர்கள் தான் கொன்றார்கள். தங்களது துப்பாக்கி படைப் பிரிவைச் சேர்ந்தவர்களை இதில் ஈடுபடுத்தினார்கள். அந்தப் படையினர் மக்களோடு மக்களாகத் தேவாலயத்துக்குள் ஊடுருவி இந்த மனிதத் தன்மையற்ற படுகொலையைச் செய்தனர். கிறிஸ்துமஸ் பண்டிகையின் மத ரீதியான முக்கியத்துவத்தைக் கூட அவர்கள் உணரவில்லை. முதலில் இந்த பிரார்த்தனை கூட்டத்துக்கு செல்ல பரராயசிங்கம் நினைக்கவில்லை. ஆனால் நள்ளிரவுக்கு முன்பு யாரோ தொலைபேசியில் பேசி இவரை வலுக்கட்டாயமாக அழைத்ததால் தான் சென்றுள்ளார். மக்களின் கவனத்தை வேறு பக்கம் திசை திருப்பி குழப்ப நிலையை உண்டாக்க இந்த கொலையை விடுதலை புலிகள் செய்துள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### விடுதலை புலிகள் மறுப்பு

ஆனால் இந்தக் குற்றச்சாட்டை விடுதலைப்புலிகள் மறுத்தனர். அரசின் உளவுப்பிரிவு, கருணா கோஷ்டி,புத்தமத துறவிகளின் கட்சி ஆகியவை தான் இந்த கொலையைச் செய்ததாக அவர்கள் கூறினார்கள்.

++++++++++++

**நா**ட்டில் ஒரு புறம் இராணுவத்தாக்குதல் நடைபெற்ற போதிலும் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமரசப் பேச்சு மீண்டும் தொடங்கியது.

தனிநாடு கேட்டுப் போராடும் விடுதலைப்புலிகளும், அரசாங்கமும் கடந்த 2003ஆம் ஆண்டு முதல் போர்நிறுத்தம் செய்தன. அவர்களுக்கிடையே சமாதானம் செய்து வைக்க நோர்வே நாடு முயற்சி மேற்கொண்டது.

இடையில் இந்தப் பேச்சுவார்த்தையில் தடங்கல் ஏற்பட்டது. வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த லக்ஸ்மன் கதிர்காமர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு, விடுதலைப்புலிகளே காரணம் என்று அரசாங்கம் குற்றம் சுமத்தியது. இதை மறுத்த விடுதலைப்புலிகள், 2005 ஆம் ஆண்டு இறுதிக்குள் சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க வேண்டும் என்று அரசுக்கு கெடு விதித்தனர்.

### ஜப்பான்முயற்சி

இருவருக்கும் இடையேயான சமாதானப் பேச்சுவார்த்தையை ஆசியா கண்டத்தில் உள்ள ஏதாவது ஒரு நாட்டில் நடத்தலாம் என்றும், தங்களது நாட்டின் தலைநகர் டோக்கியோவில் நடத்த முன்வந்தால் உதவி செய்யத் தயாராக இருப்பதாகவும் ஜப்பான் நாடு அறிவித்தது.

தங்களது நாட்டுக்குள் தான் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று பிடிவாதம் பிடித்து வந்த அரசாங்கம், அதில் இருந்து இறங்கிவந்தது. ஆசியா கண்டத்தின் எந்த நாட்டிலும் சமாதானப் பேச்சுவார்த்தை நடந்தால் கலந்து கொள்ளத்தயார் என்று ஜப்பானின் யோசனையை ஏற்று அரசு பணிந்தது.

### நிராகரிப்பு

ஆனால் விடுதலைப்புலிகள், முதலில் தங்களிடையே சமாதான முயற்சி மேற்கொண்ட நோர்வே நாட்டின் தலைநகர் ஒஸ்லோவில்தான் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் என்றும், ஆசியா கண்டத்தில் நடந்தால் கலந்து கொள்ளமாட்டோம் என்றும் அறிவித்தனர்.

அவர்களின் கோரிக்கையை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ 21-12-2005 அன்று நிராகரித்தார்.

அவர் நிருபர்களிடம் பேசுகையில் இது பற்றி கூறியதாவது,

### மாற்றம் இல்லை

எங்களுடைய நிலையில் மாற்றம் இல்லை. நோர்வே நாட்டில் சமாதானப்பேச்சுவார்த்தை நடப்பதை நான் எதிர்க்கிறேன். ஆசியா கண்டத்தில் எந்த நாட்டில் சமாதானப் பேச்சு நடத்த முன்வந்தாலும் நாங்கள் தயார். ஜப்பான் நாடு இந்தப் பேச்சுவார்த்தையைத் தங்களது நாட்டில் நடத்த விருப்பம் தெரிவித்துள்ளது. அதை நான் வரவேற்கிறேன்.

சிலர் இன்னும் காலனி ஆதிக்க எண்ணத்திலேயே இருக்கிறார்கள். ஆகவே மேற்கத்தேய நாடுகளில் பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறார்கள்.

(தொடரும்)

# பௌத்தர்களுக்கு இழைக்கப்படும் துன்புறுத்தல் பற்றி யார் பேசுவது?

## கேள்வி எழுப்புகிறார் ஞானசார தேரர்

(கொழும்பு)

**முஸ்லிம் சமூகத்தினால் பௌத்தர்களுக்கு இழைக்கப்படும் துன்புறுத்தல்கள் பற்றி யார் பேசுவது என பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.**

கிருலப்பனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை ஆட்சி செய்வோருக்கு இது பற்றி எவ்வித கவலையும் இல்லையா? நாட்டில் வீதிகளை அமைப்பதற்கு மட்டும் அரசாங்கங்கள் இல்லை.

எமது தலைவர்கள் வெளிநாடுகளை திருப்திப்படுத்த செயற்பட்டால் பௌத்தர்களுக்கு நன்மை ஏற்படாது.


சில வகுப்புவாத இளைஞர்கள் ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் தொடர்பு பேணுகின்றார்கள் என நாம் சில ஆண்டுகளுக்கு முன்னதாகவே எச்சரித்தோம்.

ஆட்சியாளர்கள் இதனை இல்லை என்றார்கள். ஞானசாரர் நோர்வே பணத்தைப் பெற்றுக் கொண்டு இவ்வாறு பொய்யுரைக்கின்றார் என குற்றம் சுமத்தினர். எனினும் இன்று உண்மை அம்பலமாகியுள்ளது. இஸ்லாம் மதம் பற்றி வகுப்பு எடுக்க நாம் தயார். வீடு வீடாகச் சென்று முஸ்லிம் அமைப்புக்களை தோற்கடிக்க நாம் தயார்.

பௌத்த மத போதனைகள் செய்யவும் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை எதிர்காலத்தில் ஏற்படக்கூடும் என அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# முஸ்லிம் கவுன்சிலுக்கு தீவிரவாதிகளுடன் தொடர்பு

## பொதுபலசேனா குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கையில் செயற்படும் இஸ்லாமிய அமைப்பு ஒன்றுக்கும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளுக்கும் தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் செயற்படும், முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்கா எனும் அமைப்பே இவ்வாறு தீவிரவாதிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாக பொதுபல சேனா அமைப்பு குற்றம்சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அந்த அமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், முஸ்லிம் கவுன்சில் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்களுடனும், அரபு நாடுகளுடன் தொடர்புகளை பேணி வருகிறது.

அத்துடன், கலகொட அத்தே ஞானசார தேரரை கைது செய்ய வேண்டும் என அந்த அமைப்பு பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளது.

ஞானசார தேரர் கைது செய்யப்படுவதையே அந்த அமைப்பு எதிர்பார்க்கின்றது. ஞானசார தேரர் கைது செய்யப்பட்டால், நாட்டின் பௌத்தர்கள் பதற்றம் அடைவார்கள்.

அதன் பின்னர் கலவரம் ஏற்படும். இதுவே அந்த அமைப்பின் இலக்கு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, முஸ்லிம் கவுன்சிலுக்கு நாட்டின் நல்லிணக்கம் தொடர்பில் அக்கறை இருக்குமாயின், அவர்கள் எம்முடன் கலந்துரையாடி இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 773

அகில்ராஜ் பபி





சந்திரன் சிந்து




ராதை




லிங்கா ரூபன்




பிரசன்னா





டிலக்ஷி கண்ணா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வடமாகாண வல்லவன் உதைபந்தாட்டம் மணற்காடு சென்.அன்ரனிஸ் அணி வெற்றி







வடமராட்சி உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் மூன்றாம் சுற்று ஆட்டமாக கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற போட்டியில் கம்பர்மலை யங் கம்பன்ஸ் வி.கழகத்தினை எதிர்த்தாடிய மணற்காடு சென். அன்ரனிஸ்வி.க. 4:1என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ஆட்டத்தின் ஆரம்பத்தில் இருந்துதனது ஆதிக்கத்தினை வெளிப்படுத்திய மணற்காடு சென்.அன்ரனிஸ் 3 ஆவது நிமிடத்திலேயே அலெக்ஸ் மூலமாக கோலினைப் போட்டு அதிர்ச்சி அளித்து. தொடர்ந்த ஆட்டத்தில் 12 ஆவது மற்றும் 30ஆவது நிமிடங்களில் சுஜீபன் 2 கோல்களைப் போட்டு தமது பலத்தினை நிரூபித்தார்.

வீரர்களை முன்னகர்த்தி ஆடியயங்கம்பன்ஸ்44ஆவது நிமிடத்தில் ரமணனின் கால்களால் முதலாவது கோலினை அடிக்க பதிலுக்கு 48 ஆவது நிமிடத்தில் சுஜீபன் மேலும் ஒரு கோலினை அடித்தார்.

தொடர்ந்த ஆட்டத்தில் யங் கம்பன்ஸ் வி.கழகத்திற்கு சில அரிய வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்ற போதும் கோலாக மாற்ற தவறினர். ஆட்ட நேர முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் மணற்காடு சென். அன்ரனிஸ்விகவெற்றிபெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக 3 கோல்களை அடித்த சென். அன்ரனிஸ் இளம் வீரர் சுஜீபன் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப்பரிசு மற்றும் பதக்கத்தினை S.X குலநாயகம் வழங்கி கௌரவித்தார். (கு)

# இருபது-20 கிரிக்கெட் போட்டி இளங்கதிர் அணி வெற்றி



(யாழ்ப்பாணம்)

அமரர்களான கந்தசாமி, குகதாஸ் ஜெயலட்சுமி, பார்த்தீபன் ஞாபகார்த்த சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் இருபது-20 கிரிக்கெட் போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில்,

உதய சூரியன் அணியை எதிர்த்து இளங்கதிர் அணி மோதியது. முதலில்துடுப்பெடுத்தாடிய இளங்கதிர் இருபது ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்கள் பெற்றது.இளங்கதிர் சார்பில் கனி-55, அருள்-39, சிவா-30 ஓட்டங்கள். உதய சூரியன் சார்பில் டிலக்சன், கீர்த்தி தலா 4 விக்கெட்டுக்கள் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் அணி 15 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 48 ஓட்டங்கள் பெற்றது. உதயசூரியன் சார்பில் சிவஞானம் 16 ஓட்டங்கள், இளங்கதிர் சார்பில் பிரசாந் 3 விக்கெட்டுகள் கைப்பற்றினர்.

இளங்கதிர் அணி 114 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.(கு)

# சமநிலை தவிர்ப்பு உதையில் குருநகர் பாடும்மீன் வெற்றி





(யாழ்ப்பாணம்)

வடமராட்சி உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட போட்டியில் கடந்த 30ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது போட்டியில் குருநகர் பாடும்மீன் வி.க எதிர்த்து வல்வெட்டித்துறை ஆதிசக்தி வி.க மோதியது.

போட்டியின் ஆரம்பம் முதல் இறுதிவரை இரு அணிகளும் கோல் பெறும் முயற்சிகள் பின்கள வீரர்களால் முறியடிக்கப்பட ஆட்ட நேர முடிவில் கோல்கள் எதனையும் பதிவு செய்யாது போட்டி சமநிலையானது. சமநிலை தவிர்ப்புக்காக தண்ட உதைகள் வழங்கப்பட்டு சமநிலை தவிர்ப்பு உதையில் 3:1 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் வி.க. வெற்றி பெற்றது. (கு)



கிளி/கல்வி வலய அலுவலகத்தால் நடத்தப்பட்ட 2016ம் ஆண்டுக்கான சதுரங்கப் போட்டியில் கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலய மாணவர்கள் கோட்ட மட்டத்தில் முதலிடத்தையும் வலய மட்டத்தில் முதலிடத்தையும் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் பெற்று மாகாண மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவ்வணியினரையும் பாடசாலை சமூகத்தினரையும் படத்தில் காணலாம். (படம்:-சோலைநகர் செய்தியாளர்)

# இன்றைய போட்டிகள்

யாழ்.பிறீமியர் லீக் வெற்றிக்கிண்ணத்திற்காக யு.ஆர். பவுண்டேசன் நடத்தும் 20 பந்து பரிமாற்றங்களைகொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சிறிகாமாட்சி விளையாட்டுக்கழகமும் தொடர்ந்து 11 மணிக்கு நடைபெறும் போட்டியில் சென்றலைட்ஸ் வி.கழகத்தை எதிர்த்து ஜொலிஸ்ரார் வி.கழகமும் பி.ப.2மணிக்கு நடைபெறும் போட்டியில் K.C.C.C. விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது.

➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤

புத்தூர் வளர்மதி சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் தமிழ்மதி விளையாட்டு க்கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி B விளையாட்டுக்கழகமும்இரவு 8மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கச்சாய் வொலிகின்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (கு)

# யாழ்.மாவட்ட இளைஞர் சம்மேளனத்தின் 28 ஆவது மாவட்ட இளைஞர் வி.விழா

## சங்கானை அணி சம்பியன்





(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் 28 ஆவதுமாவட்ட இளைஞர் விளையாட்டுவிழா அண்மையில் கரவெட்டி இமையாணன் மத்திய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு P.சுபாகர் தலைமை தாங்கினார். இதில் சிவன் அறக்கட்டளை நிலையத்தின் தலைவர் கணேஸ்வரன் வேலாயுதம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். ஆண், பெண் களுக்கான வலைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் இறுதிப் போட்டிகள் இடம் பெற்றன.

ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் சங்கானை பிரதேச இளைஞர் அணி சம்பியனானது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (கு)

மனிதரின் செயல்கள், அவர்கள் சிந்தனைகளுக்கு சிறந்த விளக்கங்கள் ஆகும்.
- ஜான் லாக்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## துறை சார்ந்தவர்கள் ஒன்றுகூடி உரிய நேரத்தில் வெளியிட்ட கருத்து

உலக நாடுகளின் நடைமுறை ஒழுங்குகள் பற்றி நாம் அறியும் போது ஒரு நாட்டில் நடக்கக் கூடிய தவறுகள், பிழைகள் அந்த நாட்டைச் சேர்ந்தவர்களால் சுட்டிக்காட்டப்பட்டு அவை நடைபெறாமல் காப்பாற்றப்படுகிறது.

இந்தப் பணியில் அந்த நாட்டில் இருக்கக் கூடிய பிரதான அரசியல் கட்சிகளும் புலமை சார்ந்த வல்லுநர்களும் பெரும் பங்காற்றுகின்றனர்.

குறிப்பாக பாராளுமன்றம் அல்லது அதற்கு ஈடான இரண்டாம் தர சபைகள் ஒரு தவறான தீர்மானத்தை நிறைவேற்ற முற்படும்போது எதிர்க்கட்சியானது குறித்த தீர்மானம் தொடர்பான பாதகத் தன்மைகளைச் சுட்டிக்காட்டுகிறது. இதனால் அங்கு நியாயம் ஏற்படுகின்றது.

இதற்கு மேலாக எதிர்க்கட்சி முன்வைத்த தகை சார்ந்த விளக்கங்கள் பொதுமக்களையும் சென்றடைந்து ஒரு புரிதலை ஏற்படுத்துகின்றது.

இது ஒரு புறம் இருக்க, குறித்த தீர்மானங்கள் தொடர்பில் துறைசார் நிபுணர்களும் தமது கருத்துக்களை மக்கள் முன் வைக்கும் போது பொதுமக்கள் விழிப்படைய, குறித்த தீர்மானம் செம்மைப் படுத்தப்படுகின்றது.

ஆக, ஒரு உடம்பில் நோய்க்கிருமிகள் உட்செல்லும் போது உடம்பில் உள்ள வெண்குருதிச் சிறு துணிக்கைகள் அவற்றை எதிர்கொண்டு அழித்து உடம்பைப் பாதுகாப்பது போன்ற ஒரு கட்டமைப்பு நாடுகளிலும் உள்ளமையால்தான் பல்வேறு தாக்கங்கள், போட்டிகள், எதிர்ப்புக்கள் மத்தியிலும் அந்த நாடுகளால் ஈடுகொடுக்க முடிகின்றது.

இதில் எந்த நாடு, எந்த இனம் பலயீனமாக இருக்கின்றதோ அந்த நாட்டால், இனத்தால் மீள எழவே முடியாது.

இந்த வகையில் எம் இனத்தின் நிலைமை பற்றியும் நாம் நோக்க முடியும். எங்களிடம் பலமான அரசியல் கட்சிகள் இருக்காமை மிகப்பெரும் குறைபாடாக உள்ளது.

எந்த முடிவை எடுத்தாலும் அதை எதிர்க்கின்ற வல்லமை கொண்ட இன்னொரு அரசியல் பலம் இல்லாமையால் தாம் நினைப்பதைச் செய்வோம் என்ற கர்வம் அரசியல் தரப்பிடம் ஏற்படுகின்றது.

இது மிகப்பெரும் ஆபத்து. இந்தக் கட்டத்தில் தான் துறைசார் வல்லுநர்கள் தமது இனத்தைக் காப்பாற்றும் நோக்கில், விஞ்ஞானரீதியாக ஆதாரங்களுடன் நிலைமைகளை விளக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

இருந்தும் எம் இனத்தைப் பொறுத்தவரை துறைசார் நிபுணர்களும் புத்திஜீவிகளும் எது நடந்தாலும் மௌனமாக இருப்பதே ஒரே வழி என்று நினைத்துக் கொண்டனர். இந் நிலைமையும் தமிழர்களுக்கு ஈனமாக அமைந்தது.

இச் சந்தர்ப்பத்தில் புத்திஜீவிகள் மௌனமாக இருப்பது நல்லதல்ல எனும் கோஷங்கள் மெல்ல மெல்ல உருவேற்றி விட, நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் துறைசார்ந்த வல்லுநர்கள் ஒன்று கூடி; வடக்குக்கான பொருளாதார மத்திய நிலையம் எங்கே? அமைய வேண்டும் என்பதை மிகத்தெளிவாகக் கூறியுள்ளனர்.

இது காலம் உணர்ந்த பணி. இத்தகைய பணி நம் அரசியல்வாதிக்களையும் வழிப்படுத்தும் என்பதால், தமிழினத்தின் துறைசார்ந்த வல்லுநர்கள் எம் இனத்தின் எழுகை பற்றி சதா சிந்திக்க வேண்டும் என்பதே நம் தாழ்மையான கோரிக்கை.

இச் சிந்தனை நிச்சயம் உங்களையும் தமிழ் அரசியல்வாதிகளையும் இணைக்கும். இந்த இணைப்பு ஒரு நேர் கோட்டில் வரும் போது அதன் உச்சமான நன்மைகள் எம் தமிழினத்தின் சொத்தாகி விடும்.

ஆகையால், அன்புக்குரிய அறிவுசால் பெருந்தகைகளே! வீழ்ந்து போன எம் இனத்தை நாங்களே எழுகை பெறச்செய்வோம் என்ற மகுடவாசகத்துடன் உங்கள் பணியைத் தாருங்கள்.

# தொழில் திணைக்களத்தினுள் 46 தமிழர்கள்

# வடக்கில் புதிய தொழில்நுட்பங்கள் ஊடாக தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்த முயற்சி

## அமைச்சர் ஜோன் யாழில் தெரிவிப்பு

வடக்கில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு புதிய தொழில்நுட்பங்கள் ஊடாக தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு முயற்சித்து வருவதாக தெரிவித்துள்ள தொழில் தொழிற் சங்க உறவுகள் அமைச்சர் டபிள்யூ. டி.ஜே.செனவிரத்ன, முதற் கட்டமாக தொழில் திணைக்களத்தினுள் 46 தமிழ் உத்தியோகத்தர்கள் உள்வாங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பண்ணை பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட யாழ்ப்பாண தொழில் அலுவலக நிர்வாக கட்டடம் நேற்றுக் காலை உத்தியோகபூர்வமாக தொழில் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜே செனவிரத்னவால் திறந்து வைக்கப்படடது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களுக்குமான மத்திய நிலையம் இன்று (நேற்று) யாழில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களில் உள்ள கட்டடங்களை போலல்லாது இந்த கட்டடம் 90 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. நாட்டில் 85 ஆயிரம் தொழிலாளர்கள் காணப்படுகின்றனர்.

இவர்களை ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளில் தொழில் திணைக்களம் ஈடுபட்டு வருகின்றது. இவர்கள் மீது தான் நாட்டின் பொருளாதார வளர்ச்சி சுமத்தப்பட்டுள்ளது. எமது நாடு பொருளாதார ரீதியில் முன்னேறுவதற்கான சுமையை இந்த தொழிலாளர்களே சுமந்துள்ளனர்.

இந்த சுமையை இன, மத, மொழி பேதமின்றி அனைத்து தொழிலாளர்களும் சுமந்து கொள்கின்றனர். இதில் மாற்று இனத்தவருக்கு சுமை அதிகமாக இருக்க போவதில்லை. அனைவருக்குமே ஒரே சுமையாக தான் இருக்க போகின்றது. வடக்கில் 35 ஆயிரம் பேர் தொழில் அற்று இருப்பதாக எமக்கு கூறப்பட்டுள்ளது.

இங்கு இந்தளவிற்கு வேலை இல்லாப் பிரச்சினைக்கு காரணம், வடக்கில் இருந்த தேசிய உற்பத்தியில் முக்கியத்துவத்தை பெற்ற தொழிற்சாலைகள் அழிவடைந்தமையே ஆகும். கடந்த காலத்தில் காணப்பட்ட அரசியல் சூழ்நிலைகளால் இநத தொழிற்சாலைகள் அழிவடைந்துள்ளன. நாம் அவற்றை மீண்டும் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

வடக்கில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு புதிய தொழில்நுட்பங்கள் ஊடாக தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு முயற்சித்து வருகின்றோம். தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள், தொழிலாளர்களுக்கு மிகச்சிறந்த சேவையை வழங்கி வருகின்றனர். இந்த சேவை வடக்கிலும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வடக்கில் உள்ள தொழில் திணைக்களங்களில் தமிழ் மொழி பேசும் அலுவலர்கள் மிகக்குறைவாகவே காணப்படுகின்றனர். இந்த தமிழ் பேசும் அலுவலர்களுக்கான 46 வெற்றிடங்கள் காணப்படுகின்றது. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

நாட்டு மக்களிடையே தற்போது நல்ல புரிந்துணர்வு காணப்படுகின்றது. இந்த புரிந்துணர்வு தொடர்ந்தும் நீடித்து அனைவரும் நாட்டினை அபிவிருத்தி பாதையில் கொண்டு செல்ல வேண்டும். அமெரிக்கா, இந்தோனேசியா போன்ற நாடுகள் தொழில் ரீதியாகதான் முன்னேற்றமடைந்துள்ளன.

இந்த முன்னேற்றத்தில் தொழிலாளர்களது நலன்களும் முக்கிய பங்கை வகிக்கின்றன. கடந்த காலங்க ளில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்கிய போதிலும் தனியார் துறையினருக்கு அந்த சம்பள அதிகரிப்பை வழங்க முடியவில்லை. இதற்கான காரணம், தொழில் தருநர்கள் சம்பள அதிகரிப்பை வழங்காமையே ஆகும். தனியார் துறை ஊழியர்களுக்கு அடிப்படை சம்பளமாக கட்டாயம் 12 ஆயிரம் ரூபா வழங்கப்படல் வேண்டும் என்பது சட்டமாகப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## சம்பூர், பலாலி திட்டங்கள்; இந்தியா-இலங்கை பேச்சு!

பலாலி விமான நிலைய அபிவிருத்தி மற்றும் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாக, இந்தியாவும், இலங்கையும் பேச்சுக்களை நடத்தியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 4ஆம், 5ஆம் திகதிகளில், இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொண்டிருந்த இலங்கையின் மூலோபாய அபிவிருத்தி, அனைத்துலக வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தப் பேச்சுக்களின் போது, இருதரப்பு பொருளாதார, வர்த்தக திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்துக் கலந்துரையாடப்பட்டிருந்தது.

குறிப்பாக சம்பூர் அனல் மின் திட்டத்தை செயற்படுத்துதல், காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி மற்றும் பலாலி விமான நிலைய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

இந்த திட்டங்களுக்கான உதவிகளை வழங்க இந்தியா முன்வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



கொள்ளை நோயோ பஞ்சமோ வந்து மக்கள் துயருறும் இடங்களில் எல்லாம் நீங்கள் அனைவரும் சென்று அவர்களின் துன்பங்களைத் தணியுங்கள். மிஞ்சினால் அம்முயற்சியில் இறக்கலாம். அதனால் என்ன? உங்களைப் போல எத்தனைபேர் புழுக்களைப் போல் தினமும் பிறக்கவும் இறக்கவும் செய்கின்றனர்? பரந்த உலகிற்கு அதனால் ஆவதென்ன? இறப்பதோ நிச்சயம். அதனால் இறப்பிற்கும் ஒரு பெரிய குறிக்கோளைக் கொள்க. வாழ்க்கையில் ஒருபெரும் குறிக்கோளைக் கொண்டு இறப்பது மிக நல்லது. வாசல்தோறும் இக் குறிக்கோளைப் பரப்புங்கள். அதனால் நீங்கள் நன்மையடைவதோடு நாட்டுக்கும் நன்மை செய்வீர்கள். நமது நாட்டின் பிற்கால நம்பிக்கைகள் உங்களையே பொறுத்துள்ளன.

ஒன்றும் செய்யாமல் நீங்கள் வாழ்வதைக் காண என் மனம் மிக மிக வருந்துகின்றது. முயற்சியில் ஈடுபடுங்கள். வேலை செய்யுங்கள். தாமதம் வேண்டாம். மரணகாலம் நாளுக்கு நாள் நெருங்கிவருகிறது. பின்னாளில் ஒவ்வொன்றும் உரியகாலத்தில் நடக்கும் என்றெண்ணிச் சோம்பலில் நாளைக் கழிக்காதீர்கள். அந்த வழியால் ஒன்றும் நடைபெறாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ் பிரதேசத்தில மருதனார் மடம், ரொட்டியாலடி, அம்பலவாணர் வீதி, பெரியமதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, மருதனார்மடம் - யாழ் நுண்கலைப்பீடம், சீரணி, சண்டிலிப்பாய், ஆலங்குழாய், கந்தரோடை, அளவெட்டி, மாகியப்பிட்டி, உடுவில், இணுவில் ஒரு பகுதி, உடுவில், சங்குவேலி, மானிப்பாய், பிப்பிலி, கட்டுடை, மாதகல், யம்புகோளப்பட்டினம், குசுமாந்துறை, காட்டுப்புலம், பத்தானை, மாப்பியன், சுதுமலை, கார்கில்ஸ் பூட் சிற்றி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில குமுழமுனை, கரியாலை படுவான், அன்புபுரம், முழங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், ஆனந்தபுரத்திலிருந்து கொக்காவில் வரைக் கும், மத்தியவங்கி, SFHQ இரணைமடு, MAS Active, யுனிச்செலா, பொறியியல் பட்டம், விவசாயபீடம், North Cargill's Agrifoods, 7வது படையணிஇராணுவ முகாம், கிளிநொச்சி இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற் லிமிற்ரட், கொக்காவில் இராணுவ படை முகாம் I, கொக்காவில் இராணுவ படை முகாம் II, கொக்கா வில் இராணுவ படை முகாம் III, றூபவாகினி தொலைத் தொடர்பு கோபுரம், கொக்காவில் இராணுவ முகாம் தொலைத்தொடர்பு கோபுரம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ ஐஸ் தொழிற் சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில கிறிட்டிலிருந்து வவுனியா நகரம், வெளிக்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, பூங்கா வீதி, இலங்கைவங்கி, வவுனியா வைத்தியசாலை, தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி, இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கச்சேரியடி நீர்ப்பாசன சபை, ஓவியா விடுதி, SVR அரிசி ஆலை, ராணி அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# தாஜுடீன் கொலைக்கு நண்பன் காரணமா?

## தொலைபேசி அழைப்புக்களை தீவிரமாக ஆராய்கின்றது குற்றப்புலனாய்வுப் பிரிவு



(கொழும்பு)

பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுடீன் படுகொலை செய்யப்படுவதற்கு அண்மித்த இரவு பொழுதில் அவருடன் இருந்த இரு நண்பர்களில் ஒருவருக்கு உள்வந்த, வெளிச் சென்ற இரு சந்தேகத்துக்குரிய அழைப்புக்கள் குறித்து தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு அறிவித்துள்ளது.

வசீம்தாஜுடீனுடன் குறித்த இரு நண்பர்களும் மது அருந்தியுள்ளதாகவும் இதன்போதே அதல்ஒரு நண்பருக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்துள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து நண்பர்கள் இருவரையும் வசீம் தாஜுடீன் தனது காரில் ஏற்றிக்கொண்டு அவரவர் வீடுகளுக்கு கொணடு போய் விடச் சென்ற போது காருக்குள் வைத்து குறித்த நண்பர் தனது தொலைபேசியில் இருந்து ஒரு இலக்கத்துக்கு வெளிச்செல்லும் அழைப்பொன்றை ஏற்படுத்தியுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது..

இது கொலை தொடர்பில் பாரிய சந்தேகங்களை தோற்றுவிக்கும் நிலையில் அது குறித்து தீவிர விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சர் சி.டப்ளியூ. விக்கிரமசேகர, கொழும்பு மேலதிக நீதவான் நிஸாந்த பீரிஸ் முன்னிலையில் நேற்று முன்தினம் தாக்கல் செய்த வசீம் தாஜுடீன் படுகொலை விவகாரம் தொடர்பலான மேலதிக விசாரணை அறிக்கை ஊடாகவே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

வசீம்தாஜுடீன்படுகொலை விவகாரம் தொடர்பிலான வழக்கு நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு மேலதிக நீதவான் நிஸாந்த பீரிஸ் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. இதன்போது இந்த விவகாரம் தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள நாரஹேன்பிட்டிபொலிஸ நிலையத்தின் முன்னாள் குற்றவியல் பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க பெரேரா, மேல் மாகாணத்துக்கு பொறுப்பான முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேன நாயக்க ஆகியோர் தனித்தனியாக சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

முதலாவது சந்தேக நபர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி அஜித் பத்திரணவும், 2 ஆவது சந்தேக நபர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வாவின் ஆலோசனைக்கு அமைய சிரேஷ்ட சட்டத்தரணி சந்திக பீரிஸும் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர்.

விசாரணையாளர்களான குற்றப் புலனாய்வுப் பிரிவு சார்பில் உதவி பொலிஸ் அத்தியூட்சர் சி.டப்ளியூ விக்கிரமசேகர, மனிதப் படுகொலைகள் தொடர்பிலான விசாரணைப் பிரிவின் சார்ஜன் ரத்னபிரிய ஆகியோர் ஆஜராகியிருந்தனர். அவர்களுடன் அரச சிரேஷ்ட சட்டவாதி டிலான் ரத்நாயக்க மன்றில் ஆஜரானார்.

வழக்கு விசாரணைகள் ஆரம்பமான போது, உதவி பொலிஸ்அத்தியட்சர்சி.டபிள்யு. விக்கிரமசேகர கடந்த 14 நாடகளாக செய்த விசாரணையின் மேலதிக அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பித்தார்.

குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது,

வசீம்தாஜுடீனின் கொலை இடம்பெற்ற காலப்பகுதிக்குரியது என நம்பப்படும் சில சி.சி.ரி.வி. காட்சிப் பதிவுகள் பொலிஸ் கண்காணிப்பு பிரிவின் ஊடாக பெறப்பட்டு அவை தற்போது கனடாவின் தொழில்நுட்ப ஆய்வு கூடமொன்றுக்கு அனுப்புவதற்கான இறுதிக் கட்டத்தில் உள்ளன.

குறித்த ஆய்வு நிலையத்துக்கு அந்த சி.சி.ரி.வி. காட்சிகளை அனுப்புவதற்கான விசா விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதுடன் அதற்கான அத்தனை செலவுக்குமான நிதியும் கிடைத்துள்ளது. எனவே அதனை மிக வுரைவாக ஆய்வுக்கு கனடாவின் குறித்த நிறுவனத்துக்கு அனுப்பவுள்ளோம்.

அத்துடன் வசீம் தாஜுடீன் படுகொலை விவகாரம் தொடர்பில், விசாரணைகளை மூடி மறைத்தாரா? என்ற கோணத்தில் முன்னாள் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு (சி.சி.டி) பணிப்பாளர் அப்போதைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் தற்போது பிரதிப் பொலிஸ்மா அதிபராக பதவி உயர்த்தப்பட்டுள்ளவருமான டி.ஆர்.எல். ரணவீரவிடம் நாம் தீவிர விசாரணைகளை நடத்தியுள்ளோம்.

அதில் ஒரு அங்கமாக அவரை குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைத்து விசாரணை செய்து வாக்கு மூலமும் பதிவு செய்துள்ளோம். அவரது வாக்கு மூலத்தில், தான் குற்றத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளராக இருந்த காலப்பகுதியில் கடந்த 2012.05.18 ஆம் திகதியன்று வேறு ஒரு கடமையின் நிமித்தம் அப்போது மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபராக இருந்த அநுர சேனநாயக்கவை சந்திக்க சென்றதாகவும் இதன்போது பல முக்கிய உயர் பொலிஸ் அதிகாரிகளும் பெயர் தெரியாத சில பொலிஸ் அதிகாரிகளும் அவரது அலுவலகத்தில் கூட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

அந்த கூட்டமானது வசீம் தாஜுடீனின் கொலை தொடர்பிலானது எனவும், தான் அவ்விடத்துக்கு சென்ற போது, அது குறித்த விசாரணையில் தன்னை குறுக்கிட வேண்டாம் எனவும், சி.சி.டி. அவ் விசாரணையில் மூக்கை நுழைக்க வேண்டியதில்லை எனவும் அநுர சேனநாயக்க கூறியதாக அவரின் வாக்கு மூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் அது குறித்த மேலதிக விசாரணைகளை தொடர்கின்றோம்.

கடந்த 2012.05.16 அன்று இரவு, அதாவது வசீம் தாஜுடீன் கொலை செய்யப்பட முன்னரான இரவு வேளையில் அவரும் அவரது இரு நண்பர்களும் சேர்ந்து மது அருந்தியுள்ளனர். இதன்போது அவர்களில் இருந்த இருவரில் ஒரு நண்பருக்கு தொலைபேசிஅழைப்பொன்று வந்துள்ளது. இதனைத் தொடர்ந்து மது அருந்திய பின்னர் அவர்களின் வீடு நோக்கி செல்லும் போது குறத்த உள் வந்த அழைப்பை பெற்ற நண்பர் காருக்குள் வைத்து வெளிச் செல்லும் அழைப்பொன்றை ஏற்படுத்தியுள்ளார். இந்த இரு அழைப்புக்கள் தொடர்பிலும் பாரிய சந்தேகம் உள்ளது. இது குறித்து ஏற்கனவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பலரின் வாக்கு மூலங்களும் இதற்காக பெறப்பட்டுள்ளன. அது குறித்த தீவிர விசாரணைகளும் தொடர்கின்றன.

எனவே தண்டனை சட்டக் கோவையின் 32 ஆவது அத்தியாயத்துடன் இணைத்து பேசப்படும் குற்றவியல் சட்டத்தின் 296, 113 (ஆ) பிரிவுகளின் கீழ் சந்தேக நபர்கள் மீது குற்றச்சாட்டு உள்ளதால் பிணை வழங்கக் கூடாது என கோரப்பட்டிருந்தது.

இதன்போது மன்றில் வாதங்களை முன்வைத்த அரச சிரேஷ்ட சட்டவாதி டிலான் ரத்நாயக்க,

இந்த விவகாரம் குறித்து மிக சூட்சும விசாரணை ஒன்று முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், குற்றச்சாட்டுக்களின் பாரதூரத்தை கருத்தில் கொண்டு பிணை சட்டத்தை ஆராய்ந்து அதன் கீழ் சந்தேக நபர்களுக்கு பிணை வழங்குவதை மன்று மறுக்க வேண்டும் என கோரினார்.

இதனையடுத்து முதலாவது சந்தேக நபரான பொலிஸ் பரிசோதகர் சுமித் சம்பிக்க பெரேரா சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி அஜித் பத்திரண,

தனது சேவை பெறுநர் சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர் என்ற ரீதியில் அவர் தனது உயர் அதிகாரிகளின் கட்டளைகளையே செயற்படுத்தியதாகவும் அதனால் அவருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் 296 இன் கீழ் குற்றம் சுமத்துவதா என சட்டமா அதிபர் அறிவிக்க வேண்டும் எனவும் கோரினார்.

இரண்டாம் சந்தேக நபரின் சட்டத்தரணியும் அநுர சேனநாயக்க தொடர்பில் கடந்த தவணையில் முன்வைக்கப்பட்ட வாதங்களை கருத்தில் கொண்டு பிணை வழங்க கோரினார்.

இலங்கை வைத்திய சபையின் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி முன்னாள் பிரதான சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகரவுக்கு எதிராக இம் மாதம் 23 ஆம் திகதியும் அவரின் உதவியாளர்களான அமரரத்ன, ராஜகுரு ஆகியோருக்கு எதிரான 9 ஆம் திகதியும் விசாரணைகள் இடம்பெறவுள்ளதாக குறிப்பிட்டார்.

இதனையடுத்து நீதவான் நிஸாந்த பீரிஸ் தனது கட்டளைகளை திறந்த மன்றில் அறிவித்தார்.

முதலாவது சந்தேக நபரான பொலிஸ் பரிசோதகர் சுமித் சம்பிக்க பெரேராவின் பிணை கோரிக்கையை பிணை சட்டத்தின் 13 ஆவது அத்தியாயத்தின் கீழ் ஆராய்ந்ததாகவும் அதன்படி அவருக்கு பிணை வழங்கும் அதிகாரம் தமக்கு இல்லை எனவும் அறிவித்த நீதவான் நிஸாந்த பீரிஸ் பிணை வழங்க முடியாது எனவும் மேல் நீதிமன்றை நாடுமாறும் ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் 2 ஆவது சந்தேக நபருக்கு நேற்று முன்தினம் பிணை வழங்க மறுத்த நீதவான் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை கிடைத்ததும் முதலில் கிடைகப பெற்ற மருத்துவ அறிக்கை, அநுரவின் பிரத்தியேக மருத்துவரின் அறிக்கை ஆகியவற்றினை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக அறிவித்தார்.

அதன்படி சந்தேக நபர்கள் இருவரையும் விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான் நிஸாந்த பீரிஸ், வழக்கை மீளவும் இம மாதம் 20 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக அறிவித்தார். (இ-10)

# செய்தித்துளிகள்

## பிக்கு வேடத்தில் இருந்த இராணுவச் சிப்பாய் கைது

பிக்கு வேடமிட்டு போலி மருந்துச் சீட்டினை காண்பித்து பண வசூலில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் பிக்கு போல் உடையணிந்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர் பிக்கு போல் ஆடையணிந்து கொழும்பு கண் வைத்தியசாலைக்கு அருகில் பண வசூலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை கறுவாத் தோட்ட பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் சந்தேக நபரிடமிருந்து 6450 ரூபாய் பணத்தினையும் பொலிஸார் மீட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். (இ-10)

## கல்விசாரா பணியாளர்கள் அடையாள புறக்கணிப்பு

பல்கலைக்கழகங்களின் கல்விசாரா பணியாளர்கள் எதிர்வரும் 13ஆம், 14ஆம் திகதிகளில் அடையாள பணிப்புறக்கணிப்பை நடத்தவுள்ளனர். 7 கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் புறக்கணிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.இது தொடர்பில் உயர்கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகிய வற்றுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக தொழிற்சங்க தலைவர் எட்வேட் மல்வட்டகே தெரிவித்துள்ளார். தமது கோரிக்கை களுக்கு அரசாங்கம் உரிய பதிலை வழங்காமை காரணமாகவே தாம் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-10)

## மசாஜ் செய்ய சென்ற முதியவர் உயிரிழப்பு

மசாஜ் செய்து கொள்வதற்காக மசாஜ் பார்லருக்கு சென்ற முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கண்டி கட்டுகஸ்தோட்டை பகுதியில் அமைந்துள்ள மசாஜ் பார்லர் ஒன்றின் மலசல கூடத்தில் குறித்த முதியவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. அக்குரண பிரதேசத்தைச் சேர்ந்த 64 வயதான வர்த்தகர் ஒருவரே இவ்வாறு நேற்று முன்தினம் மசாஜ் பார்லரில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7-10)

## வருடாந்த விளையாட்டு விழா

Little Master's Montesoori ஆங்கில தமிழ்மொழி மூலமான பாலர் பாடசாலையின் தெல்லிப்பழை பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள Little Master's Montesoori மைதானத்தில் நடைபெறும். தலைவர் கி.சதீஸ்குமார் தலைமையில் நடை பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலயக் கல்வி அலுவலக ஆரம்ப பிள்ளை பருவ அபி விருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கிருபானந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## திருக்குடமுழுக்கு நாளை

யாழ்ப்பாணம் இணுவையம்பதி சைவ நெறிக்கூடம் - சைவ மகா சபை ஞானலிங்கேஸ்வரர் ஆலய தெய்வத் தமிழ் குடமுழுக்கும் ஆன்மீக யாத்திரையும் நாளை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ

## புராதன வாளை வைத்திருந்தவருக்கு 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிப்பு

கண்டி அரச காலத்திற்குரிய புராதன வாள் ஒன்றை தன்வசம் வைத்திருந்த நபருக்கு பதுளை நீதிமன்றம் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது. பதுளை பொலிஸார் சந்தேகநபரை கைது செய்து பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதை அடுத்து. சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

சந்தேகநபர் வைத்திருந்த வாள் கண்டி அரச காலத்திற்குரிய வாள் என ஊவா தொல்பொருள் ஆணையாளர் அலுவலகம் நீதிமன்றத்திற்கு அறிக்கை தாக்கல் செய்திருந்தது. இதனடிப்படையில், வாளை அரசுடைமையாக்குமாறு உத்தரவிட்ட நீதவான் சம்பிக்க ராஜபக்ஷ சந்தேகநபருக்கு அபராதம் விதித்துள்ளார். (இ-7-10)

## தோட்டத் தொழிலாளர்களுக்கு 2500 ரூபாவை வழங்க ஏற்பாடு

தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 2500 ரூபா சம்பள உயர்வை உடனடியாக வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது என நேற்று முன்தினம் சபையில் தொழிலமைச்சர் டபிள்யூ.ஜே.எம். செனவிரட்ன தெரிவித்தார். அதேவேளை கூட்டு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கான அனைத்து முயற்சிகளையும் தொழில் அமைச்சு முன்னெடுக்கும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் தினேஷ் குணவர்த்தன எம்.பியினால் 23 கீழ் இரண்டில் எழுப்பப்பட்ட தோட்டத் தொழிலாளிகளின் 2500 ரூபா சம்பள உயர்வு தொடர்பில் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் ஜோன் செனவிரட்ன இவ்வாறு தெரிவித்தார். (இ-7-10)

# வேலணையில் சட்டவிரோதமாக மதுபானங்கள் விற்கப்படுகிறது!

மதுபானசாலையே இல்லாத ஊரில் சட்டவிரோதமான முறையில் மது விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது. இதனை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேலணை பிரதேச செயலர் சுகுணவதி தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட சிவில் பாதுகாப்புக்குழு கூட்டம் நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேலணை பிரதேசத்தில் மண்டைதீவு மற்றும் நயினாதீவில் பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது. புங்குடுதீவு பகுதியில் பொலிஸ் நிலையம் அமைப்பதற்காக வீடு ஒன்று புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. அங்கு பொலிஸ் நிலையத்தை மிக விரைவில் திறந்து வைக்க வேண்டும். இதன்மூலம் அப்பகுதியில் சட்டம் ஒழுங்கை இலகுவில் ஏற்படுத்திகொள்ள முடியும்.

அத்துடன் வேலணை பிரதேசத்தில் மதுபான சாலையே இல்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்து மதுபானங்களை வாகனங்களில் கொண்டு வந்து வேலணை மேற்கு பகுதி மற்றும் அல்லைப்பிட்டி கடற்கரை பகுதியில் விற்பனை செய்கிறார்கள். மதுபான சாலைகளில் விற்பனை செய்வதை விட இங்கு அதிகமாக விற்பனை செய்கிறார்கள். இதை உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும்.

அத்துடன் பொதுமக்களின் கால்நடைகள இறைச் சிக்காக வெட்டப்படுகின்றன. கால்நடைகளுக்கான பாதுகாப்பையும் பொலிஸார் வழங்க வேண்டும். மேலும் மணல் கடத்தலில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் வெளியே வந்ததும் மறுபடியும் மணல் கடத்தலில் ஈடுபடுகின்றனர்.

இதற்கு பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

அதற்கு வேலணை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி பதிலளிக்கும் போது, மதுபான விற்பனை தொடர்பாக இரகசிய தகவல்களின அடிப்படையில் பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். மது விற்பனை நடவடிக்கை முறியடிக்கப்படும். அத்துடன் பொலிஸாருக்கு விசேட பயிற்சி அளிக்கப்பட்டு மேற்குறித்த மணல் கடத்தல் மற்றும் கால்நடை கடத்தல் போன்ற குற்றச் செயல்களுக்கு உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார். (செ-9)

## மண்டைதீவு வேப்பந்திடலில் நாளை கொடியேற்றம்

(மண்டைதீவு)

மண்டைதீவு வேம்பந்திடல் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இம் மாதம் 18ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 19ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும்.(ந)

## யாழ்.போதனா...

மனுவை விசாரணை செய்தபோதே, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் இந்தத் தடையுத்தரவு கட்டளையைப் பிறப்பித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் சிவநாதன் ஜமுனானந்தாவை மனுதாரராகக் கொண்டு, சட்டத்தரணி திருக்குமரன் இந்த மனுவை அவசர மனுவாக ஏற்று இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் கோரியிருந்தார்.

தாதியர் சங்கத்தினரால் நடத்தப்படுகின்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை நிறுத்துவதற்கு இடைக்கால உத்தரவு கோரிய மனுவில் யாழ்.போதனா வைத்தியசாலையின் தாதியர் சங்கத் தலைவர், செயலாளர் ஆகியோர் முதலாம், இரண்டாம் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

முதலாம் இரண்டாம் எதிர் மனுதாரர்களாகிய தாதியர் சங்கத்தின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட தாதியர் சங்க உறுப்பினர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதால் வைத்தியசாலையில் பல்வேறு பிரிவுகளிலும் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்ற நோயாளர்களுக்கும், சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களுக்கும், அதேநேரத்தில், வைத்தியசாலைக்கும் பாதிப்பு ஏற்படும் நிலை இருப்பதாகக் குறிப்பிட்டு, தாதியர் சங்க வேலை நிறுத்தத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறும், தாதியர் தொடர்ந்தும் கடமையில் ஈடுபட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்க வேண்டும் எனவும் சட்டத்தரணி திருக்குமரன் தனது மனுவில் நீதிமன்றத்திடம் விண்ணப்பித்திருந்தார்.

இந்த விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்த நீதிபதி இளஞ்செழியன், எதிர்வரும் 22 ஆம் திகதி வரையில் 14 நாட்கள் அமுலில் இருக்கும் வகையில் யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர் சங்கத்தினரின் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு இடைக்கால தடையுத்தரவு கட்டளை பிறப்பித்துள்ளார்.

நீதிபதி இளஞ்செழியன் தனது இடைக்கால தடையுத்தரவு கட்டளையில் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் அரசியலமைப்பு சட்டத்தில் உயிர் வாழ்வு சுதந்திரம் பிரகடனப்படுத்தப்படாத போதிலும், உச்ச நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட முன்னைய தீர்ப்புக்களின் மூலம் உயிர் வாழும் சுதந்திரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சர்வதேச சிவில் அரசியல் மனித உரிமைகள் இலங்கை சட்டத்தின் பிரகாரம் சுகாதார உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த இரண்டு சட்டப்பிரிவுகளையும் கவனத்திற்கொண்டு, அவற்றின் அடிப்படையில், யாழ் அரச தாதியர் சங்கம் யாழ் போதனா வைத்தியசாலையில் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தும்போது, நோயாளர்களுக்கும் வெளிநோயாளர் பிரிவுக்கும் அங்கு எற்கெனவே அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கும் உயிர் அச்சுறுத்தல்கள் ஏற்படக் கூடிய சூழ்நிலைகள் காணப்படுகின்றன.

எனவே, அரச தாதியர் சங்கம் உடனடியாக அனைத்து வேலை நிறுத்தப் போராட்டத்தையும் நிறுத்துமாறு இந்த நீதிமன்றம் இடைக்கால தடை கட்டளை பிறப்பிக்கின்றது.

இன்றில் இருந்து 14 நாட்கள் எதுவித வேலை நிறுத்தப் போராட்டத்திலும் ஈடுபடக் கூடாது என தாதியர் சங்கத்தின் தலைவர், செயலாளர் உட்பட்ட தாதியர் சங்கத்திற்கு இந்த நீதிமன்றம் இடைக்காலத் தடை கட்டளை பிறப்பிக்கின்றது.

இந்த இடைக்காலத் தடை கட்டளை எதிர்வரும் 22.07.2016ஆம் திகதி வரை அமுலில் இருக்கும். அதேநேரம் யாழ்.போதனா வைத்தியசாலை அரச தாதியர் சங்கத்தின் தலைவர், செயலாளர், வைத்தியசாலை பணிப்பாளர் ஆகியோரை எதிர்வரும் 21.07.2016 அன்று மன்றில் ஆஜராகுமாறு இந்த நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பிக்கின்றது.

அதேநேரம், 21.07.2016ஆம் திகதியன்று அரச தாதியர் சங்கத்தினர் தமது ஆட்சேபணை மனு தாக்கல் செய்வதற்கும் அரச தாதியர் சங்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்குரிய நியாயமான கோரிக்கைகளை முன்வைப்பதற்கும் நீதிமன்றத்தினால் சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது என நீதிபதி தனது இடைக்கால தடை உத்தரவு கட்டளையில் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு கட்டளையை யாழ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுடன் யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று வேலை நிறுத்தப் போராட்ட உறுப்பி னர்கள் முன்னிலையில் நீதிமன்றத்தின் கட்டளையை வாசித்துக் காட்டி, தாதியர் சங்க த்தின் தலைவர் மற்றும் செயலாளருக்கு கட்டளையின் பிரதிகளை நேரடியாகக் கைய ளித்து, அவர்களின் கையெழுத்தைப் பெற்று நீதிமன்றத்திற்கு உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த உத்தரவுக்கமைவாக நீதிமன்றத்தின் இடைக்கால தடை உத்தரவு கட்டளையை வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட அரச தாதியர் சங்கத்தினருக்கு, நீதிமன்றப் பதிவாளர் நேரடியாகச் சென்று கையளித்ததுடன், அது குறித்து நீதிமன்றத்திற்கும் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இதனையடுத்து நீதிமன்ற உத்தரவிற்கு மதிப்பளிப்பதாக தெரிவித்த அரச தாதி உத்தியோகத்தர் சங்கம் தமது பணிப்புறக்கணிப்பினை முற்பகல் 11.30 மணிக்கு கை விடுவதாக அறிவித்தது. (செ-9)

## பொருளாதார...

தற்காக மத்திய அரசினால் பல மில்லியன் ரூபா வடக்கு மாகாணத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இந் நிலையத்தை அமைப்பதற்கு மத்திய அமைச்சர்களான ரிசாத் பதியுதீன், ஹரிசன் ஆகியோரினால்,

மாங்குளத்தில் இடமொன்றும் தெரிவு செய்யப்பட்டு அங்கு அமைக்குமாறும் வடக்கு மாகாண சபைக்கு கூறப்பட்டது. எனினும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான வடக்கு மாகாண சபை குறித்த இரு மத்திய அமைச்சர்களும் தெரிவு செய்த இடம் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு ஏற்றதல்ல எனவும் அது ஓமந்தையிலேயே அமைவது சிறந்தது எனவும் கூறப்பட்டது.

எனினும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் மற்றும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் வடக்கு முதலமைச்சரின் இந்த ஆலோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்து, மாங்குளத்தில் அமைப்பதே சிறந்தது எனவும் அல்லது அதனை அண்டிய இடத்தில் அமைப்பதே சிறந்தது எனவும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

பொருளாதார மத்திய நிலையம் எங்கு அமைவது என்ற இந்த குழப்பத்தினால், திட்டம் கைவிட்டு செல்லும் நிலையும் ஒரு கட்டத்தில் ஏற்பட்டிருந்தது. பின்னர் ஜனாதிபதி, அமைச்சர் ஹரிசன் ஆகியோருடனான சந்திப்பின் போது முதலமைச்சர் குறித்த திட்டம் திரும்பி செல்லாது என்பதனை உறுதிப்படுத்தினார். பொருளாதார மத்திய நிலையம் எங்கு அமைப்பது என்பது தொடர்பிலான இழுபறி தொடர,

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்களும் இரு அணியினராக நின்று மோத தொடங்கினர். எனினும் இது தொடர்பான முடிவினை வடக்கு முதல்வரே எடுப்பார் என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அறிவித்திருந்த நிலையில், இது தொடர்பில் ஆராய்வதற்கு கொழும்பில் இரண்டாவது தடவையாக நேற்றைய தினம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கூடியது,

இதன்போது ஓமந்தையில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு காணி இல்லை என ஆரம்பம் முதலே கூறப்பட்டு வந்தமை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. எனினும் ஓமந்தையில் பதினெட்டு ஏக்கர் அரச காணி இருப்பது கண்டறியப்பட்டு, அங்கு அமைக்கலாம் என ஆலோசனை வழங்கப்பட்டது.

இந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் உயர்மட்ட குழு இன்றைய தினம் குறித்த காணியை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தலைமையில், குறித்த பிரதேசத்தை சேர்ந்த மாகாண, பாராளுமன்ற உறுப்பினர்கள் சென்று பார்வையிடுவது எனவும், அதன் பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கின் மத்திய இடமாக உள்ள ஓமந்தையிலேயே பொருளாதார மத்திய நிலையம் அமைப்பது சிறந்தது எனவும் தமிழ் மக்கள் பேரவையும், துறைசார்ந்த வல்லுநர்களும் சுட்டிக்காட்டியுள்ள நிலையில் மேற்படி முடிவு இறுதி முடிவாக எடுக்கப்படும் என உறுதியாக நம்பமுடிகிறது. (செ-4,9)

## கலப்பு நீதிமன்றம்...

பக்ஷ நாடாளுமன்றத்தில் நேற்று இந்த விளக்கத்தை அளித்தார்.

சர்வதேச நீதிபதிகள், கலப்பு நீதிமன்றத்தில் பங்கேற்க வேண்டும் என்ற ஐக்கிய நாடுகளின் பேரவையின் யோசனை இலங்கையின் நீதித்துறைக்கு ஏற்புடையதல்ல.

அத்துடன், இலங்கையின் இறையாண்மை மற்றும் பொதுமக்களின் கருத்துக்களின் அடிப்படையில் அதனை நடைமுறைப்படுத்த முடியாது என இலங்கை அரசாங்கத்தினால், ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவைக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பேரவை கலப்பு என்ற சொல்பதத்தை விடுத்து வெளிநாட்டு நிபுணர்களின் பங்களிப்புடனான பொறிமுறை என்ற விடயத்தில் சேர்த்துள்ளது.

இதற்கு அப்பால் எந்த விடயத்தையும் ஐக்கிய நாடுகளின் பேரவை இலங்கையிடம் வலியுறுத்தவில்லை.

எனினும், சில வெளிநாடுகளும் அமைப்புகளுமே சர்வதேச நீதிபதிகள் இந்த பொறிமுறைக்கு உள்வாங்கப்பட வேண்டும் என கருத்துக்களை வெளியிட்டு வருவதாக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். (செ-11)

## பேருந்து-மோ.சைக்கிள்...

நேற்று வெள்ளிக்கிழமை இரவு 7.15 மணியளவில் இ.போ.ச பேருந்து மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியன விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் சிங்கைநகர் புலோலி தெற்கைச் சேர்ந்த மினிஸ்வரன் விஜிதரன் (வயது 26) என்ற இளைஞரே பலியானவராவார்.

சிங்கை நகரில், உள்ள தனது வீட்டில் இருந்து பருத்தித்துறை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இவர், யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு சென்று கொண்டிருந்த இ.போ.சபைக்கு சொந்தமான பஸ் வண்டியுடன் மோதுண்ட வேளை விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இதில் அவ் இளைஞர் இ.போ.ச பஸ் வண்டியின் பின் சக்கரங்களுக்குள் நசியுண்டுள்ளார். இதனையடுத்து படுகாயங்களுடன் அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து செல்லும் வழியில் உயிரிழந்ததாக தெரியவருகிறது.

இவர் வெளிநாடு ஒன்றில் வேலை புரிந்ததாகவும் அண்மையில் தமது ஊருக்கு வந்ததாகவும் அறிய முடிகிறது.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (செ-60)

## சர்வதேச...

கடந்த யுத்த காலத்தில் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் எமக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் செய்வதற்கு வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டு வருவதற்கும் அல்லது வெளிநாட்டு யுத்த நீதிமன்றங்களை எந்தவொரு இடத்திலும் எந்த வகையிலும் அமைப்பதற்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டாலும் தாம் ஜனாதிபதியாக பதவி வகிக்கும்வரை அதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் பாணந்துறை நகரசபை விளையாட்டரங்கில் இடம்பெற்ற ஸ்ரீ ராமான்ய மகா நிக்காயாவின் முக்கிய சமய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது நாட்டின் சுதந்திரத்துக்கும் ஆட்புல எல்லை ஒருமைப்பாட்டுக்கும் சவாலாக அமையும் வகையில் அமையும் எந்தவொரு தேசிய அல்லது சர்வதேச நடவடிக்கைக்கும் இடமளிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்த ஜனாதிபதி, தாய் நாட்டின் சுதந்திரத்திற்காக பின்நிற்கப் போவதில்லை என மகா சங்கத்தினர் முன்னிலையில் உறு தியளித்தார்.

அரசியல் யாப்பில் பௌத்த சமயத்திற்கு உரிய இடத்தை மேலும் பலப்படுத்துவதற்கும் வளப்படுத்துவதற்கும் அர்ப்பணிப்புடன் உள்ளதாக ஜனாதிபதி மகா சங்கத்தினர் முன்னிலையில் உறுதியளித்தார்.

தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட நாட்டின் எல்லா நடவடிக்கைகளிலும் மகா சங்கத்தினரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் செயற்படுவதே தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, ஒரு பௌத்தர் என்ற வகையிலும் அரச தலைவர் என்றவகையிலும் நாட்டின் கீர்த்திமிகு வரலாற்றிற்கு மதிப்பளித்து இலங்கைச் சமூகத்தை பாதுகாக்க அர்ப்பணிப்புடன உள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (செ-11)

## சிறுவர், பெண்கள்...

யாழ் மாவட்டத்தில் குற்றச் செய ல்களை கட்டுப்படுத்தவும் சிறுவர் மற்றும் பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்து கொள்வதற்காகவும் எதிர்வரும் 2 மாதங்களுக்குள் ஆயிரத்து 500 பொலிஸார் நியமிக்கப்படவுள்ளதாக யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லெஸ் தெரிவித்துள்ளார்.

விசேட விதமாக யாழ் மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் நேற்றைய தினம் யாழ் மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. அதில் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் கௌதமன் சிறுவர் பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் பற்றி தெரிவிக்கும் போதே சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்குறித்த உத்தியோகத்தர் மேலும் கருத்து தெரிவிக்கையில், நல்லாட்சியில் பொதுமக்கள் பல்வேறு வகையான முறைப்பாடுகளை நேரிலும் கடிதம் மூலமும் அனுப்பிய வண்ணம் உள்ளனர். அரச அதிகாரிகளாக எமது அதிகாரங்களுக்குட்பட்ட நடவடிக்கைகளை நாம் எடுத்தவண்ணம் உள்ளோம். ஆனால் எம்மால் இயலாத செயற்பாடுகளை மீள வலியுறுத்தும் போது அதற்குரிய நடவடிக்கைகளை பொலிஸார் எடுக்காமல் இருக்கும் போது பொதுமக்கள் நம்பிக்கை இழந்து போகிறார்கள்.

குறிப்பாக யாழ் நகரை அண்டிய சில பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்கு முன்பாக உள்ள உணவகங்களில் குறிப்பாக 21 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு புகைத்தல் மற்றும் போதைப்பொருட்கள் தொடர்ச்சியாக விற்பனை செய்யப்பட்டு வருவதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை.

அத்துடன் எமது மாவட்டத்தில் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகளவாக பதிவாகின்றன. பண்ணையில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்காக பிரத்தியேகமான பொலிஸ் நிலையம் ஒன்று அமைந்துள்ளது. அங்கு பௌதிக வளங்கள் உள்ள போதும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. வாகன வசதிகளும் குறைவாக உள்ள காரணத்தால் பாலியல் துஷ்பிரயோக சம்பவம் தொடர்பான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுப்பதில் சிரமமாக உள்ளது என அங்கு கடமை புரிபவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே பெண்கள் சிறுவர்களுக்கான பிரத்தியேக பொலிஸ் நிலையம் இயங்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் கோரியிருந்ததார். அதற்கு தற்போது பயிற்சியில் உள்ள ஆயிரத்து 500 பொலிஸார் 2 மாதங்களில் இங்கு நியமிக்கப்படவுள்ளனர்.

அதன் மூலம் இலகுவாக மேற்குறித்த பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியும் என பொலிஸ் அத்தியட்சகர் பதிலளித்தார். (செ-9)

## நிழல் அமைச்சரவை...

ட்ட பாராளுமன்ற உறுப்பினர், வற் அசுரனை விட கடன் அசுரன் சக்தி வாய்ந்தது எனவும் கடன் அசுரனாலேயே வற் அசுரன் தோன்றியதாகவும் குறிப்பிட்டார்.

இதற்குக் காரணம் மகிந்த ராஜபக்ஷவின ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பண விரயமே எனவும் அவர் கூறியுள்ளார்.

ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் நஷ்டம், முன்னாள் ஜனாதிபதியின் செலவு, எயார் பஸ் கொள்வனவு, நாமல், ஷிராந்தி, விமலில் விமானப் பயணங்கள், பல்வேறு ஊழல் மோசடிகள் போன்றவற்றால், மக்கள் மீது குறித்த சுமை ஏற்பட்டுள்ளதாகவும் அஜித் மான்னப்பெரும மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த ஊழல் மோசடிகள் தற்போதைய அரசாங்கத்தால் முற்றிலும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## காய்ச்சல் பீடிப்புக்...

கைச் சேர்ந்த சந்திரகாந்தன் பிரஞ்சிகா (வயது-10) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

சிறுமிக்கு காய்ச்சல் ஏற்பட்டதை அடுத்து அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சையளிப்பதற்காக பெற்றோர் அழைத்து வந்த சமயம் அவர் வெளிநோயாளர் பிரிவு வாசலிலேயே உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (செ-60)

## "இராணுவத்தினர்...

என்ற பெண் தெரிவித்தார்.

திருகோணமலை கிளிவெட்டி குமாரபுரத்தில் பொதுமக்கள் 26 பேர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வரும் வழக்கு விசாரணையில், நேற்று ஒன்பதாவது நாளாகவும் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டன.

நேற்றைய சாட்சி விசாரணைகளில் நான்கு பேர் சாட்சியங்களை வழங்கினர்.

இங்கு மேலும் சாட்சியமளித்த ஜேசுதாசன லெட்சுமி,

"நான் எமது கிராமத்தில் உள்ள காளிமுத்து என்பவரின் கடைக்கு வெங்காயம் வாங்குவதற்காக சென்றேன். அங்கு மேலும் பலர் நின்று கொண்டிருந்தனர். இராணுவத்தினர் துப்பாக்கி சூடு மேற்கொள்வதை கண்ட பலரும் கடைக்குள் புகுந்து கொண்டனர். நானும் கடைக்குள் புகுந்தேன்.

இதன்போது கடைக்குள் இருந்த பலரையும் இராணுவத்தினர் சுட்டார்கள். அங்குவந்த இராணுவ வீரர்களில் ஒருவரான குமார என்பவர் கடைக்குள் இருந்த என்னை கையால அசைத்து கூப்பிட்டார். நான் அவரிடம் சென்றபோது என்னை தப்பி ஓடுமாறு கூறினார். இதனால்தான் வெடிகாயத்துடன் நான் தப்பித்தேன். அவரைத் தவிர ஏனையவர்கள் துப்பாக்கி சூட்டை நடத்தினார்கள். அதில் பலர் கொல்லப்பட்டார்கள். சிலர் காயப்பட்டார்கள் என்றார்.

இராசையா நாகேஸ்வரி (66) என்பவர் சாட்சியமளிக்கையில், "நான் வீதியால் சென்று கொண்டிருக்கையில் அவ்வீதியால் வந்த முஸ்லிம் நபர்கள் இராணுவத்தினர் துப்பாக்கி சூடு நடத்துகின்றனர் என கூறியபடி ஓடிச் சென்றனர். நான் உடனே அருகில் இருந்த அழகுதுரை லெட்சுமி என்பவரது வீட்டிற்குள் புகுந்தேன். அங்கு வந்த இராணுவத்தினர் சுட்டனர். இதில் லெட்சுமி சுடப்பட்டு இறந்தார். அதனை நான் நேரில் கண்டேன். நான பதற்றமடைந்தமையால் சுட்டவர் யாரென்று அடையாளம் தெரியவில்லை. எனக்கும் இச் சம்பவத்தில் காயம் ஏற்பட்டது என்றார். (செ-11)


ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
பிரெஞ்சு மொழி
உடன் பதிவு செய்யுங்கள், அல்லது இந்த நம்பரை உங்கள் மொபைலில் சேமியுங்கள் !!
☎ 021 222 8093
61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

Dutch, Deutsch, French
தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றது.
- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழி கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
அனைத்து புதிய வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன ******
Vivekananda Academy
221/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0213216928, 077 4842 464
(Gov. Reg: W/A 76795)
(C-5143)

கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஓர் நற்செய்தி!

உங்கள் ரி.சி.ரியில் நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட எதிர்கால செல்வங்களின் ஆரோக்கியத்திற்கான உணவு விநியோகமும் இன்று தொடக்கம் ஆரம்பம்
(09.07.2016 -21.07.2016)
உங்கள் 2000 ரூபா உணவு முத்திரைக்கு தரமானதும் மலிவானதும் சுகாதாரமானதுமான உணவுகளை சத்துஉணவு ஆலோசகரின் அறிவுறுத்தலுக்கமைய ஒரே கூரையின் கீழ் சுயதெரிவு முறையில் பெற்றுக்கொள்ளலாம்.
ரி.சி.ரியில் உங்கள் உணவுப்பொருட்களை பெற்றுக்கொள்வதன் மூலம்
1. உடனடி அன்பளிப்புக்களை பெற்றுக்கொள்ளலாம்.
2. தொடர்ச்சியாக 8 மாத கொள்வனவை மேற்கொள்ளும் தாய்மார்களுக்கு இறுதியில் 500ரூபா பெறுமதியான அன்பளிப்பு கூப்பன் வழங்கப்படும்.
சிந்தியுங்கள் செயற்படுங்கள் எதிர்கால சந்ததியினரை மேம்படுத்துங்கள்.
T.C.T Multi Trade Centre, No: 527, Navalar Road, Nallur, Jaffna.
"அறப்பணியே முதற்பணி"
T.P. 021 745 1895

நல்லூரில் அறை வாடகைக்கு தேவை
நல்லூர் ஆலய சுற்றாடலில், கொழும்பில் இருந்து வருகைதரும் உத்தியோகத்தர்களுக்கு ஓகஸ்ட் மாதம் அறை ஒன்று வாடகைக்குத் தேவைப்படுகிறது. வாடகைக்குக் கொடுக்க விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்
077 611 4068
077 204 6284

வீட்டுப்பணிப் பெண் தேவை
தங்கி நின்று வேலை செய்யக்கூடிய வீட்டுப்பணிப் பெண் தேவை. சாப்பாடு, தங்குமிடம் இலவசம்
இடம் வல்வெட்டித்துறை
தொடர்புகளுக்கு -
0775995659
0773916047

DEUTSCH வகுப்புக்கள்
மாலுசந்தி, யாழ்ப்பாணம், சாவகச்சேரி கிளிநொச்சி ஆகிய இடங்களில் கற்பிக்கப்படும்.
தொடர்புக்கு : T. நந்தன் 077 078 2022
(சி-4884)

G.C.E. A/L - 2016
இலங்கையின் முதற்தர வணிக ஆசிரியர் யாழ் மண்ணில் !!!
Business Studies
Final Seminar
S.Mayuran (BBA,Hons,PGDE,MBS,MED SLPS)
(இலங்கையின் பிரபல வணிக நூல், வணிக ஆசிரியர்)
காலம் :- July 11th நேரம் :- 8.30 A.m - 5.30 Pm
முதலீடு :- Rs 500/- (Tutes Refreshment உட்பட)
Veerasingam Hall
No.12, KKS Road, Jaffna.
Tel : 077 8446254 / 077 6027167

யாழில் புதிய பிரிவு
கையடக்க தொலைப்பேசி திருத்தும் பாடநெறி
Mobile Phone Repairing Course
JULY 12 (சனிக்கிழமை)
காலை 9.00 மணி முதல் 12, 13, 14, 15 ஆகிய நான்கு தினங்களிள்
Smart Phone கள் உற்பட அனைத்து Phone களும் பயிற்சியளிக்கப்படும்
10 மாணவர்களுக்கான அனுமதி மட்டுமே உள்ளதால். ஆசன முன்பதிவு செய்யவும்.
2000 மாணவர்களுக்கு மேல் பயிற்சியழித்த முதல்தர ஆசிரியர்
Ganesh Sir
பெறுமதியான Certificate வழங்கப்படும்
மாதம் 50,000 முதல் 100,000 இக்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு
ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
தனிப்பட்ட கவனிப்பு.
சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.
இலவசமாக இரகசியங்கள் அடங்கிய CD கையேடு வழங்கப்படும்.
ஆண் பெண் இருபாலாருக்கும் வயதெல்லை இல்லை ஆரம்ப அறிவு ஆங்கிலம் தேவையற்றது
ஆசன முன் பதிவுக் கட்டணம் 2500/-
பாடநெறி கட்டணம் 10,000/-
குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்கும் தேவையான அனைத்து தகவல்களும்.
SOFTVIEW IT & COMPUTER ACADEMY
No. 221, Kandy Road, Jaffna.
(சிலோன் பெந்தகொஸ்டல் மிஷன் அருகில்)
0777 475 783 (5140)

Yarl Aid
மாணவர்களின் கல்வி மேம்பாட்டு செயற்றிட்டத்தின் கீழ்
ஈழத்தின் பிரபல பொருளியல் பேராசானும் பேராதனைப் பல்கலைக்கழகம் பொருளியல் துறை, முன்னாள் விரிவுரையாளருமாகிய
தமிழ்த்தேசிய புலமையாளன்
அமரர் S.வரதராஜன் இன்
A/L - 2016 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான
பொருளியல் பரீட்சை வழிகாட்டி
முழுப்பாடப்பரப்பையும் உள்ளடக்கிய இலவசக் கையேடு
வெளியீடு:
VMI VARATHARAJAN MEMORIAL INSTITUTE
பெற்றுக் கொள்ளும் இடம்
தாயகம் டிஜிற்றல்
-யாழ்.பல்கலைக்கழகம் அருகில்-
021 3200 644
"இவ்வுலகில் வாழ்ந்ததற்கான தடயங்கள் எதையும் விட்டுச்செல்லாத வாழ்க்கை வாழ்க்கையே அல்ல"
(5171)

காணி விற்பனைக்கு
ஓட்டுமடம் சந்தியில் இருந்து அராலி வீதிக்கு செல்லும் றோட்டில் கல்லுண்டாய் வைரவர் கோவிலில் இருந்து 200M தூரத்தில் 46 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :-
077 443 4501

சிறுவர்களுக்கான கணனி கற்கை நெறி, AUTO Cad ஆகியவற்றுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
காலம் :- 10.07.2016 ஞாயிறு காலை 9 மணிக்கு
ACS Technology System
1ம் கட்டைச் சந்தி, பருத்தித்துறை.
078 3035 181


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.